ஓம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம:

2243

பக்தியோகம்

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

அருளியது

1245

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,
4/34, கவிஞியப்ப நாயக்கன் வீதி,
டவுன் (P. O.), சென்னை.

1926

009510

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்.

ஓம்

ஸ்ரீ ராமகிருஷ்ணாய நம:

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

அருளிச்செய்த

பக்தி யோகம்.

இஃது

ப்ரஹ்மஸ்ரீ ஆர். நாராயணஸ்வாமி ஐயர்

இயற்றியது.

பதிப்பாசிரியர்:—

கை. பாலசுந்தரம், தலைவர்,

(மஹான் கை. இரத்தின செட்டியார் பௌத்திரன்)

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,

நெ. 4/34, நயினியப்ப நாயக்கன் வீதி,

பார்க் டவுன் (P. O.), சென்னை.

1926

Registered Copy Right.] [*All Rights Reserved.*

ஓம்

பக்தியோகத்தின் விஷய அட்டவணை

அதிகாரம்	விஷயம்	பக்கம்
	முகவுரை	௧
	[௧-ம் பாகம்]	
௧	பக்தி என்பதென்ன?	௫
௨	ஈசுவரன் யார்?	௧௩
௩	ஆத்மானுபவமே லட்சியம் ...	௨௨
௪	குரு சிஷ்ய லட்சணங்கள் ...	௨௬
௫	அவதார புருஷர்கள்	௩௯
௬	'ஓம்' என்ற மந்திரமும், அதன் உட்பொருளும்	௪௫
௭	விக்கிரகாராதனையும், மற்றுமுள்ள பாவனைகளும்	௫௧
௮	குறிப்பிட்ட லட்சியங்கள் ...	௫௬
௯	வழியும், சாதனப் பொருள்களும் ...	௬௧
	[௨-ம் பாகம்]	
௧	ஆரம்ப சாதனமாகிய தியாகம் ...	௭௦
௨	உயர்ந்த அன்பின் மூலமாகவே தியாகம் ஏற்படுகிறது	௭௫
௩	பக்தியோகத்தின் முக்கிய தத்துவம் ...	௮௨
௪	பக்தனது பல நிலைகள்... ...	௮௬
௫	ஜகத்தினிடம் செலுத்தப்படும் அன்பும், தன்னல மறுப்பும்	௯௦
௬	அன்பும் ஞானமும் ஒன்றே ...	௯௭
௭	பக்தியின் மூன்று அம்சங்களும் கடவுளும் ...	௧௦௦
௮	அன்பின் சொரூபமே கடவுள் ...	௧௦௮
௯	பக்தி என்ற திவ்ய லட்சியத்தின் சில பிரதிகள்	௧௧௨
௧௦	ஏகத்துவமே முடிவு	௧௨௩

ஓம்

முகவுரை

உலகமெங்கும் வேதாந்த மதத்தைப் பரவச்செய்து மற்றவரால் முடிக்க முடியாத காரியத்தைத் தாமே துவக்கிச் சில வருஷங்களில் பல நூற்றுண்டுகளில் செய்து முடிக்க வேண்டிய வேலையைச் செய்து முடித்த தேசபக்த உத்தமரான ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தரது அமுத மொழிகள் காதுக்குக் கேட்கக் கேட்கத் தெவிட்டாது என்று சொல்லவும் வேண்டுமோ? இப்படிப்பட்ட மகா புருஷனுடைய வாக்குகளில் பல அச்சிற்கே வாராமற் போயின;'இனியும் வரமாட்டா' என்று கேட்கும்போது மெய்யன்பு கொண்டவர்கள் பெருந் துக்க மடைகிறார்கள். ஆனால், கிடைத்திருக்கும் வரையில் ஸ்வாமிகளின் சரித்திரமும் அவரது அமுதமொழிகளும் அவரது வாழ்க்கைப்பயன் இவ்வளவென்று நமக்குப் போதிக்கப் போதுமானவைகளே. ஆனால், கிடைத்தவரையில் உள்ள உபந்யாசங்களும் பலவித பதிப்புக்களில் வித்தியாசங்களை அடைந்துவந்திருப்பது வருந்தத்தக்கதாகும். ஆங்கில நண்பராகிய குட்வின் என்ற ஒரு சிறந்த விவேகாநந்த பக்தர் ஸ்வாமிகளின் அமுதமொழிகளைக் கூடிய வரையில் வெளியிட்டதற்கு உலக முழுமையும் அவருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

நிற்க, இப்போது நாம் எழுதியுள்ள பக்தியோக உபந்யாசங்களை ஸ்வாமிகள் பெரும்பாலும் அமெரிகாவில் செய்து வந்தார். மற்றும் சில, ஸ்வாமிகளால் எழுதப்பட்ட வியாசங்களாகும். இவற்றைக் கூடியவரையில் கருத்துக் கெடாத

படி தமிழில் மொழி பெயர்த்திருக்கிறோம். வாசகங்களும் கருத்தும் ஸ்வாமிகளுடைய மொழிகளில் அடங்கியவை யென்று நிச்சயமாக நம்பலாம்.

விவேகாநந்த ஸ்வாமிகள் அத்வைத மதத்தையே மிக உன்னதமான தத்துவமென்று கருதுகிறவர் என்பது பிரசித்தம். அத்வைத தத்துவத்தை யனுசரிப்பவர் ஞான யோகி களாவார். இவ்வித நிலையிலிருப்பவர் பக்தியே பிரதானமாகத் தம் வாழ்க்கையைக்கழித்த பரமஹம்ஸ ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரிடம் எவ்வாறு பிரதம சிஷ்யராயமர்ந்தாரென்பது பலருக்கு ஆச்சர்யமாகும். இந்த ஆச்சர்ய விஷயம் ஸ்வாமிகளது வாழ்க்கையை அறிய முயற்சி செய்பவர்களுக்குச் சிறிது தெளிவாகத் தெரியவரும். ஞானயோக பாகங்களை விஸ்தாரமான பிரசங்களால் விளக்கிக் காட்டிய ஸ்வாமிகள் பக்தியோகத்தைப்பற்றியும் பலர் வேண்டுகோளுக்கிணங்கிச் சில உபந்யாசங்கள் செய்தார். ஸ்வாமிகளின் பக்தியோக உபந்யாசங்களிலும் அத்வைத உண்மையே சிறந்து விளங்குவது கவனிக்கத்தக்க விஷயம். "கடவுளின் சாட்சாத்காரம், நீயும் நானும் ஏகம், ஏகமேவப்ரஹ்மம், நானென்ற தனிப்பட்ட வஸ்து கிடையாது என்ற உண்மைகளை அனுபவத்திற்குக் கொண்டுவருவதற்குப் பல மார்க்கங்கள் உண்டு" என்றும், "அவற்றுள் பக்தியும் ஒன்று" என்றும் ஸ்வாமிகள் தெரிவித்துக்கொண்டு வருகிறார். இதே உண்மை அவரது எல்லா உபந்யாசங்களிலும் உட்பொருளாகக் காணப்படுகிறது. பக்தனது மனோபாவனையில் கடவுள் வேறு, தான் வேறு என்று தோன்றுகிறதே இல்லை. தன்னைப்பற்றிய எண்ணமே பக்தனுக்கு மறைந்துபோகிறது. எங்கும் அவனே; என்னுள்ளும் அவனே என்பது பக்தனது மதம்.

எங்கும் உள்ள பிரம்மன் நானே. ஆத்மசொரூப சகலமும் என்று அனுபவிப்பது ஞானமார்க்கத்தை அப்பியசிப்பவனது மதம். சொல்பேதமே யன்றி வஸ்துபேத மில்லை. இதைத்தான் ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகள் வெகு அழகாக, சொற்சாதுரியமும் பொருட்சுவையும் நிறைத்து விளக்கி வருகிறார். மேலும் பக்தியோகத்தைப்பற்றி எடுக்கும்போது அன்பின் முதிர்ச்சியே பக்தி என்ற கருத்தை மறக்கலாகாது. சாமான்ய உலக விஷயங்களில் காதல் என்று சொல்லப்படுவது எதுவோ அதுவே எல்லையில்லாமல் விரிவடைந்து செல்லும்போது அன்பு என்று ரூபந்தாங்கி முடிவில் பக்தியாகிறது. மேனாட்டவர்களுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்தவேண்டியதற்காக ஸ்வாமிகள் இந்தப் பலபடிகளுக்கும் பொதுவாக அவர்களுக்கு விளங்கக்கூடிய பாஷையில் அன்பு என்ற ஒரு பதத்தையே பிரயோகம் செய்து வருகிறார். சாமான்ய ஜனங்களால் உபயோகிக்கப்படும் அன்பு என்ற மொழியை எடுத்துக்கொண்டு இதன் பொருளிலிருந்து உலகப்பற்று சம்பந்தத்தை யெல்லாம் படிப்படியாகப் போக்கி, முடிவில் பரிசுத்தமாகச் செய்யும்போது பக்தி வேறு அன்பு வேறு என்று கேட்போர்களும் நினைக்க முடியாது. இவ்வித பெருமை இந்த பக்தியோக உபந்யாசங்களில் வெளியாவதை எவரும் காணலாம்.

R. நாராயணஸ்வாமி ஐயர்.

வால்மீகி மகரிஷி அருளிச்செய்த

ஆநந்த ராமாயணம்

கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு 13 ஆப்டோன் படங்களுடன்
தங்கக்கிலிட்டுப் பெயருடன் விலை ரூபா 6.

இந்நூல் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஒரு சிறந்த கிரந்தமாகும். இதில் வால்மீகி ராமாயணத்தி லில்லாத அநேக விஷயங்களும், ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தி லுள்ள விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. 1-ஸார காண்டம், 2-யாத்திரா காண்டம், 3-யாக காண்டம், 4-விலாஸ காண்டம், 5-ஜன்ம காண்டம், 6-விவாக காண்டம், 7-இராஜ்ய காண்டம், 8-மனோகர காண்டம் 9-பூர்ண காண்டம், என ஒன்பது காண்டங்கள் அடங்கியிருக்கின்றன. ஒன்பது காண்டங்களுக்கும் 109 சருக்கங்களும், 12252 கிரந்தத் தொகையைக் கொண்டவைகள்.

இந்த நூல் படிக்குந்தோறும், அல்லது கேட்குந்தோறும், அல்லது நினைக்குந்தோறும் ஆநந்தம் விளைவிக்குங் காரணத்தால் ஆநந்தராமாயணம் என்னும் பெயர்கொண்டு விளங்குவதாயிற்று. இதில் இலட்சுமணசக்தி, சரசேது பந்தனம், ஸ்ரீராம ரக்ஷையின் மகிமை, குசலவர்களின் பராக்ரமம், பாபங்களின் பிராயச்சித்தம், ஸ்ரீராமநாமமகிமை, ஸ்ரீராமநாமத்தை ஜபிக்கு முறைமை, இவை போல்வன இதில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அன்றியும், சீதாதேவியின் பாதிவ்ருத்திய ஸ்ரீராமமகிமையும், ஸ்ரீராமபிரானின் ஏகபத்நீ விரத மகிமையும், இதில் வெகு நன்றாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாதலால், ஸ்ரீராமபிரானுடைய துதி, கவசம், சீதாதேவியின் துதி, கவசம், ஸ்ரீராமாஷ்டோத்தரம், மகாவிஷ்ணு ஸ்தோத்தரம் முதலியவைகளெல்லாம் கிரந்தபாஷையில் போடப் பெற்று அதற்குச் சரியான தமிழ் மொழிபெயர்ப்புடன் இதில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்த ராமாயணத்தை பாராயணஞ் செய்கிறவர்கள் இதிலிருக்கும் துதிகளைப் பாடிப் பகவானைத் துதிக்கலாம்.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,
நெ. 4|34, நயினியப்ப நாயக்கன் வீதி,
பார்க் டவுன் (P. O.), சென்னை.

ஓம்

ஸ்ரீ ராமகிருஷ்ணாய நமஃ

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர்

அருளிச்செய்த

பக்தியோகம்

முதலாவது அதிகாரம்

பக்தி என்பதென்ன?

சத்தியமாகவும் சிரத்தையுடனும் கடவுளை அடையுமாறு செய்யும் முயற்சியே பக்தியோகம். இந்த முயற்சிக்குக் காரணமாக நிற்பதும் இம்முயற்சியுடன் கூடவே கலந்து முடிவிலும் அழியாமல் எஞ்சிநிற்பதும் அன்பு எனப்படும். கடவுளிடம் அதிதீவிரமான அன்பைச் செலுத்துவதென்ற வெறி ஒருவினாடி மாத்திரமே இருந்தாலும் நமக்கு நித்தியமான முத்தியைக் கொடுத்துவிடும். பக்தி சூத்திரங்களுக்கு வியாக்கியானம் செய்யும்போது நாரதர், "கடவுளிடத்து ஆழ்ந்த அன்பே பக்தி" என்கிறார். "அவ்வித அன்பை அடைகிறவன் ஒருவரிடமும் வெறுப்பின்றி எல்லோரிடமும் அன்பைச் செலுத்துகிறான்; எப்போதும் திருப்தியுடனே இருக்கிறான்." "இந்த அன்பை இகசாதனமாகச் செய்துகொள்ள

முடியாது. ஏனெனில், உலக சம்பந்தமான இச்சைகள் உள்ளவரையில், அந்த அன்பு உண்டாகிறதில்லை. "பக்தியானது கர்மா, யோகம் இவற்றைவிட உயர்ந்தது. ஏனெனில், கர்மாவும் யோகமும் ஒரு லட்சியத்தை யடையச் செய்யப்படுகின்றன. பக்தியோ லட்சியமெதையும் கொள்ளாமல் தானே மார்க்கமும் லட்சியமுமாக அமைந்து நிற்கிறது."

நமது முனிவர்க ளெல்லோரும் இடைவிடாமல் புகழ்ந்துவந்தது பக்தியொன்றே. சாண்டில்யர் நாரதர் முதலியவர்கள் பக்தியைப்பற்றி விசேஷமாகத் தனியே நூல்களைச் செய்திருக்கிறார்கள். வியாச சூத்திரங்களின் சிறந்த பாஷ்யகாரரும் ஞானபாகத்தையே பிரதானமாகக் கூறவந்தபோதிலும் அன்பு என்ற பக்தியைப் பற்றிப்பெரிதும் குறித்துக் காட்டியிருக்கின்றார். சூத்திரங்களில் பெரும்பாலும் ஏதோ ஒருவித வரண்ட அறிவையே கொடுக்கின்றது என்று தோன்றுமாறு பாஷ்யகாரர் அவற்றைத்தெரிவிக்கவிரும்பினும் தெய்வவணக்கத்தைப்பற்றிய அத்தியாயமானது அவ்வளவு இலகுவாக இவருக்கு இணங்கிவிடவில்லை.

ஞானம் என்னும் அறிவிற்கும் அன்பு என்ற பக்திக்கும் ஏதோ வித்தியாசம் பெரிதாக இருக்கிறதென்று நினைக்கிறார்கள். உண்மையில் அவ்வளவு வித்தியாசமில்லை; போகப்போக அவை யிரண்டும் ஒரே இடத்தில் வந்து முடிவுபெறுவதை நாம் காண முடியும். ராஜயோகமும்கூட முக்தியடைவதற்காக அனுஷ்டிக்கப்படும்போது இதே முடிவைத்தான் வந்து சேருகிறது. இப்போது ராஜயோகம் அநேகமாகப் பாமர ஜனங்களை ஏமாற்றும் எண்ணத்துடன் அனுசரிக்கப்படுகிறது. இப்படிக்கின்றி முக்தி சாதனமாக அதை உபயோகித்தால் முடிவு ஒன்றுதான்.

பக்தியினால் ஒரு பெரிய நன்மை யுண்டு. நாம் கொண்டுள்ள திவ்ய லட்சியத்தை யடைவதற்கு மிக இலகுவான வழியாக பக்தி அமையும். ஆனால், பக்தியினால் ஒரு பெரிய தீமையும் உண்டு. கீழ்ப்படிகளில் பக்தியானது மிக்க இழிவு

பொருந்திய மதவெறியாக மாறக்கூடும். ஹிந்து மதம், முகம்மதிய மதம், கிறிஸ்தவ மதம் முதலிய மதங்களில் மத வெறி கொண்டவர்களுண்டு; இவர்களெல்லோரும் பக்தி நிலையில் கீழ்ப்படிகளிலிருந்து ஒன்று சேர்ந்த கூட்டத்தவரேயாவர். அன்பு செலுத்தப்பட்ட விஷயத்தினிடம் ஒரேவிதமான பற்று கொள்வதாகிய நிஷ்டையென்பது அன்பு வளர்வதற்கு அவசியம் வேண்டும். ஆனால், அதே பற்றுதல் இதர விஷயங்களைக் குறைகூறுவதற்குக் காரணமாகவும் உபயோகமாகிவிடுகிறது. அபிவிர்த்தி யடையாத பலவீன மனங்கொண்டவர்கள் ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு தேசத்திலும் இருக்கிறார்கள். இவர்கள் இதர மதஸ்தர்களுடைய அல்லது தேசத்தவர்களுடைய லட்சியங்களைக் குறை கூறுவதன் மூலமாகவே தம் லட்சியப்பொருளைப் போற்றுகின்றார்கள். தம் லட்சியப்பொருளிடம் பக்தியைச் செலுத்துவதற்கு வேறு மார்க்கம் இவர்களுக்குத் தெரியவில்லை. இதனாலேயே சில விநோத புருஷர்களைக் காண்கிறோம். கடவுளைப்பற்றித் தாம் கொண்டுள்ள கொள்கையினிடம் மிகுந்த பற்றுக்கொண்ட ஒருவன், தன் மதத்தினிடம் அளவு கடந்த பக்தி செலுத்தும் ஒருவன், பிற மதஸ்தர்களைக் கண்டால் வெறி பிடித்தவனாகி அவர்களுடைய லட்சியங்களைக் குறை கூறுகிறான். தன் எஜமானது சொத்தைப் பிறர் அபகரிக்கவிடாமல் காக்கின்ற நாயின் அறிவுபோன்றது இவர்களுடைய அறிவு என்று சொல்லவும் முடியவில்லை. மனிதனுடைய அறிவைவிட இவ் விஷயத்தில் நாயின் அறிவு ஒரு விதத்தில் திறமானதாயிருக்கிறது. எஜமானன் எந்த உடை தரித்தபோதிலும், அவனை 'வேறு மனிதன்' என்று நாய் ஏமாறுவதே கிடையாது. மத வெறி கொண்டவனோ நிதானம் தவறியவனாகிறான். ஒருவன் சொல்லும் விஷயம் சரியா, தவறா என்று கூடக் கவனியாமல் 'சொல்லுகிற மனிதன் யார்' என்று கவனிக்கிறான். ஒரு விஷயம் உற்பத்தியாகும் இடத்திலே கருத்தைச் செலுத்தியே மதிமயங்கி அவ் விஷயத்தின் நேர்மையைப்பற்றியும் கவனிப்பதில்லை. தன் கொள்கைகளைப் பின்பற்றுகிறவரிடம்

மிக அன்பு செலுத்திப் பிரியத்துடன் நடந்துகொள்கிறவன் வேறு மதஸ்தர்களிடம் பழக நேரும்போது மிகக் கொடிய செயல்களைச் செய்யப் பின்வாங்குகிறதில்லை.

ஆனால், இவ்வித ஆபத்து ஆரம்ப நிலையைச் சேர்ந்த கௌண பக்தியிலேதான் உண்டு. பக்தி முதிர்ந்து பரா பக்தி நிலைக்கு எழும்பிவிட்டால் அங்கே இவ்வித வெறி கொண்ட கொடிய தோற்றங்கள் கிடையா. ஏனெனின், பக்தியின் உயர்ந்த நிலையில் முழுகியிருப்பவன் அன்பின் சொரூபமாகிய கடவுளுக்குச் சமீபத்திலேயே நெருங்கியிருப்பதால் அவனிடம் துவேஷங்கொண்ட மனம் இருக்க இடமில்லாமற் போகிறது.

இந்த வாழ்க்கையில் நம் குணங்களை யெல்லாம் அழகு பெற ஒழுங்குபடுத்திக்கொள்ளும் பாக்கியம் நம்மெல்லோருக்கும் கிட்டுவதில்லை. ஆனால், ஒரு விஷயம் நாமெல்லோரும் அறிவோம். சித் - அன்பு - யோகம் ஆகிய மூன்றும் எவரிடம் ஒழுங்குபெறச் சேர்க்கப்பட்டிருக்கின்றனவோ அவர் மிகச் சிறந்த பெரியாராவர். பறக்கின்ற பறவைக்கு இரண்டு இரக்கைகளும், சுக்கான் செலுத்துவதுபோல் செலுத்த ஒரு வாலும் வேண்டும். ஞானம் என்ற அறிவும் பக்தி என்ற அன்பும் இரண்டு இரக்கைகளுக்குச் சமம். செல்லும்போது ஒழுங்கு தவறாமல் காப்பது யோகம் என்ற வால். இந்த மூன்று வழிகளிலும் ஒழுங்காகக் கடவுள் வழிபாடு செய்யச் சக்தியற்றவர்களுக்கு பக்தியொன்றே வழியாகும். இவர்களுக்கு ஆரம்பத்தில் சில கொள்கைகளும் கிரியைகளும் அவசியமேயாகும். ஆனால், கடவுளிடம் ஆழ்ந்த அன்பைச் செலுத்தும் உன்னத நிலைக்கு நம்மை எழுப்பக்கூடிய சாதனங்களாக மாத்திரமே அவை இருக்கின்றன என்பதை யறியவேண்டும்.

ஞானத்தையே போதிக்கும் ஆசாரியர்களுக்கும் பக்தியே பிரதானமென்று சொல்கிறவர்களுக்கும் சிறிது வித்தியாச முண்டு. "முக்திக்கு வழிகாட்டியாக பக்தி உபயோகப்படுகிறது" என்று ஞானிகள் சொல்கின்றார்கள். "பக்தர்க

ளுக்கு அன்பின் பெருக்கமாகிய பக்தியே சாதனம் சாத்திய மென்ற இரண்டுமாகும்." இந்த இரண்டுவித உபதேசங்களி லும் வித்தியாச மில்லையென்றே நான் நினைக்கின்றேன். உண்மையில் பக்தியை சாதனமாத்திரமே யென்று சொல் லும்போது கீழ்நிலையிலுள்ள தெய்வ வணக்கம் அல்லது பக்தியை அது குறிக்கிறது. ஞானிகளும் பக்தர்களும் ஒரு விஷயத்தை மறந்துவிடுகின்றார்கள்; அதனால் இவ்வித வித்தி யாசங்கள் தோன்றுகின்றன. பரிபூர்ண பக்தி உண்டாகி விட்டால் உண்மையான ஞானம் வந்தே தீரும். அதைத் தேடவேண்டிய அவசியமில்லை. அதேமாதிரி பூர்ண ஞானத்தி னின்று உண்மையான பக்தியைப் பிரிக்க முடியாது. இவ் விஷயங்களை மனதில் கொண்டு வேதாந்த பாஷ்யகாரர் இதைப்பற்றி என்ன சொல்கிறார்களோ கவனிப்போம்.

"ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்" "இடைவிடாமல் தியா னம் செய்வதே சாஸ்திரங்களின் கட்டளை." இந்த சூத்தி ரத்திற்கு வியாக்கியானம் செய்யும்போது பகவான் ஸ்ரீ சங் கரர் சொல்கின்றார்:—"ஜனங்கள் 'அரசனிடத்தில் அன்பு செலுத்தி விசுவாசம் பாராட்டுகிறான். குருவினிடம் பக்தி யுள்ளவனாகிறான்' என்கிறார்கள். அரசனை வழிபற்றி நிற்பவ ரையும், குருவின் கட்டளைப்படி நிற்பவரையும் பார்த்து இவ்வாறு சொல்கிறார்கள். இவ்விதம் பின்பற்றுவதையே தம் கடனாகக் கொள்ளவேண்டும். அப்போதுதான் ஜனங்கள் அவ்வாறு சொல்வார்கள். அதுபோலவே, 'அன்பு மிக்க மனைவி தன்னைப் பிரிந்துபோயிருக்கும் புருஷனைப்பற்றித் தியானம் செய்கிறாள்' என்கின்றார்கள். இந்தப் பாவனைகளி லெல்லாம் ஆவல் மிகுந்து இடைவிடாமல் தியானிக்கும் தன்மை விளங்குகிறது." ஸ்ரீ சங்கரர் சொல்கிறபடி இதுவே பக்தி.

தியானிக்கப்படும் விஷயத்தினிடம் இடைவிடாமல், ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்தில் ஊற்றப் படும் எண்ணெய் ஒரே தாரையாக விழுவதுபோல, ஞாபக சக்தி நிலைத்திருப்பதே தியானம். இவ்வித தியானம் கடவுள்

விஷயத்தில் நிலைத்துவிட்டால் பந்தமெல்லாம் தெறித்து விடுகிறது. அதனால்தான் "இடைவிடாத ஞாபகம், அல்லது தியானம் முக்திக்குச் சாதனம்" என்று சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வித தியானமும் கடவுளைக் காண்பதும் ஒன்றே. "நமக்கு அதிக தூரத்திலே உள்ளவனாகவும் அதிக சமீபத்திலே உள்ளவனாகவும் இருப்பவன் எவனோ அவனைக் கண்டவுடன் ஹிருதய பந்தங்கள் தெறித்துச்,சந்தேகங்கள் ஒழிந்து, கர்ம பயன்கள் இல்லாமற் போகின்றன." இவ்வாக்கியத்தின் பொருளைக் கவனியுங்கள். சமீபத்தில் உள்ளவனைக் காண முடியும். தூரத்தில் இருப்பவனை மனதால் நினைக்கத்தான் முடியும். ஆனால், சாஸ்திரங்கள் "எட்டியிருப்பவனையும் காண்பவன் விடுதலை யடைவான்" என்கின்றன. ஆதலால், தியானமும் காண்பதும் ஒன்று" என்று சாஸ்திரங்கள் நமக்குப் போதிக்கின்றன. தியானத்தையே பலப்படுத்திக்கொண்டால் காண்பதற்குச் சமமாக எழுகின்றது. "இடைவிடாததியானமே தெய்வவணக்கம்" என்று நூல்கள் கூறுகின்றன. இடைவிடாத வணக்கமே அறிவு. ஆதலால், அறிவு என்னும் ஞானமும் இடைவிடாத தியானமே யல்லவா? ஆதலால், ஞாபகசக்தியானது இடைவிடாமல் இருந்துகொண்டு வரவரத் தடித்து நேரில் காண்பதற்குச் சமமாகப் பூர்த்தியானவுடன் முக்திக்குச் சாதன மாகின்றது என நூல்கள் போதிக்கின்றன.

ஆத்மாவைப் பலவகைக் கலைகளின் மூலமாக அடைய முடியாது; புத்தியாராய்ச்சியினாலும், வேதங்களைப் படிப்பதனாலும்கூட அடைய முடியாது. இந்த ஆத்மன் எவரை இச்சிக்கிறதோ அவரே ஆத்மாவை யடைய முடியும். அப்படிப்பட்டவருக்கு ஆத்ம தரிசனம் ஏற்படுகிறது. கேட்பது, நினைப்பது, தியானிப்பது முதலியவைகள் ஆத்மாவை யடைவதற்குச் சாதனங்க ளல்லவென்று சொல்லிய பின் 'இந்த ஆத்மன் எவரை இச்சிக்கிறதோ அவரே ஆத்மதரிசன மடைய முடியும்' என்று சொல்லப்படுகிறது. அதி தீவிரமான அன்பு செலுத்துகிறவர் மாத்திரமே இச்சிக்கப்படு

கிறார்கள். இவ்வித பக்தன் ஆத்மதரிசனம் அடைவதற்குக் கடவுளே உதவி செய்கிறார். ஏனெனில், 'என்னிடம் இடைவிடாத பற்றுக்கொண்டு என்னிடம் பக்தி செலுத்துகிறவருடைய மனதில் நான் புகுந்து அவர்கள் என்னை நோக்கி வருமாறு செய்துவிடுவேன்.' என்று பகவான் கூறியிருக்கிறார். ஆதலால், நமக்கு விளங்குவது என்ன ? ஒருவனுக்கு இந்த இடைவிடாத பக்தி அல்லது தியானம் முதிர்ந்து நேரில் காண்பதற்குச் சமமாக எழும்பிவிட்டால், அவ்வித தியானம் செலுத்தப்பட்ட ஒப்பற்ற பொருளால் இச்சிக்கப்பட்டு அவன் அந்த வஸ்து தரிசன மடைகிறான். இவ்வளவு வரையில் பகவான் ஸ்ரீராமாநுஜர் மேலே சொல்லப்பட்ட சூத்திரத்திற்குக் கூறும் பொருள்.

"பரம்பொருள் வணக்கத்தினாலாவது" என்ற ஸ்ரீபதஞ்சலி சூத்திரத்திற்குப் போஜன் பின்வருமாறு பொருள் கூறுகிறான்:—"இந்திரிய சுகங்கள் போன்ற பயன்களில் இச்சைகளை யொழித்து, சகல கர்மாக்களையும் ஆசார்யர்களுக்கெல்லாம் ஆசாரியாராக விளங்குகிறவரிடம் ஒப்புவிப்பது ஒருவித பக்தியாகும். இதற்கே ப்ரணித்தானம் என்று பெயர்."

இதே சூத்திரத்திற்கு ஸ்ரீ வியாசபகவான் பொருள் கூறும்போது, "பரம்பொருளாகிய கடவுளின் கருணை யோகிக்குக் கிடைத்து அவன் இச்சிப்பதைக் கொடுத்துதவுவது எதன் மூலமாகவோ அதுவே ப்ரணித்தானம்" என்கிறார்.

"கடவுளிடம் ஆழ்ந்த அன்பு செலுத்துவதே பக்தி" என்று சாண்டில்யர் கூறுகிறார்.

பக்தர்களுக்கெல்லாம் அரசனாக விளங்கும் பிரஹ்லாதன் என்ன கூறுகிறான் பார்ப்போம்:—"அஞ்ஞானிகள் மாயா சொரூபமான இந்திரிய விஷயங்களிடம் செலுத்துகின்ற அழிவில்லாத அன்பு, நான் உன்னைத் தியானிக்கும் போது, அவ்வித ஆழ்ந்த அன்பு என் ஹிருதயத்தை விட்டு நழுவாமலிருக்கட்டும். பரம்பொருளாகிய ஈஸ்வரனிடம்

செலுத்தப்படும் அன்பு நழுவாமலிருக்கட்டும்" என்பதேயாம்.

அப்பொருளைத் தவிர வேறு எவ்வளவு உன்னத வஸ்துவினிடமும் செலுத்தப்படுவது பக்தியாகாது.

ஒரு பெரிய ஆசாரியர் கூறியிருப்பதாக ஸ்ரீராமாநுஜர் தமது ஸ்ரீபாஷ்யத்தில் எடுத்துக் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது:—"பிரம்மாமுதல் புற்கள்வரையில் உள்ள வஸ்துக்களெல்லாம் ஜனன மரணங்களுக்குக் கட்டுப்பட்டவை. கர்மாவினுல் ஏற்படும் ஜனன மரண பந்தங்கள் எல்லாவற்றிற்குமுண்டு. அஞ்ஞானமயமாகிய அவ் வஸ்துக்கள் மாறுந் தன்மையனவாதலால், தியானிக்கப்படும் வஸ்துவாக அவற்றில் ஏதுவும் ஏற்படாது."

சாண்டில்யர் உபயோகித்த அநுரக்தி என்ற பதத்திற்கு வியாக்கியானம் செய்யும்போது ஸ்வப்னேஸ்வரர் அநு என்ருல் பிறகு என்றும், ரக்தி என்ருல் பற்று என்றும் பொருள் கூறி, "கடவுளின் சொரூபத்தையும் பெருமையையும் அறிந்த பின்னர் ஏற்படும் பற்று" என்கிருர். இப்படியில்லாவிட்டால் மனைவியிடமும் குழந்தைகளிடமும் ஏற்படுகிற குருட்டுத்தனமான பற்றுக்கூட பக்தியாகிவிடும். இந்தப் பற்றுக்களையெல்லாம் பக்தியென்று சொல்வது வழக்கமில்லை.

இப்போது பக்தியின் நிலைமையை நன்ருக அறிந்து கொண்டோம். சாதாரணமான கடவுள் வழிபாட்டில் ஆரம்பம் செய்து ஈச்வரனிடம் உன்னதமான ஆழ்ந்த அன்பு அல்லது பக்தியைச் செலுத்தும் நிலைவரையில் படிப்படியாகத் தர்மானுபவம் முதிர்ச்சியடைவதற்குச் சாதனமாக இருக்கும் இடைவிடாத மனுேமுயற்சியே பக்தியாம்.

இரண்டாவது அதிகாரம்

ஈசுவரன் யார்?

"இந்த ஜகத்தின் உற்பத்தி இருப்பு பிரிவு முதலியவை எவரிடம் தோன்றுகின்றனவோ அவரே கடவுள்" என்று வேதாந்த சூத்திரம் சொல்கின்றது. அவரே ஈச்வரன்; நித்ய முக்தரும் பரிசுத்தருமானவர் அவரே; சர்வ சக்திமானாகவும் சர்வஞ்ஞராகவும் சர்வ தயாளுவாகவும் உள்ளவர், ஆசாரியர்களுக்கெல்லாம் ஆசாரியரா யுள்ளவர் அவரே. சுயம்ஜோதியுடனும் அநிர்வசனீயமான ப்ரேமையுடனும் இருப்பவர் அவரே.

மேலே சொல்லப்பட்ட லட்சணங்களெல்லாம் சகுண ப்ரஹ்மத்தையே குறிக்கும். அப்படியானால் இரண்டு கடவுள் உண்டா என்ற கேள்வி பிறக்கின்றது. 'இது அல்ல, இது அல்ல' என்று சொல்லிக்கொண்டே எஞ்சிய சத்-சித்-ஆநந்த சொரூப மொன்று தத்துவசாஸ்திரிக்கும் கருணாநிதியாகிய கடவுள் ஒருவர் பக்தனுக்கும் என வெவ்வேறாக உண்டோ? இல்லை. சத்-சித்-ஆநந்த சொரூபமே கருணாநிதியாகிய கடவுளும்; சகுணமும் நிர்க்குணமும் ஒன்றே. வஸ்துவில் பேத மில்லை. பக்தன் வணங்குகிற சகுண சொரூபி ப்ரஹ்மத்தை விட வேறுபட்டதென்று பாவிக்கலாகாது. எல்லாம் ப்ரஹ்மமே; இரண்டற்ற ஏகவஸ்துவே. எங்கும் நிறைந்த ஏக சொரூபியாகிய பிரம்மம் மிகமிக சூட்சுமமாக இருப்பதால் அதனிடம் அன்பு செலுத்தி அதை வணங்குவது முடியாது. ப்ரஹ்மம் விஷயமாகவும் லட்சியமாகவும் வந்துவிடாது. ஆதலால், அதே ப்ரஹ்மத்தின் விஷயசொரூபமாகிய ஈசுவரன் அல்லது பரபுருஷனை பக்தன் தேர்ந்தெடுத்துக்கொள்கின்றான்.

பிரம்மன் என்ற மண்ணிலிருந்து நாநாவித வஸ்துக்கள் செய்யப்படுகின்றன. எல்லாம் ஒரே மண் ரூபமாக இருந்தாலும் நாம ரூபங்கள் வெவ்வேறாகின்றன. எந்த வஸ்துவும் உருப்பெறுமுன்னர் அந்த மண்ணினிடம் அந்தர்க்கத

மாக இருந்தது. நாநாவாக விளங்கும் பேத சொரூபங்களிடம் வஸ்துபேத மில்லை. உருவங்களளவில் அவை வெவ்வேறு பொருள்களேயாம். மண் எலியும் மண் யானையும் ஒன்றல்ல. ஏனெனில், தோன்றுகிற ரூபங்கள் மாத்திரமே அப்போது அறிவிற்கு விஷயங்களாகின்றன. இதேமாதிரி எங்கும் நிறைந்த சத் வஸ்துவின் தோற்றங்களுள் மிக உன்னதமான தோற்றம் ஈச்வரன். மானிடன் தன் மனத்தால் ப்ரஹ்மத்தை யறிய முயற்சி செய்யும்போது மிக்க உன்னதமான பாவனை ஈச்வரன். ஸிருஷ்டி நித்யமாக உள்ளது. அதுபோலவே (உன்னதமான பரம்பொருளாகிய) ஈச்வரனும் நித்யன்.

வியாச சூத்திரங்களின் நான்காவது அத்தியாயம் நான்காவது பாதத்தில்,மோட்சமடைந்த பின்னர் அவ்வாறு விடுபட்ட ஆத்மாவினிடம் அளவில்லாத சக்தியும் ஞானமும் வந்து சேர்கின்றன' என்று கூறிவிட்டுப், பிறகு உடனே, 'ஆனால்' ஜகத்தின் ஸிருஷ்டி, ஸ்திதி, அழிவு முதலிய காரியங்களுக்கு வேண்டிய அதிகாரம் கடவுள் ஒருவருக்கே சொந்தம்' என்று வியாசர் தெரிவிக்கின்றார். கீழ்ப்பட்ட நிலையிலுள்ள ஜீவாத்மா ஒருபோதும் கடவுளுக்குச் சமமாகப் பரிபூர்ண சக்தியும் சுதந்திரமும் அடைய முடியாது" என்று துவைத மத பாஷ்யகாரர் கூறுவதற்கு இந்தச் சூத்திரம் இடம் தருகின்றது. துவைத மதத்தையே முழு போதனையாகச் செய்யும் ஸ்ரீமாத்வாசாரியரும் வராகபுராணத்திலிருந்து ஒரு செய்யுளை மேற்கோளாகக் காட்டி இந்தச் சூத்திரத்திற்கு இலகுவாகப் பொருள் கூறிவிடுகிறார்.

விசிஷ்டாத்வைத கோள்கை:—

விசிஷ்டாத்வைத பாஷ்யகாரராகிய ஸ்ரீ ராமானுஜர் இந்த சூத்திரத்தை எவ்வாறு வியாக்கியானம் செய்கிறாரென்று கவனிப்போம். "இங்கே ஒரு சந்தேகம் உற்பத்தியாகிறது. முக்தியடைந்த ஜீவர்களுக்குள்ள சக்திகளில் பரம்பொருளுக்கு உரிய விசேஷ சக்தியும் சேர்ந்திருக்கிறதா? ஜகத்தை ஸ்ருஷ்டித்து ரட்சித்து அழிக்கும் சக்தி

யும் உண்டா? சர்வ ஜகத்தையும் ஆளும் சக்தி யுண்டா? இல்லையானால் முக்தி யடைந்த ஜீவர்கள் பரம்பொருளை நேரில் கண்டறியும் பாக்கிய மாத்திர முடையவர்களா?

“ஜகத்தினிடம் ஆதிக்கமும் செலுத்தச் சக்தியுண்டு என்று பாவிக்க நியாய மிருக்கிறதா? இருக்கிறதென்று ஒருவாறு சொல்வோம். ஏனெனில், “முக்தியடைந்த ஜீவன் பரம்பொருளுடன் சரிசமானமாகிய நிலையை அடைகிறான்” என்று சாஸ்திரங்கள் போதிக்கின்றன. ‘மாசுகளினின்று விடுபட்டவன் ஒரே சமத்வ நிலையை அடைகின்றான்’ என்று சொல்லப்படுகின்றது. மேலும், ‘அவன் இச்சைகளெல்லாம் பூர்த்தியாகின்றன’ என்றும் சொல்லப்படுகின்றது. சரிசமானத்துவமும் இச்சைகளின் பூர்த்தியும் அடையும்போது பரம்பொருளுக்குச் சொந்தமாகிய ஜகத்தை யாளும் சக்தியும் ஏற்படத்தான் வேண்டும். ஆதலால், முக்தியடைந்த ஜீவர்கள் ஜகத்தை யாளும் சக்தியையும் அடைகிறார்கள் என்று சொல்லியே தீரவேண்டும்.

“மேலே சொல்லிய ஆட்சேபனைகளுக்கு நாங்கள் சமாதானம் கூறுகிறோம். ஜகத்தை ஆளும் சக்திதவிர இதர சக்திகளை யெல்லாம் முக்தர்கள் அடைகிறார்கள். அறிவுள்ள வஸ்துக்களின் வாழ்க்கை, இச்சைமுதலியவற்றையும் பலவித தோற்றங்களாகிய ரூபங்களையும் நடத்துவதே ஜகத்தை ஆளுவதாகும். மாயாதிரைகள் நீங்கிப் ப்ரஹ்மானுபவமென்ற பெருமையை அடைந்திருக்கும் முக்த புருஷர்களுக்கு இந்தச் சக்தி கிடையாது. ஜகத்தை நிர்வகிக்கும் சக்தி பரஹ்மத்திற்கு மாத்திரமே உண்டு என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ‘எல்லா வஸ்துக்களும் எவரிடம் பிறக்கின்றனவோ, பிறந்த பின் எவரிடம் வசிக்கின்றனவோ, பிரிந்து போகும்போது எவரிடம் எல்லாம் திரும்புகின்றனவோ அவ்வித பரமனை இச்சிப்பாயாக. அந்தப்பரவஸ்துவே ப்ரஹ்மம்.’ முக்தியடைந்த புருஷர்களுக்கும் ஜகத்தை யாளும் சக்தி சொந்தமாக இருந்தால் இந்த லட்சணம் பரம்பொருளுக்கென்று விசேஷித்துக் கூற முடியாமற்போம். இலட்ச

ணம் கூறும்போது ஒரு வஸ்துவிற்கு மாத்திரமே விசேஷமாக உள்ள குணங்களைத்தான் கூறுவது வழக்கம். பின் வரும் வாக்கியங்களையும் கவனிக்கலாம்:—

என் அன்பு மிக்க பிள்ளாய்! ஆதியில் இரண்டற்ற ஒரே வஸ்து மாத்திரமே இருந்தது. 'நான் பல வஸ்துக்களை உற்பத்தி செய்வேன்' என்று அந்த வஸ்துவே அறிந்து உணர்ந்தது.

ஆதியில் ப்ரஹ்மம் மாத்திரமே யிருந்தது. அந்த ஏக வஸ்துவே பரிணாமத்தை அடைந்தது. க்ஷத்திரமென்ற காருண்யரூபத்தை உற்பத்தி செய்தது. வருணன், ஸோமன், ருத்ரன், பர்ஜன்யன், யமன் மிருத்யூ, ஈசானன் முதலிய தேவர்கள் க்ஷத்திரங்கள்.

ஆதியில் ஆத்மா ஒன்றே இருந்தது; வேறு எவ்வித சலனமும் கிடையாது. அந்த ஆத்மா பார்த்து, தான் உலகைச் சிருஷ்டித்ததாக அறிந்தான். பிறகு உலகங்களைச் சிருஷ்டித்தான்.

நாராயணன் தனியே இருந்தார். பிர்மா - ஈசானன் முதலியவர்களும், நட்சத்திரங்களும், தண்ணீர் - அக்கினி-சோமன்-சூரியன் முதலியவர்களும் இல்லை. தனியே இருப்பதில் திருப்தி யடையாமல் அவர் தியான மாத்திரத்தால் பத்து அங்கங்களாகிய ஒரு பெண்ணை உற்பத்தி செய்தார்.

எவர் பூமியில் வசித்தாலும் பூமியைக் காட்டிலும் வேறோ, எவர் ஆத்மாவினிடமே வசிப்பவரோ;

இவைபோன்ற (ஸ்ரீராமாநுஜ பாஷ்ய வாக்கியங்களால் பரம்பொருள் ஜகத்தை ஆளுகின்ற புருஷனெனவே சூத்திரங்கள் தெரிவிக்கின்றன. இவ்விதம் ஜகத்தை ஆளும் காரியங்களில் முக்தியடைந்த ஜீவர்களுக்கு எவ்வித சம்பந்தமும் கூறவில்லை. ஏனெனில், இந்த ஜீவர்களிடமிருந்து அந்தச் சக்தி வெகு தூரத்தே நிற்கின்றது. ஜீவர்கள் இந்தச் சக்தியை எட்டியும் பார்க்க முடியாது.

அந்த ஸூத்திரத்தைப்பற்றி ஸ்ரீராமாநுஜர் பின்வருமாறு வியாக்கியானம் செய்கின்றார்:—"வேதங்களில் இந்தக் கொள்கைக்கு நேர் விரோதமாகச் சில பாகங்கள் காணப்படுகின்றனவென்று நீங்கள் சொல்லக்கூடும். அந்தப் பாகங்களெல்லாம் கீழ்ப்பட்ட தேவ மண்டலங்களுடன் முக்தியடைந்த புருஷர்களுக்குள்ள சம்பந்தத்தைத் தெரிவிக்கின்றன." இவ்விதம் கடினநிலைகள் விளக்கப்படுகின்றன. ஸ்ரீராமாநுஜ தத்துவ முறையானது மொத்தத் தொகுதியான ஜகத்தைப்பற்றிய ஒற்றுமையை ஒப்புக்கொண்டு, இதனிடம் அந்தர்க்கதமாக நித்யமான வேற்றுமைச் சுபாவங்கள் இருக்கின்றன என்று போதிக்கிறது. ஜகத்து முற்றிலும் வெவ்வேறு வேற்றுமைகள் நிரம்பிய ஒற்றுமையென்பது கருத்து. காரியங்களைப்பற்றிய வரையில் இம்முறையில் துவைதபாவனையே காணப்படுவதால் ஸ்ரீராமாநுஜர் வியஷ்டியாகிய ஜீவாத்மனையும், சகுணரூபியாகிய கடவுளையும் தெளிவாகப் பிரித்துப் பேதங் காட்டியிருக்கின்றார்.

அத்வைத தத்துவம்:—அத்வைத தத்துவத்திற் சிறந்த ஆசாரியராகிய ஸ்ரீசங்கரர் என்ன சொல்லுகிறார் என்று இனி கவனிப்போம். அத்வைத தத்துவத்தின் நிலை விசித்திரமானது. துவைத வாதிகளுடைய நம்பிக்கைக்கும் நோக்கங்களுக்கும் அத்வைதத்தில் இடமிருப்பதுடன் சிறந்த தெய்வத் தன்மையின் தத்துவமும் அங்குத் தெளிவாக்கப்படுகிறது. முக்தியடைந்த பிறகும் தம் மனதை நசிக்கச்செய்யாது காக்க விரும்புகின்றவர்கள் தம் நோக்கங்களை இஷ்டப்படி அநுபவித்து, சகுணப்பிரம்மத்தின் முழு கருணையையும் அடைந்து, சுகமாகவே இருக்கலாம். இவ்விதமிருப்பவர்களைப்பற்றி ஸ்ரீபாகவத புராணம்பின்வருமாறு கூறுகின்றது: "ஏ! ராஜனே! கடவுளுடைய பெருமையான குணங்களைப் பற்றி என்னென்று வர்ணிப்பது. பந்தங்கள் எல்லாம் நீங்கப் பெற்று ஆத்மாவினிடமே சுகத்தைக் காணுகின்ற முனிவர்களும் கூட (பலாபேட்சையின்றி) அன்பின் நிமித்தமே சர்வ சக்திமானாகிய கடவுளிடம், அன்பைச் செலுத்து

கின்றார்கள். இவர்களே "ப்ரக்ருதியில் லயமடைந்தவர்கள்" என்று சாங்கியர்களால் சொல்லப்படுகின்றார்கள். "இவர்கள் முக்தர்களானபின்னர் அடுத்த சிருஷ்டியில ஜகத்தை நடத்தும் மகாபுருஷர்களாக ஆகிறார்கள்" என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இவர்களில் எவரும் கடவுள் அல்லது ஈசுவரனுக்குச் சமமாக ஆவதில்லை. சிருஷ்டியென்றும், சிருஷ்டிக்கப்பட்ட பொருளென்றும், சிருஷ்டி கர்த்தாவென்றும் இல்லாத நிலைக்கு எழும்பியவர்கள்; அறிவது, அறிகிறவன், அறியப்பட்ட பொருள் என்ற பேதம் இல்லாத நிலைக்கு எழும்பியவர்கள்; நான், நீ, அவன் என்ற பேதங்களற்ற நிலையில் வசிப்பவர்கள்; விஷயம், விஷயத்தைக் காண்பவன், சம்பந்தம் முதலியவை அற்ற இடத்தில், அப்படிப்பட்ட இடத்தில் யார் யாரைக் காண்பது? சகலத்திற்கும் அப்பாற்பட்ட நிலையை இவர்கள் அடைந்துவிட்டார்கள். "நேதி, நேதி" (இது அல்ல, இது அல்ல) என்று சுருதிகள் சொல்லும் நிலைக்கு அவர்கள் எழும்பியவர்கள். இந்த நிலையை அடைய முடியாதவர்களும் விருப்பமில்லாதவர்களும் இருக்கிறார்கள்; இவர்கள் மூன்றுவித பாவனைகளை அடைந்தே தீரவேண்டியவர்கள். பேதமற்று ஏகமாக இருக்கும் பிரம்மத்தினிடம் (௧) ப்ரக்ருதி, (௨) ஆத்மன், (௩) இரண்டையும் தாங்கிக்கொண்டு அவற்றை ஊடுருவிப்பாய்ந்ததாக இருக்கப்பட்ட ஈசுவரன், என்றவைகளைக் காண்கின்றார்கள்.

பக்தி மேலீட்டினால் பிரஹலாதன் பிரக்ஞையுடன் கூடிய நிலைக்கு மேற்பட்டதாகிய (சமாதி)நிலையை அடைந்து தன்னை மறந்தவுடன், அவன் ஜகத்தையும் காணவில்லை; அதன் காரண வஸ்துவையும் காணவில்லை. சகலமும் ஏகமாய், அகண்ட வஸ்துவாகிய பிரம்மமாய், நாமரூபங்களற்றதாய்க் காணப்பட்டன. பிறகு சாதாரண மனோநிலைக்குத் திரும்பியவுடன் தான் பிரஹலாதன் என்றும், தன் முன்னால் ஜகத் இருக்கிறதென்றும் தோன்றவே, ஜகத்தை நடத்தும் கர்த்தாவும் விளங்கிற்று. சுகசாதனங்கள் (குணங்கள்) நிறைந்த களஞ்சியமாக ஜகத் ரட்சகர் விளங்கினார். (கடவு

ளின்) கருணையை அடைந்த கோபிகைகளின் நிலையும் இதே மாதிரிதான். தங்களைப்பற்றிய வியஷ்டி பாவனையை அடியுடன் மறந்து ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் ஆழ்ந்த அன்பைச் செலுத்திய நிலையில் இருந்தவரையில் அவர்கள் தாமே கிருஷ்ணர்கள் என நினைக்கலானார்கள். அப்படியில்லாமல் 'ஸ்ரீ கிருஷ்ணனை வணங்கவேண்டும்' என்று நினைக்கக்கூடிய வியஷ்டி பாவனைக்குக் கிறங்கியபோதெல்லாம் அவர்கள் கோபிகைகளாகவே இருந்தார்கள். உடனே அவர்கள் எதிரில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தம் தாமரைமலர் போன்ற முகத்தில் புன்முறுவலுடனும், மஞ்சள் பட்டாடையுடனும், பூமாலைகளுடனும், அழகினால் மன்மதனையும் ஜெயித்த கோலங் கொண்டு தோன்றினான்.

இப்போது ஸ்ரீ சங்கராசாரியரிடம் நெருங்குவோம். ஆசாரியர் கூறுவதென்ன? சகுண பிரம்மத்தையே வணங்கியதன் பயனாக பரம்பொருளுடன் கூடுகிறவர்கள், தங்கள் வியஷ்டி பாவனையாகிய மனத்தை அப்படியே காப்பாற்றியவர்கள், ஆகிய இவர்களது பெருமை கட்டுப்பட்டதா, கட்டுப்படாததா? இந்தச் சந்தேகம் எழும்பியதும் பின்வரும் கட்சிகள் உண்டாகின்றன. அவர்களுடைய பெருமை கட்டுப்படாததுதான். "அவர்கள் சுயராஜ்யத்தையடைகின்றார்கள்" என்றும், "அப்படிப்பட்டவனை எல்லாத் தேவர்களும் வணங்குகின்றார்கள்" என்றும், "அவர்களுடைய இச்சைகள் எல்லா உலகங்களிலும் நிறைவேறுகின்றன" என்றும், சாஸ்திரங்கள் முறையிடுகின்றன அல்லவா? இந்தக் கட்சிகளுக்குப் பதில் மொழியாக வியாசர் "ஜகத்தை ஆளும் சக்தியொன்று நீங்கலாக" என்கிறார். ஜகத் சிருஷ்டி, ஸ்திதி, நாசம் முதலிய சக்திகளைத் தவிர அணிமாதி சித்திகளையும்கூடச் சுதந்திர புருஷர்கள் அடைகின்றார்கள். ஜகத்தை ஆளும் சக்தி நித்ய முக்தனாகிய ஈசுவரனுக்கு மாத்திரமே உண்டு. ஏன் அப்படியெனில், சிருஷ்டியைப்பற்றிக் கூறுகிற சாஸ்திரங்களெல்லாம் அவரையே கர்த்தாவாகக் கூறுகின்றன. முக்த புருஷர்களின் பெயர் அவற்றில் காணப்படவில்லை. எவ்வித சம்

பந்தமாகவும் இவர்கள் பெயர் அங்கு இல்லை. பரம்பொருளாகிய கடவுள் ஒருவரே உண்மையில் ஜகத்தை ஆளுகின்றவர். சிருஷ்டியைப்பற்றிக் கூறும் நூல்களில் இவரது பெயர் வழங்கிவரும்போது "நித்திய முக்தர்" என்ற பதம் பிரயோகமாயிருக்கிறது. எப்போதும் முக்தராகவே இருப்பவர் என்பது பொருள். மேலும் கடவுளை அடைய விரும்புவதாலும் கடவுள் வழிபாட்டினாலும் அணிமாதி சித்திகள் கிடைக்கின்றனவாதலால் இந்தச் சக்திகளுக்கு ஆதியுண்டு என்றேற்படுகிறது. அவை கட்டுக்குட்பட்டவைகளே. ஆதலால், ஜகத்தை ஆளும் நிலைமை அவற்றிற்குக் கிடையாது. மேலும், அவ்வித முக்தர்கள் தனித்தனி வியஷ்டித் தன்மையுடன் கூடியவர்களாயிருக்கிறார்களாதலால் ஒருவருடைய மனோநிலை மற்றொருவருடைய மனதிற்கு மாறுபட்டதாக இருக்கக்கூடும். இவ்வித முரண்பாடுகள் நீங்குவதற்கு எல்லா பாவனைகளும் ஒரு (பரம்பொருளுடைய) மனதிற்குக் கீழ்ப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆதலால், இவ்வித முக்தர்களுடைய மனோபலமெல்லாம் ஒரு ஜகத் ஈசனது மனோபலத்திற்கு உட்பட்டதாக இருக்கவேண்டுமென்ற கொள்கை வெளியாகிறது.

பக்தி என்பது பிரம்மத்தினிடம் செலுத்தப்படுவதென்றால், சகுணத்தினிடம் செலுத்தப்படும் என்றே கருத்து. "நிர்க்குண பிரம்மத்தினிடமே மனதைச் செலுத்துகிறவருக்கு வழி மிகக் கடினமையானது." மனோமயப் பிரகிருதி யென்னும் ஓட்டத்தின் வழியே பக்தன் இலகுவாகச் செல்கிறான். யாதொரு குணங்களுடனும் கூடியிராத பிரம்மத்தைப்பற்றி நமது மனதில் எவ்வித பாவனையும் உண்டாக்கிக் கொள்ளமுடியாது என்பது உண்மையல்லவா? ஆனால், ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். நம்மால் அறியப்படும் பொருள்களின் நிலைமைதான் எப்படி? உலகத்திலே மனோதத்துவ சாஸ்திரத்தில் பகவான் கபிலரைப்போல் எவரும் பெருமையடைந்ததில்லை. அவ்வித கபிலர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். எவ்வளவோ காலங்களுக்கு முன் அவர் கூறிய

மொழிகளைக் கேளுங்கள்! ஜனங்களுக்கு விளங்குமாறு அவர் ஒரு பெரிய விஷயம் எடுத்துக் கூறியுள்ளார். நாம் உணர்கிற வஸ்துக்களிலும் நினைக்கும் நினைவுகளிலும் மனதில் தோன்றும் எண்ணமும் ஒரு அம்சமே என்கிறார். நமது தேகம் முதற்கொண்டு ஈசுவரன்வரையில் நாம் அறியும் விஷயங்களெல்லாம் நமது அறிவும், வேறு ஏதோ ஒன்றும் சேர்ந்து ஆக்கப்பட்டவைகளென்று நாம் அறிய முடியும். அந்த ஏதோ ஒன்று எதுவாயிருந்தபோதிலும் சரி; இரண்டும் சேர்ந்த சேர்க்கையே நாம் உண்மையாக இருக்கிறதென்று நினைக்கும் விஷயங்களாகும். மனதினால் அறியக்கூடிய விஷயமெல்லாம் இவ்வித சேர்க்கையாகத்தான் இருக்கமுடியும். ஆதலால், குணங்களற்ற நிலையில் உள்ளவர் ஈசுவரன் என்று நாம் சொல்வதால் அவ்வித ஈசுவரன் பொய்யாக இருக்கவேண்டும் என்று சொல்லிவிடமுடியாது. மெய்ப்பொருள் என்ற வார்த்தையை ஆதாரமாக வைத்துக்கொண்டு உண்மை வேறு, லட்சியம் வேறு என்று சொல்வதுபோல் வீண் வார்த்தைச் சண்டைகளில் புகுந்து விளையாடுகிற மேனாட்டுத் தத்துவ கலைகளைப்போல் ஆகிவிடக் கூடாது. உண்மை என்ற பதம் எந்தெந்த நிலைமைகளைத் தெரிவித்தபோதிலும் அவை யாவும் சேர்ந்தே ஈசுவரன் என்ற மொழிக்குள் அடக்கம். ஜகத்தில் உள்ள மற்ற வஸ்துக்களின் உண்மை எவ்வளவு தூரம் உண்மையோ அவ்வளவு தூரம் ஈசுவரனும் உண்மைதான். உண்மையென்ற பதமும் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட பொருளில்தான் நமக்கு விளங்கும். ஹிந்து தத்துவ நூல்களில் ஈசுவரனைப்பற்றிய தத்துவம் இவ்வளவுதான்.

மூன்றாவது அதிகாரம்

ஆத்மானுபவமே லட்சியம்

சாஸ்திரங்களைப்பற்றிய விவரமான வாதங்கள் பயனற்றவைகளே யாயினும் பக்தனுக்கு உறுதியைக் கொடுப்பதற்கு அவை அவசியமாக இருக்கின்றன. இதற்குமேல் அவற்றால் அவன் பயனடைவதில்லை. தர்க்கங்கள் செய்வதற்குக் காரணமான பகுத்தறிவு: மயக்கத்தையும் கஷ்டத்தையுமே உண்டாக்கவல்ல பிரதேசங்களில் போய் நின்றுவிடுகிறது. பக்தனோ இந்தப் பிரதேசத்திற்கும் அப்பால் உள்ள ஓர் இடத்திற்குச் செல்கின்றான். பகட்டான வேஷத்துடன் கூடிய பகுத்தறிவு (விஷய ஆராய்ச்சியறிவு) பக்தனுக்குப் பின்னால் வெகு தூரத்திற்கப்பால் நின்றுவிடுகிறது. கடவுள் கருணையால் இருட்டில் தடவச்செய்யும் பகுத்தறிவை விட்டுவிட்டு நேருக்குநேர் நோக்கும் காட்சியாகிய ஜோதிமயப் பிரதேசத்தில் பக்தன் விளங்குகிறான். விஷயங்களை அறிவினால் ஆராய்ந்து பார்த்து நம்புவதற்குப் பதில் அவன் நேரே உணருகிறான்; கட்சியாட இடமில்லாதபடி நேரில் சம்பந்தப்படுகிறான். கடவுளை இவ்வாறு காண்பதும் உணருவதும் அனுபவிப்பதும் கடவுளைப்பற்றி யறிந்து கட்சியாடுவதைக் காட்டிலும் எவ்வளவு மேன்மையான நிலைமை பாருங்கள்! 'விடுதலையாகிய மோட்சத்தையும்விட இந்த நிலை பெரியது,' என்று வாதிக்கும் பக்தர்களும் உண்டு. அந்த நிலையே உயர்ந்த பலனுமாகும்.

'மனிதனிக்குச் சரீர சுகத்தைத் தரக்கூடிய சாதனங்கள் மாத்திரமே உபயோக முள்ளவைகள்' என்று உறுதி கூறும் மனிதர் பலர் இவ் வுலகத்தில் இருக்கின்றார்கள். மத விஷயம், கடவுள், நித்யத்துவம், ஜீவன் முதலிய விஷயங்கள் ஸ்தூல தேகத்திற்குச் சுகம் கொடுப்பதில்லையாதலால் இவற்

றை அவர்கள் விரும்புவதில்லை. இந்திரியங்களுக்குத் திருப்தியளித்து மிருகத்தன்மையான ஆசைகளைப் பூர்த்திசெய்ய உபயோகமில்லாத விஷயங்கள் அவர்கள் கண்களுக்குப் பலனில்லாதவைகளெனத் தோன்றும். பலன் அல்லது உபயோகத்தைத் தரக்கூடியவை என்றால் என்ன கருத்து? ஒவ்வொருவர் மனதிலும் தத்தமக்கு எவை குறைகள் என்று தோன்றுகின்றனவோ அவைகளுக்குத் தக்கபடி உபயோகம் என்ற பதத்தின் கருத்தும் வேறுபடுகிறது. ஆதலால், உண்பதும் குடிப்பதும் மக்கட்பேறடைவதுமே வாழ்க்கையென்று கருதி மேலான நிலைக்கு எழும்பாதவர் மனதில் இந்திரிய சுகங்களைத்தவிர வேறெதுவும் உபயோகமுள்ளவைகளாகத் தோன்றாது. மேலான நிலைக்குச் செல்ல வேண்டியது அவசியம்தான் என்று உணர்வதற்கு இவர்கள் இன்னும் பலபல ஜன்மங்கள் எடுத்தாகவேண்டும். ஆனால், உத்தமர்களாய்ப் பல பெரியோர்களும் உண்டு, தோன்றி மறையும் இப் பிரபஞ்ச வாழ்க்கையைக்காட்டிலும் நித்யமான ஆத்மதர்மங்கள் மேலானவைகளென்று அவர்கள் நினைக்கின்றார்கள். இந்திரியங்களைத் திருப்திசெய்வது குழந்தைகளின் விளையாட்டுகளுக்குச் சமமென்றும், அறிவுடைய செயல்க ளல்லவென்றும் அவர்களுக்குத் தோன்றுகின்றது. 'பக்தியின் மூலமாகக் கடவு ளனுபவத்தை யடைவது மாத்திரமே மானிடவாழ்க்கையில் பயனுள்ள விஷயம்' என்று நினைக்கிறார்கள். இக்காலத்திலும் கூட இவ்வித மனிதர்கள் வசிக்கிறார்கள். கடவுளின் கருணையால் அப்படிப்பட்டவர்களை நாம் இப்போதும் காண முடியும்.

பக்தியோகமென்பது கௌணி என்றும், பரம் என்றும் இருவகைப்படும். கௌணி என்பது ஆரம்பநிலை; பரம் என்பது உன்னதநிலை. ஆரம்பநிலையில் பல ஸ்தூல உதவிகள் நமக்கு அவசியம் வேண்டும். இந்த அவசியம் மேலே போகப் போக விளங்கும். எல்லா மதங்களிலும் புராண பாகங்களும் கிரியா பாகங்களும் உண்டு. இவைகள் ஜீவனுக்குத் துணையாக நின்று கடவுளிடம் நெருங்குமாறு செய்யும். புராண

மாகப் பேசினாலும் யாதொரு பயனுமில்லை. தர்ம வழியில் சிறிதளவு அப்பியாசம் செய்தாலும் எவ்வளவோ பயன்கள் அதிகமாகத் தோன்றியிருக்கின்றார்கள். அப்படிக்கின்றி, சாரமற்ற சில மதங்கள் உண்டு. ஆத்மதர்ம அழகின்றிச் சில வெற்றுக்கொண்ட கிரியைகளை மாத்திரமே அடக்கிக்கொண்டிருக்கும் மதங்கள் பயனற்றவைகளே. இசை, இனிமை, அழகு, காம்பீரியம் முதலிய பெருமைகளை இழந்து விளங்கும் மதக்கொள்கைகளும் கிரியாபாகங்களும், பரிபக்குவமில்லாத மனது தத்தளித்துக் கொண்டிருக்கும்போது கடவுளிடம் அதை அழைத்துக்கொண்டுபோய்ச் சேர்க்க ஊன்றுகோலாக உதவாத மதங்களும் ஆத்மீக வீட்டின் மேற்கூரையைத் தாங்கி நிற்கும் தூண்களைத் தகர்த்து விடும். உண்மை அல்லது மெய்ப்பொருளைப்பற்றிய மூட நம்பிக்கையினால் அவர்கள் ஜீவனுக்கு எழுச்சியைத் தரக்கூடிய அம்சங்களைப் போக்கிக்கொள்கின்றார்கள். "ஜீவன்" என்ற பூமியில் முளைத்து வளர்ந்து வருவதாகிய "ஆத்மப்பயிற்சி" என்ற செடி வளர்வதற்குத் தேவையாகிய சாதன விஷயங்களை அழிக்கின்றார்கள். அப்படிப்பட்ட மதத்தில் முடிவில் தங்கி நிற்பதெவை? பொருளற்ற சொற்களும், சமூகச்சீர்திருத்தம் என்ற பெயரால் நடக்கக்கூடிய அற்பத் தொழில்களுமே மீதியாகும். இவ்வித மதக்கொள்கைகளையே பின்பற்றி நடப்பவர்களில் பெரும்பாலோர் அறிந்தும் அறியாமலும் ஜடதத்துவ வாதிகளாக இருப்பவர்கள். அவர்களுடைய லட்சியமெல்லாம் இவ்வுலகிலும் சரி, மறுமையிலும் சரி, இந்திரிய சுகங்களைப் பூர்த்தி செய்வதேயாம். ஆதலால்தான் தெருக்கூட்டும் தொழில் முதலியவைகள்—மனிதனுக்கு ஜடசம்பந்தமான சுகத்தைக் கொடுப்பவைகள்—அவர்களுடைய வாழ்க்கையில் மேலான விஷயங்களென மதிக்கப்படுகின்றன. அறிவீனமும் வீண் வெறியும் இவர்களிடம் நிரம்பி விடுகின்றன. ஜடதத்துவ வாதிகளும் நிரீசுவர வாதிகளும் சேர்ந்த கூட்டத்தில் இவர்களையும் சேர்த்துவிடலாம். ஏனெனில், காரியத்திற்குப் பயன் கொடுக்காத வீண் உணர்ச்சிகள் இவர்களிடம் நிரம்பியிருப்பதால் இவர்கள் பாரம் பார

பாகங்களும் கிரியாபாகங்களும் எந்த மதங்களில் ஏராளமாக உண்டோ அந்த மதங்களிலிருந்தே ஆத்ம தர்ம வீரர்ளுண்டு. மேலே சொல்லப்பட்ட பயனற்றவர்களில் ஆத்ம தர்மவீரர் ஒருவரையாவது காட்ட முடியுமா? முடியாதென்று நிச்சயம் சொல்ல முடியும். ஆதலால், வாய்களை மூடிக்கொண்டு, உங்கள் ஹிருதயங்கள் என்னும் ஜன்னல்களைத் திறந்து வைத்துக்கொள்ளுங்கள்! மெய்ப்பொருளின் ஜோதி தானே வந்து சேரும். தாங்கள் பேசும் விஷயங்களை மிகத் திறமையாக அறிந்தவர்களான பரதக்கண்டத்து முனிவர்களிடம் நெருங்கி அவர்கள் பாதங்களில் அமர்ந்து குழந்தைகளைப் போல் இருப்பீர்களாக!

நான்காவது அதிகாரம்

குரு சிஷ்ய லட்சணங்கள்

ஒவ்வொரு ஜீவனும் முக்திநிலையாகிய பூர்ணத் தன்மையை அடைந்தே தீரவேண்டும்; முடிவில் ஒவ்வொரு பிராணியும் பூரண நிலையை அடைந்துவிடும். இதற்கு முன் நாம் நினைத்த எண்ணங்களும் செய்த செய்கைகளும் சேர்ந்து இப்போதுள்ள நிலையை நமக்குக் கொடுத்திருக்கின்றன; (அவ்வாறு) நாம் இப்போது நினைக்கும் நினைப்பும், செய்யும் செய்கையும் நமது பிற்கால நிலைக்குக் காரணமாகும். இவ்விதம் நமது விதியை நாமே செய்துகொள்கிறோமென்றாலும். வெளி யுதவியும் சிற்சில சந்தர்ப்பங்களில் அவசியமாக இருக்கின்றது. ஜனங்களில் பெரும்பான்மையோர் வெளியுதவிகளை அவசியம் நாடவேண்டியவர்களாகவுமிருக்கின்றார்கள். அவ்வாறு வெளியுதவி கிடைக்கும்போது ஜீவனுடைய சக்திகளும் சாதனங்களும் கூர்மையடைந்து ஆத்மீக வாழ்க்கையை எழுப்பிவிடுகின்றன; வளர்ச்சி துரிதமாக ஆகின்றது; முடிவில் மனிதன் பரிசுத்தமான பரிபூர்ண நிலையை அடைகிறான்.

நூல்களைக் கற்பதன் மூலமாக இவ்வித துரித உணர்ச்சி ஏற்படுவதில்லை. ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனிடமிருந்தே இவ்வித உணர்ச்சியைப் பெற முடியும். நம் வாழ்நாள் முழுமையும் நூல்களைக் கற்று மிகுந்த புத்திமான்களாக ஆக முடியும். அதனால் ஆத்ம தர்மாபிவிர்த்தி ஏற்பட்டுவிடாது. எவ்வளவுக் கெவ்வளவு புத்திக்கூர்மை அதிகரிக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஆத்மாபிவிர்த்தியு மேற்படுமென்று சொல்ல முடியாது. இந்த இரண்டும் சம்பந்தமுள்ளவைகளல்ல. ஆத்மதர்ம நூற்பயிற்சியால் ஆத்மவழியில் நாம் உதவி பெறுகிறோமென்று மயக்கம் நமக்கு ஏற்படக்கூடும்.

ஆனால், நம்மையே நாம் சோதித்துப் பார்த்தால் நமக்குக் கிடைத்திருப்பதெல்லாம் புத்திக் கூர்மையேயன்றி வேறல்லவென்று காண்போம். உள்ளே யிருக்கும் ஆத்மா யாதொரு பயனு மடையவில்லை யென்பது புலப்படும். நம்மில் பலர் ஆத்ம விஷயங்களைப்பற்றி மிகவும் அபூர்வமாகப் பேசிவிடுகிறோம். காரியத்தில் பார்ப்போமானால், உண்மையான ஆத்ம வழியில் நாம் மிகவும் கீழ்ப்பட்ட நிலையில் இருப்பது விளங்கலாம். இதற்குக் காரணமென்ன? ஆத்மதர்ம எழுச்சிக்கு நூற்கல்வி மாத்திரம் பயனில்லை என்பதேயாம். ஒரு ஜீவனை மேலெழும்பச் செய்யும் உணர்ச்சி மற்றொரு ஜீவனிட மிருந்து வரவேண்டும். எந்த மனிதரிடமிருந்து அவ்வித உணர்ச்சி கிடைக்கின்றதோ அவரே ஆசாரியர் அல்லது குரு. எவருக்கு இவ் வுணர்ச்சி புகட்டப்படுகிறதோ அவரே சிஷ்யன். இவ்விதம் சுதந்திரமாகிய முக்திக்குச் சாதனமாகிய உணர்ச்சி புகட்டப்படுவதற்கு என்ன வேண்டும்? ஆசாரியராக இருப்பவரிடம் புகட்டும் சக்தியும், சிஷ்யனாக இருப்பவரிடம் புகட்டப்பட்ட சக்தியைப் பெற்றுக் கொள்ளும் திறனும் வேண்டும். விதையினிடம் ஜீவசக்தியிருப்பதுடன், விதைக்கப்படும் பூமியும் உழுது பண்படுத்தப்பட்டிருக்கவேண்டும். இந்த இரண்டும் தயாராக இருக்கும்போது அபூர்வமான மெய்ப்பொருளைக் காட்டும் மத தர்மமாகிய செடி வளர்கின்றது. "மத தர்மத்தை உபதேசிக்கும் ஆசாரியனிடம் அபூர்வமான சக்திகள் பொருந்தியிருக்கவேண்டும்; அவரிடம் கேட்கின்றவனும் சமர்த்தனாக இருக்கவேண்டும்." இவ்வாறு இருவரிடமும் அரிய அபூர்வ குணங்கள் இருந்தால் மாத்திரமே மிக நேர்த்தியான ஆத்ம எழுச்சி உதிக்கும்; வேறு எவ்விதமிருந்தாலும் எழுச்சி ஏற்படாது. உண்மையான ஆசாரியர்களும் சிஷ்யர்களும் இவ்வளவு மகிமை பொருந்தியவர்கள். ஆத்மதர்ம அனுபவம் வேண்டுமென்று இச்சிக்கிறவர்களின் மகிமை இவ்வளவு மேலானது. மற்றவர்களெல்லோரும் ஆத்மதர்மமென்ற பெயரைச் சொல்லிக்கொண்டு விளையாடுகிறவர்களே. 'புத்தியின் மூலமாக அறிவோம்' என்ற விருப்பம்

பலரிட மிருக்கலாம்; இவ்வித ஆவல் தீவிரமாக இருந்தா லும், மததர்மமென்ற ஸ்தலத்தை மூடிக்கொண்டிருக்கும் திரையின் சாயலையே இவர்கள் பிடித்தவர்க ளாவார்கள். இதிலும் சிறு பயன்கள் உண்டு என்பது மெய்தான்; எப் போதாவது இவர்கள் ஒருகாலத்தில் மததர்ம அனுபவம் வேண்டுமென்று இச்சை கொள்வார்கள். அப்படிச் செய்ய இந்த அறிவே சாதனமாக ஆகலாம். இவ்வித எழுச்சியுடன் கூடி மனம் பக்குவ மடைந்தவுடன் உபதேசமாகிய விதை வந்தே தீரும். இதுவே விதி. மனப்பூர்வமான இச்சை முதிரும்போது ஆசாரியன் கிடைத்தே தீரவேண்டும். அவசி யம் வலுவில் வருவார். ஆத்மதர்ம ஜோதியை இழுக்கின்ற சக்தி சீஷனிடம் பலமாகவும் பூர்ணமாகவும் விளங்கும் போது இழுக்கப்படும் சக்தியும் வலுவில் அந்த ஜோதியை அனுப்பிவிடுகிறது. இது இயற்கையாகவே நடைபெற்று வரு கிறது.

ஆனாலும், வழியில் பெரிய ஆபத்துக்கள் உள. ஒவ் வொரு சந்தர்ப்பங்களில் ஜீவர்களுக்கு விசேஷ உணர்ச்சி கள் தோன்றும். நமது வாழ்க்கைகளில் அவ்விதம் பல தடவைகள் தோன்றுவதை நாம் பார்க்கலாம். நாம் மிகுதி யாக அன்பு செலுத்திவந்த ஒருவர் இறந்துபோகிறார். உடனே நமக்கு ஒரு அதிர்ச்சி உண்டாகிறது. இவ்வுலகமே நம்மிடமிருந்து நழுவிப்போவதாகத் தோன்றுவதோடு ஏதேனும் உயர்ந்ததாகவும் நித்தியமாகவுமுள்ள வஸ்து வேண்டும் என்ற இச்சையும் அப்போது உண்டாகக்கூடும்; ஆத்மானுபவம் வேண்டும் என்ற அவாவே அது. இவ்வித உணர்ச்சியை உண்மையான ஞான இச்சை யென்று தவ றாக நினைத்துவிடுவோம். சிறிது நாட்களுக்குள் இந்த உணர் ச்சி மறைந்துவிடுகிறது; முன் ஸ்திதிக்கு வந்துவிடுகிறோம். இவ்விதம் சந்தர்ப்ப வேற்றுமைகளால் ஏற்பட்டுச் சிறிது நேரமே நிற்கக்கூடியதாகிய இந்த உணர்ச்சிகளை உண்மை யான ஞான இச்சையென்று நாம் நினைக்கும் வரையில் ஜீவன் தாழ்ந்த நிலையில் இருப்பவனே. ஆதலால், இவ்வித

சுபாபமுள்ளவனுக்கு ஜீவனை ரட்சிக்கத்தக்க உபதேசம் செய்வதற்கு ஆசாரியன் கிடைக்கமாட்டான். உண்மையான ஞானதாகம் இடைவிடாமல் எப்போதும் எவ்வித சந்தர்ப்பங்களிலும் மாறாமல் இருந்துகொண்டிருக்கும். ஆதலால், எப்போதாவது நாம் ஆத்மோபதேசம் வேண்டுமென்று விரும்பி அது பலிக்கவில்லையென்று தோன்றினால் உடனே நம்மையே சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். 'நம் ஹிருதயத்தில் தோன்றிய இச்சை ஸ்திரமாக உள்ளதா?' என்று பார்க்கவேண்டும். அப்போது அநேகமாக எல்லோருக்குமே விளங்கும்; ஆத்மோபதேசத்திற்கு நாம் தகுதியற்றவர்கள் என்றறிவோம். ஏனெனில், இச்சை ஸ்திரமாக இல்லையென்றறிவோம். இவ்வளவு வரையில் சிஷ்யனுடைய லட்சணங்களில் உள்ள குறையைப்பற்றிக் கூறினோம்.

இதுபோலவே ஆத்மோபதேசம் செய்யவரும் குருவைப்பற்றியும் ஜாக்கிரதைவேண்டும். அறிவினத்தில்—அஞ்ஞானத்தில்—ஆழ்ந்திருக்கும் பலர் தம் ஹிருதயத்தில் மிக்க மமதையுள்ளவர்களாய் மதவிஷயங்களைப்பற்றிச் சகலமும் தமக்குத் தெரியுமென்று நினைத்துவிடுகின்றார்கள். நினைப்போடு நின்றுவிட்டால் பிறருக்காவது கேடு நேராமலிருக்கும். இவர்கள் தாம் கெட்டதுமன்றிப் பிறருக்கு வழி காட்டவும் கிளம்பிவிடுகின்றார்கள். குருடனுக்குக் குருடன் கோல் கொடுத்து வழிகாட்டிவரும் கொள்கைபோல் இருவரும் அஞ்ஞானமென்ற பள்ளத்தில் விழுகின்றார்கள். "மூடர்கள் அஞ்ஞானத்தில் ஆழ்ந்து அதுவே ஞானமென்று கர்வம் கொண்டு பயனற்ற அறிவால் பூரிப்படைந்தவர்களாய் இங்குமங்கும் அலைந்து தள்ளாடி முடிவில் குருடனுக்குக் குருடன் வழிகாட்டியதுபோல் ஆகின்றார்கள்." இவ்வித மனிதர்கள் உலகில் நிறைந்திருக்கிறார்கள். ஒவ்வொருவனும் ஆசாரியனாகப் பார்க்கின்றான். ஒவ்வொரு பிச்சைக்காரனும் லட்சக்கணக்கான டாலர்களை யாசகத்தில் செலவிட விரும்புகின்றான். இவ்வித பிச்சைக்காரர் எப்படி மூடர்களோ அதே மாதிரி அவ்வித ஆசாரியர்களும் ஆகின்றார்கள்.

அப்படியானால் குரு அல்லது ஆசாரியனை நாமறிவது எப்படி? இந்தக் கேள்விக்குப் பதில் வேண்டியதில்லை. சூரியனைக் கண்டுபிடிப்பதற்கு ஒருவிளக்கை ஏற்றிப் பார்க்கவேண்டாம். உதயமானவுடன் நம் முன்னர் சூரியன் தானே விளங்குகிறான்; அதுபோலவே, நமக்கு உதவிபுரிய ஆசாரிய புருஷன் தோன்றும்போது மெய்ப்பொருளின் ஜோதி ஜீவன் மீது விழுவது அதற்கு நன்றாகத் தெரியும். இது சத்திய வஸ்துவென்று ருஜுப்படுத்த வேறொரு வஸ்து தேவையில்லை; அது சுயம்ஜோதியல்லவா? நமது சொரூபமெங்கும் ஊடுருவிப் பாய்ந்துவிடுகிறது. இந்த ஜகத் முழுமையும் "இதுவே மெய்ப்பொருள்" என்று தெளிவாகக் குறித்துக் காட்டிவிடுகிறது. உலகில் தோன்றி மிகச் சிறந்த ஆத்மோபதேசம் செய்துவந்த ஆசாரியர்களிடம் சத்சொரூபமும் ஞான ஜோதியும் சூரியனிடம் ஒளி விளங்குவதுபோல் விளங்கிவந்தன. அதனால் மனிதர்களெல்லோரும் அப்படிப்பட்டவர்களைத் தெய்வங்களென மதித்து வணங்கிவருகிறார்கள். ஆனால், அவ்வளவு சிறந்த மகா புருஷர்களைக்காட்டிலும் கீழ்நிலையிலுள்ள ஆசாரியர்களிடமும் நாம் உபதேசம் பெற்றுப் பலனடையலாம். ஆனால், நாம் உதவிபெறக்கூடிய ஆசாரியரிடம் உள்ள யோக்கியதைகளைக் கண்டுபிடிக்கத் தக்க மனோசக்தி நம்மிடம் இல்லையாதலால், சிஷனுக்கு இருக்க வேண்டியதைப்போல் ஆசாரியனுக்கும் சில லட்சணங்கள் அவசியம் வேண்டும். முதலில் சிஷனுக்கு வேண்டிய லட்சணங்களைக் கூறுகிறேன்.

பரிசுத்தநிலை, அறிவு, வேண்டுமென்ற உண்மையான தாகம், விடாமுயற்சி முதலிய குணங்கள் மாணாக்கனிடம் அவசியம் இருத்தல்வேண்டும். பரிசுத்தக் குறைவுள்ள ஜீவனிடம் ஆத்மப்பயிற்சி ஏற்படாது. மனோவாக்குக் காயங்களில் பரிசுத்த குணம் அவசியம் நிறைந்திருக்கவேண்டும். அப்போதுமாத்திரமே ஆத்மப்பயிற்சி உறுதிப்படும். பிறகு அறிவையடைய தாகம் வேண்டும். 'நாம் விரும்பியதை நாம் அடைகிறோம்' என்பது ஒரு புராதன மொழி.

மனப்பூர்வமாக இச்சித்த எவ்வித பொருளும் நமக்குக் கிடைப்பதில்லை. ஆத்மானுபவம் வேண்டுமென்றதாகயிருப்பதுமிக அருமையேதான். சுலபமாக அது வந்துவிடுமென்று நினைக்கவேண்டாம். மதசம்பந்தமான வாதங்களைக் கேட்பதாலும். மதவிஷயங்களடங்கிய நூல்களைப் படிப்பதாலும் ஹிருதயத்தில் ஆத்மப்பயிற்சி வேண்டுமென்ற அவா நிறைந்திருப்பதாக நினைத்தல் கூடாது. இவைகள் போதுமான ருஜுக்களல்ல. இடைவிடாத சச்சரவும் போராட்டமும் இருக்கவேண்டும். நம்மிடமுள்ள கீழான (மிருக) சுபாவங்களுடன் விடாப்பிடியாக எதிர்த்து நிற்கவேண்டும். இவ்விதம் விடாமல் போராடி வருவதன் பயனாக ஞானதாகம் நம்மிடம் வேரூன்றி நாம் பயன் பெறுவோம். ஒன்றிரண்டு நாட்களிலும் வருஷங்களிலும் ஆகிற காரியமல்ல இது. ஒரு ஜன்மத்தில் முடியாமற் போகலாம். பல ஜன்மகாலம் இந்தப் போராட்டம் நடைபெறக்கூடும். சிலருக்குச் சீக்கிரம் பலன் கிடைக்கலாமாயினும் ஒவ்வொருவரும் மிகப் பொறுமையுடன் காத்திருக்கத் தைரியங்கொள்ளவேண்டும். எவ்வளவு காலமானாலும் காத்திருக்கத் தைரியங் கொள்வது முக்கியமாக வேண்டிய குணம். இவ்வளவு விடாமுயற்சியுடன் வாழ்க்கைப்போரை நடத்த ஆரம்பித்த மாணுக்கன் முடிவில் ஆத்மானுபவமாகிய வெற்றி பெறுவது நிச்சயம்.

இனி ஆசாரியரது லட்சணங்கள் எவை யென்று கவனிப்போம். சாஸ்திரங்களின் கருத்தை ஆசாரியன் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். உலகில் எல்லோருமே வேதபுத்தகங்களையும், கோரானையும், பைபிளையும் படித்து விடுகின்றார்கள். அவர்கள் படிப்பதெல்லாம் எவ்வளவு? வார்த்தையளவே யென்று சொல்வோமா? அல்லது வாக்கியங்களின் அமைப்பு, ஒழுங்கு, தாதுப் பொருள், இதர பாஷைகளுடன் இந்த பாஷைக்குள்ள சம்பந்தம் முதலியவைகளைக் கற்றுத் தேர்ந்தவர் என்போமா? எப்படிக் கூறினும் இவைகள் எல்லாம் மதமென்பதன் எலும்புகளேயல்லவா? சொற்களின் லட்சணங்களைப்பற்றியே அதிகம் கிளறிக்கொண்டிருக்கும் ஆசாரியர் சொற்களின் பலத்திலே

மனதைச் செலுத்தியவராய், சாஸ்திரங்களின் கருத்தை
இழந்துவிடுகிறார். உண்மையான ஆசாரியரிடம் சாஸ்திரங்க
ளின் கருத்தை யறியும் சக்தி யிருக்கவேண்டும். சொற்க
ளின் மயக்கத்தில் அகப்படுவது ஆசாரியரின் லட்சணமல்ல.
சாஸ்திரங்களின் வாசகங்களென்னும் பெரிய வனத்திற்குள்
மானிடர் மனம் புகுந்துகொண்டால் வெளியே வர வழி
தெரியாமல் தவிக்க நேரிடும். "மனது வினோத குணங்க
ளுடன் அலைந்து திரிவதற்குக் காரணம் சொற்களென்ற
பெரிய வனமேயாம்." என்று விவேக சூடாமணி சொல்வது
குறிப்பிடத்தக்கது. "சொற்களைப் பலவிதங்களில் சேர்த்
துப் படிப்பது, வசன நடையில் பலவித அழகுகள் அமைத்
துப் பேசுவது, நூல்களில் அடங்கிய விஷயங்களைப் பலவித
மாக விளக்கிக் காட்டிச் சாமர்த்தியத்தை விளங்கச் செய்வது,
கற்றவர்களது தர்க்கங்கள் ஆகிய இவையெல்லாம் யாது
பயனை விளைக்கும்? புத்தியைக் கூர்மையாக்கிப் பெருமைப்
படுத்த இவைகள் உபயோகமாகலாம். ஆத்மானுபவத்தில்
முன்னேற்றமடைய அவை பயன்படுவதில்லை. சொற்
களுக்குப் பலவித பொருள்களைப் போதித்து மதவிஷயங்க
ளைப் புகட்ட விரும்புகிறவர்கள் தமது கல்விப் பயிற்சியைப்
பிறர் அறிய விருப்பமுடையவர்களே யன்றி உண்மையான
ஆசாரியராக மாட்டார்கள். தாம் பெரிய வித்வான் என்று
உலகம் தம்மைப் புகழவேண்டு மென்பதே அவர்கள்
கொள்கை. உலகத்தில் பெரிய ஆசாரியர்களாக இருந்த
எவரும் நூல்களுக்கு இவ்வாறு விரிவாகப் பொருள் கூறிய
தில்லை; கருத்தைத் திருத்தி மாற்றவும் முயற்சி யெடுத்துக்
கொண்டதில்லை. சொற்கள் இவை, அவற்றின் தாதுப்
பொருள் இவை என்று விளையாட அவர்கள் முன்வந்த
தில்லை. சாஸ்திரங்களில் அடங்கிய ஜீவாதார விஷயங்களை
உபதேசம் செய்து அவர்கள் சும்மா இருந்துவிட்டனர்.
உபதேசம் செய்யக்கூடிய சக்தி தம்மிடம் இல்லாதவர்கள்
நூல்களிலிருந்து ஒரு வார்த்தையை வெளியே எடுத்து
அந்த வார்த்தையை விளக்க மூன்று வால்யூம் புஸ்தகங்கள்
எழுதிவிடுவார்கள். "அந்த மொழி இங்கு உற்பத்தியாயி

ற்று. முதன்முதலில் இவர்கள் உபயோகித்தனர்; அவர்கள் இன்ன உணவை ஏற்றுக்கொண்டு ஜீவித்தவர்கள்; இவ்வளவுகாலம் தூங்கி வந்தவர்கள் என்று பல விவரங்களைப் புகட்டுவார்கள்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு கதை செய்வது வழக்கம். சில மனிதர்கள் ஒரு மாமரத்தோப்பிற்குள் புகுந்தனர். அங்கு மரங்களிலுள்ள கிளைகளையும் கொம்புகளையும் இலைகளையும் எண்ணிப்பார்க்க ஆரம்பித்தனர். அவற்றின் நிறம், உருவம் முதலிய ஒவ்வொன்றையும் விடாமல் குறித்துக் கொண்டு பிறகு அந்த விஷயங்களைப்பற்றி மிகவும் சாமர்த்தியமாகத் தர்க்கம் நடத்தினர். இந்த விஷய அறிவு அவர்களுக்கு மிகுந்த திருப்தியைக் கொடுத்தது. அப்படியிருக்கும்போது அவர்களுள் ஒருவன், மற்றவர்களைவிட அதிக புத்திமான், அவைகளைப்பற்றி லட்சியம் செய்யாதவனாய் மாம்பழத்தைச் சாப்பிட ஆரம்பித்தான். அவன் புத்திமானல்லவா? ஆதலால், இலைகளை எண்ணும் காரியமும் குறிப்பெடுத்துத் தர்க்கம் செய்வதும் மற்றவர்கள் கைக்கொள்ளட்டும். அந்த வேலைகளுக்கும் இடமிருக்கிறது. அவைகளும் உபயோக முள்ளவைகள்தாம். ஆனால், ஆத்ம தர்ம விஷயங்களைப்பற்றிப் பேசும் இடங்களில் அவை வேண்டியதில்லை. அவ்வாறு இலைகளை எண்ணுகிறவர்களுக்குள் பலமாக ஆத்மானுபவம் படைத்தவர்கள் கிடைக்கமாட்டார்கள். வாழ்க்கையில் மிக உன்னத பயனை விளைவிக்கக்கூடிய மதவிஷயத்தில் அந்த வேலை வேண்டியதில்லை. உண்மையான பக்தனாக நீ இருக்க விரும்பினால் "ஸ்ரீகிருஷ்ணபகவான் மதுரையில் பிறந்தாரா? விராஜா நகரில் பிறந்தாரா?" என்று விசாரிக்கவேண்டியதில்லை. "அவர் எப்படி வாழ்க்கையை நடத்தினார்? அல்லது எப்போது கீதையை உபதேசம் செய்தார்?" என்று விசாரித்துக்கொண்டிருக்க வேண்டாம். கடமை, பக்தி என்னும் அழகிய பாடங்கள் கீதையில் காணப்படுகின்றன. அவற்றை அனுபவத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்னும் ஆசை உள்ளிருந்து உங்

களை எப்போதும் தூண்டிக்கொண்டிருக்க வேண்டும்; உணர்ச்சி முழுமையும் அந்த அவா நிறைந்திருக்கவேண்டும். மற்றப்படி கீதையைப்பற்றிய விவரமும் அதை எழுதியவர் எவர் என்ற விஷயமும் கற்றவர்கள் அனுபவிப்பதற்கேயாம். கல்விப்பயிற்சி வேண்டியவர்கள் அவற்றை அடையட்டும். அவர்களுடைய கல்வித் திறமைகளைப் பார்த்து "சாந்தி, சாந்தி" என்று சொல்லி முடித்துவிட்டு நாம் பழங்களைச் சாப்பிடுவோம்.

ஆசாரியருக்கு வேண்டிய மற்றொரு லட்சணம் பாப மற்ற வாழ்க்கை. "ஒரு ஆசிரியனுடைய குணம் எப்படியிருந்தால் என்ன? அவர் பரிசுத்தவானு என்று ஆராய்வதன் அவசியமென்ன? அவர் கூறும் மொழிகளை நிதானித்து அறிந்துகொண்டு சாரத்தை எடுத்துக்கொள்வோம். அவ்வளவு போதாதா?" என்று கேட்கின்றார்கள். இது சரியல்ல. பிரபஞ்சதர்மங்களாகிய ரசாயனம், சக்தித்துவம் முதலியவற்றில் ஒன்றைப்பற்றி ஒருவர் எனக்குப் போதிக்கவந்தால் அவரது குணங்கள் எப்படியிருந்தாலும் சரியே. ஏனெனில், இந்தப் பாடங்களுக்கு வேண்டியதெல்லாம் புத்தியின்மூலம் அடையப்படும் அறிவு. ஆத்மசம்பந்தமான சாஸ்திரங்களிலோ இது போதாது. பரிசுத்த குணமில்லாத ஜீவர்களிடம் ஆத்மஜோதியைக் காண முடியாது. ஆதலால், மாசடைந்த மனதையுடையவன் எவ்விதம் மதத்தை உபதேசம்செய்யமுடியும்? ஆத்மசம்பந்தமான சத்விஷயத்தை அடையவும், அடைந்தபின் பிறருக்குப் போதிக்கவும் பரிபூர்ண பரிசுத்த ஹிருதயம் வேண்டும். ஜீவன் பரிசுத்தனாக இல்லாமற்போனால் அப்பாலுள்ள வஸ்துவின் சாயை அல்லது கடவுளின் காட்சி ஏற்பட முடியாது. ஆதலால், மதபோதனை செய்யும் ஆசாரியர் எவ்வாறு தம் வாழ்க்கையை நடத்துகிறார் என்று முக்கியமாகக் கவனிக்கவேண்டும். பிறகுதான் அவர் கூறும் மொழிகளைக் கேட்கவேண்டும். அவருடைய சொற்கள் பயன்படவேண்டுமானால், மதவிஷய உண்மையைச் சிஷனுக்குப்புகட்டும் சக்திவேண்டு

மானால் ஆசாரியரிடம் பரிபூர்ண பரிசுத்தகுணம் வேண்டும். உண்மையான ஆத்மசக்தி தம்மிடம் கிடையாதென்றால் ஆசாரியர் சிஷனுக்கு எதைப் புகட்டுவது? ஆசாரியர் மனதில் மிகப் பலமான ஆத்மசக்தி நிறைந்திருந்தால்மாத்திரம் சிஷனுடைய மனத்திலும் அதே சக்தியைப் புகட்ட முடியும். புத்திக்கூர்மை முதலிய குணங்களைச் சிஷனிடம் விர்த்தி செய்வது ஆசாரியர் செய்யும் வேலையல்ல; உண்மையில் ஏதோ ஒரு புதிய வஸ்துவையே ஆசாரியர் சிஷனிடம் புகட்டவேண்டும். புதிதாக ஒருவித செல்வாக்கைச் செலுத்திக்கொண்டு ஏதோ ஒரு சக்தி சிஷனிடம் வந்து சேர்வது உண்மையாக இருக்கிறது ஆதலால், ஆசாரியரும் பரிசுத்த குணம் படைத்தவரா யிருக்கவேண்டும்.

பிறகு ஆசாரியரின் எண்ணம் எப்படியென் றறியவேண்டும். சுயநலம் பொருந்திய எண்ணத்துடன், பணம் அல்லது புகழ்வேண்டுமென்ற கருத்துக்கொண்டு ஆசாரியர் போதிக்கலாகாது. அன்பு மாத்திரமே நிறைந்தவராய், மனிதவர்க்கம் பிழைக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தால் மாத்திரம் தூண்டப்பட்டு, ஆசாரியர் வேலை செய்ய வேண்டும். ஏனெனில், அன்பின் வழியாக மாத்திரமே ஆத்மசக்தி பிறரிடம் செல்லக்கூடியது. தனத்திற்காவது பெயருக்காவது ஆசைகொண்டு எவ்வித சுயநலம் பொருந்திய சிந்தையும் குறுக்கிடலாகாது. அப்படிக் குறுக்கிட்டால் அன்பென்பது அழிந்து ஆத்மசக்தி செல்வதற்குப் பாதையும் தடைப்பட்டுவிடும். அன்பே கடவுள், இவ்விதம் அன்பும் கடவுளும் ஒன்று என்றறிந்தவர் மாத்திரமே கடவுள் தத்துவத்தைப் போதிக்கவல்லவர்.

ஆதலால், மேலே சொல்லப்பட்ட லட்சணங்கள் ஆசாரியரிடம் தென்படுமானால் உனக்கு நன்மை யுண்டு; இல்லையானால் அந்த ஆசாரியரிடம் நீ உபதேசம் பெறுவது நல்லதல்ல. ஏனெனில், ஆசாரியரிடம் ஆத்மப்பயிற்சி இல்லாவிட்டால் அவர் உன் ஹிருதயத்தில் உலகப் பற்றையே உண்டாக்கிவிடுவார். இந்தப் பெரிய ஆபத்தினின்று நீ

தப்பவேண்டும். கற்றவராகவும், மாசு மறு அற்றவராகவும், காமவிகாரங்க ளற்றவராகவும் உள்ளவர் எவரோ அவரே பிரம்மத்தை அறிந்தவர்களுக்குள் பெரியவர்.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களிலிருந்து தெரிவ தென்ன ? நாம் எந்த இடத்திலும் எவர் மூலமாகவேண்டு மானாலும் மதவிஷயத்தில் பக்தியைச் செலுத்தவும் அறிந்து அநுபவிக்கவும் முடியாது. “கற்களில் உபதேசம் அடைய லாம், ஓடுகின்ற அருவிகளில் நூல்கள் படிக்கலாம், தோன்றக்கூடிய வஸ்துக்களின் மூலமாக நன்மை யடைய லாம்.” என்று கூறுவதெல்லாம் கவிகளுக்கு லட்சணம் தான்; ஆனால், மனிதனிடம் ஏற்கனவே உண்மைப்பொருள் இல்லாவட்டால் மேற்சொல்லிய வஸ்துக்களிலிருந்து எதை யும் அடைய முடியாது. கற்களும் அருவிகளும் எவருக்கு உபதேசம் செய்கின்றன. மானிட ஹிருதயத்திற்கல்லவா உபதேசம் வேண்டும், பரிசுத்த ஹிருதயத்தில் ஜீவதாது துரிதமாகத் துடித்துக்கொண்டிருக்கும்போது ஞான ஒளி வந்து குடிகொள்ளவேண்டும். ஹிருதயகமலம் திறப்ப தற்கு வேண்டிய ஒளி அல்லது ஜோதி எப்போதும் நல்ல ஞானியாகிய ஆசாரியரிடமிருந்துதான் வரவேண்டும். இவ் விதம் ஹிருதயகமலம் திறந்த பிறகு கற்கள், அருவிகள், சூரிய சந்திர நட்சத்திரங்கள் முதலியவற்றினின்றும் ஜகத்தி லுள்ள வேறு வஸ்துக்களினின்றும் உபதேசங்களைப் பெற முடியும். ஹிருதயகமலம் இவ்விதம் ஆசாரியரால் திறக் கப்படாதவரையில் கல்லில் கல்தான் தெரியும், நதியில் நதியே தென்படும்; வேறு எவ்வித அழகும் அவற்றில் தோன்றாது. குருடன் பொருட் காட்சிச்சாலையில் சென் றான் என்றால் ஏதேனும் பயனுண்டோ? குருடனுக்குக் கண் கிடைத்த பிறகே பொருட் காட்சிச்சாலையின் அழகு அவனுக்கு விளங்கும்.

மதவிஷயானுபவம் வேண்டுமென்று விரும்புகிற சிஷ னுக்குக் கண் திறக்க ஆசாரியன் வேண்டும். முன்னோர்க ளிடம் பின் சந்ததியார்கள் வணக்கம் செலுத்தவேண்டி

பது அவசியம். அதுபோலவே, ஆசாரியரிடம் நாம் பக்தி,
வணக்கம், தாழ்தல், மரியாதை முதலிய குணங்களைக்
காட்டவேண்டும். இந்தக் குணங்கள் இல்லாவிட்டால் நம்
மிடம் மதவிஷயானுபவம் பலமாக ஊன்றாது. ஆசாரிய
ருக்கும் சிஷனுக்கும் இவ்வித சம்பந்தம் எங்குப் பலமாக
விளங்குகிறதோ அங்கேதான் மிகப்பலமான ஆத்மசக்தி
பொருந்தியவர்கள் கிடைக்கிறார்கள் என்பதைக் கவனிக்க
லாம். இவ்வித சம்பந்தத்தை வளர்க்காத தேசங்களில் மதா
சாரியர் சாமான்ய உபந்யாசம் செய்பவராக மாத்திரம்
விளங்குகிறார். அத் தேசங்களில் ஆசாரியர் தமக்குத் தகுதி
யான வெகுமதியை எதிர்பார்க்கிறார். சிஷனும் தன் புத்
திக்குள் பல விஷயங்கள் நிரம்பவேண்டுமென்று எதிர்பார்க்
கிறான். பிறகு இருவரும் பிரிந்துவிடுகிறார்கள். ஒருவரை
யொருவர் மறந்துவிடுகிறார்கள். இந்த நிலையில் ஆத்மப்
பயிற்சியென்பது சூன்யமாகிவிடுகிறது. ஆத்மதர்மம் ஒருவ
ரிடம் அமைந்திருக்கவு மில்லை; மற்றொருவரிடம் கொடு
படுவது மில்லை. அவ்வித ஜனங்களுக்கு மதமும் ஒரு வியா
பாரச் சரக்குப்போலாகிறது. பணத்தைக் கொடுத்து மத
விஷயம் அறியலாம் என்று நினைக்கிறார்கள். இவ்வளவு
இலகுவாக மததர்மம் கிடைத்துவிடுமோ? ஒருக்காலும்
கிடைக்காது.

மனிதனுடைய அறிவும் ஞானமும் உன்னத பலனைக்
கொடுக்கும்போது மததர்மமாகின்றன. இந்தத் தர்மம் நூல்
களைப் படிப்பதால் அறிய முடியாது. உலகில் எல்லா மூலை
முடுக்குகளிலும் நீங்கள் அலைந்து திரிந்தாலும், ஹிமாசல
மெங்கும் திரிந்து வந்தாலும், உலகிலுள்ள வேறெந்த மலைக
ளிலேறித் திரிந்தாலும், கடலின் ஆழத்தைக் கண்டுபிடித்தா
லும், ஒவ்வொரு மலையையும் குடைந்து பார்த்தாலும்,
வனாந்தரங்களை யெல்லாம் போய்ப் பார்த்துவந்தாலும் யாது
பயனுண்டு? உங்கள் ஹிருதயகமலம் திறந்து ஆசாரியன்
சமீபத்திலிருந்தாலன்றி ஆத்மானுபவம் உங்களுக்கு அகப்
படாது என்பது நிச்சயம். ஆதலால், கடவுளருளால் உங்

களுக்கு ஆசாரியர் கிடைக்கும்போது அவரிடம் குழந்தையைப்போல் பழகிக், கபடமின்றி நம்பிக்கையுடன் அவருக்கு ஊழியம் செய்யவேண்டும். ஆசாரியருடைய செல்வாக்கு உங்களிடம் தாராளமாகச் செல்லட்டும். அவர் இஷ்டம் போல் உங்கள் மனம் நடக்கட்டும். அவரைக் கடவுளென்றே பாவனை செய்யுங்கள். ஆசாரியரிடம் இவ்வித அன்பும் பக்தியும்கொண்டு மெய்ப்பொருள் அறிவை அடைய விரும்புகிறவர் எவரோ அவர் மாத்திரமே தெய்வத்தன்மை ஆத்மதத்துவம் முதலியவற்றின் அரிய பெரிய ரகஸ்யத்தை அறிய முடியும்.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

கர்மயோகம்

இதில் அடங்கிய விஷயங்களின் விபரம்:—

1. குணம் உண்டாக்கப்படும் விதம், 2. சுதர்மம் மகத்தான சக்தி பொருந்தியது, 3. வேலை செய்வதன் ரகசியம், 4. கடமை என்பது யாது? 5. நாம் நமக்குத்தான் உதவிக் கொள்ளுகிறோம், உலகத்திற்கு உதவுவதில்லை, 6. தன்னய மறுப்பின் பூர்த்தியே பற்றின்மையாம், 7. முக்திநிலை. 8. கர்மயோகத்தின் முடிவு. இதன் விலை ரூபா 1.

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர்

வேதாந்த தத்துவம்

வேதாந்த தத்துவமென்றால், இந்நூலில் உபநிஷத்துக்களின் இரஹஸ்யங்கள் நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. இது வேதாந்த தத்துவத்தின் உண்மை நிலையை உபதேசிப்பதுடன் இதில் ஆங்கிலேயர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஸ்வாமிகள் அளித்த விடைகளும், அமெரிக்கா, கலாசாலை மாணவர்கட்கு ஸ்வாமிகள் அளித்த விடைகளும் அடங்கிய சிறந்த தத்துவநூல். இதுவரையில் தமிழில் வெளிவராதது ஆங்கிலத்தில் மிகவும் சிறப்பாக எழுதப்பெற்றது. படத்துடன் விலை அணா 8.

ஐந்தாவது அதிகாரம்

அவதார புருஷர்கள்

"கடவுளின் மகிமை பேசப்படுமிடம் பரிசுத்தமடைகிறது" என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் கடவுளின் மகிமையைப் பேசுகிறவன் எவ்வளவு பரிசுத்தமடைவான் பாருங்கள். ஆதலால், உண்மையான ஆத்ம ஜோதியைப் பிறருக்கு அளிக்கக்கூடிய மகிமையுள்ளவனிடம் எவ்வளவு மரியாதையுடன் நாம் நெருங்கவேண்டும் என்று யோசித்துப்பாருங்கள். ஆத்மவஸ்துவைப் போதிக்கத்தக்க ஆசாரியர்கள் மிகச் சொற்பமாக உலகில் இருந்தபோதிலும் ஒருபோதும் இவ்வித மஹான்கள் இல்லாமற் போவதில்லை. இவ்வித மஹா புருஷர் ஒருவரும் இல்லாமற் போகும் காலம் வந்தவுடன்—எப்போதாவது வந்தால்—உலகம் மிகக்கொடிய நரகமாக மாறி அழிந்துபோகும் வழியில் செல்ல ஆரம்பிக்கும். அவ்வித ஆசாரிய புருஷர்கள் மனிதவர்க்கத்தில் மிகச் சிறந்தவர்களே. "யாதொரு இச்சையுமில்லாத கருணாசாகரம்" என்று அவர்களைச் சொல்லலாம். ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத்கீதையில் கூறுவதைக் கேளுங்கள். "நான் எல்லோருக்கும் ஆசாரியன் என்றறியுள்கள்." பரவஸ்துவாகிய ஈசுவரனது அவதாரங்கள்—ஸ்ரீ கிருஷ்ண பகவானைப்போன்ற அவதார புருஷர்கள்—சாதாரண ஆசாரியர்களெல்லோரையும்விட மிக மேலான நிலையிலும் கண்ணியமான பதவியிலும் வசிப்பவர்களாவார்கள். இவர்கள் தமது ஸ்பர்ச மாத்திரத்தால்—சிற்சிலர் தம் இச்சா மாத்திரத்தால்கூட — ஆத்மவித்தையைப் புகட்டிவிடச் சக்தி பொருந்தியவர்கள். மிகமிகக் கடைப்படியில், மிக இழிந்த நிலையில் உள்ளவனும் இவர்களுடைய கட்டளையால் ஒரு விநாடிப் பொழுதில் முனிவனாக மாறி

விடுகிறான். ஆத்மவித்யா போதகர்களுக்கும் ஆசாரியர்களாய் இவர்கள் விளங்குகிறார்கள். மனித சொரூபத்தின் மூலமாகக் கடவுளின் உன்னத ஆவிர்ப்பவமென்று அவர்களைச் சொல்லிவிடவேண்டும். அவர்கள் மூலமாக அன்றி வேறுவிதமாக நாம் கடவுளைக் காண முடியாது. மனிதன் அவர்களை வணங்கியே தீரவேண்டியவனாகின்றான்; இவர்களைமாத்திரமே மனிதன் வணங்கித் தீரவேண்டும்.

கடவுள் இவ்வாறு மானிட உருவங்கொண்டு ஆவிர்ப்பவிக்கும்போது மாத்திரமே மனிதன் கடவுளைக் காண முடியும். வேறு எவ்விதமாகவும் கடவுள் தென்படுவதில்லை. ஏன் என்பீர்களோ! கேளுங்கள்! வேறுவிதமாகப் பார்க்க முயல்வோமானால் நாம் எவ்வித உருவத்தை மனதில் நினைப்பது? நாம் நினைக்கக்கூடிய உருவமெல்லாம் கடவுளின் மிகக்கொடிய சொரூபமாகவே முடியும். அவற்றையே கடவுள் என்று வணங்குவோம். ஒரு அஞ்ஞானியைச் சிவபிரானது விக்கிரகம் செய்யுமாறு ஒரு காலத்தில் கட்டளையிட்டார்களாம். பல நாட்கள் மிகுந்த கஷ்டப்பட்டபின் அவன் ஒரு குரங்கின் விக்கிரகம் செய்து முடித்தானாம். இப்படி ஒரு கதை யுண்டு. (பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காக முடிந்தது.) இதன் கருத்தென்ன? கடவுளின் உண்மையான சொரூபத்தை—பரிபூரண பிரம்ம சொரூபத்தை—உள்ளபடி அறிய நாம் செய்யும் முயற்சியெல்லாம் மிகவும் துக்ககரமாக முடிவடைகின்றன. தன் ஜீவ சொரூபத்தினின்று முற்றிலும் வேறுபட்டதாகக் கடவுளைக் காண்பது மானிட இயற்கையி லில்லை. நாம் மானிட இயற்கைக்கு மேலே எழும்பக்கூடிய காலமும் எப்போதாவது வரலாம். அப்போது கடவுளின் உண்மைச் சொரூபம் நமக்கு விளங்கும். ஆனால், தற்காலமிருக்கும்வண்ணம் பந்த நிலையில் நாமிருக்கும்வரையில் கடவுளை மனிதர்மூலமாக மானிட உருவத்தில்தான் நாம் பார்க்கவேண்டும். எவ்வளவு வேண்டுமானாலும் பேசிவிடலாம்; எவ்வளவு வேண்டுமானாலும் முயற்சிசெய்து பாருங்கள். மானிட சொரூபத்திலல்லாமல்

வேறு சொரூபத்தில் நீங்கள் கடவுளை நினைக்கவும் முடியாது. பத்தி சாதுர்யமான உபந்யாசங்கள் கடவுளைப்பற்றி நீங்கள் பேசலாம் ; பகுத்தறிவே சகலமும் என்று வாதாடுகிறவர்களாக நீங்கள் இருக்கலாம். கடவுளின் அவதாரங்களைப் பற்றிய சரித்திரங்களும் கதைகளும் அபத்தம் என்று ருஜுப்படுத்தி நீங்கள் திருப்தியடையலாம். ஆனால், சாமான்ய அறிவைக்கொண்டு அனுபவ மெப்படி யிருக்கிறதென்று கவனித்தால் உண்மை விளங்கிவிடும். இந்தக் கட்சிகளில் எவ்வித சாரமும் காண்பது அரிதாகிவிடும். கடவுளின் அவதாரங்களை வணங்குவதைக் கண்டித்து எவரேனும் உபந்யாசம் செய்வதை நீங்கள் இனிக் கேட்க நேர்ந்தால், அவரைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள். கடவுளைப் பற்றி அவருடைய கொள்கை யென்னவென்று கேட்டுவிடுங்கள். எங்கும் வியாபி, சர்வ சக்திமான் என்னும் பல சொற்களுக்கு அவர் கூறும் பொருள்களைக் கேட்டுவிடுங்கள். அந்தச் சொற்களை எழுத்துக்கூட்டிவிடுவார்கள். இதைத் தவிர வேறொன்றும் அவர்களுக்குத் தெரியாது. அச் சொற்களைப்பற்றி அவர் எவ்வித கருத்தும் கொண்டவர்களல்ல. ஏதேனும் பொருள்கள் கூறவந்தாலும் அவற்றில் அவரது சுபாவம்—மனோபாவனை—நிறைந்து விளங்கும். ஒரு புத்தகம் படிக்காமல் இருக்கும் சாமான்ய மனிதனைவிட இவர்கள் இவ் விஷயத்தில் உயர்ந்தவர்களல்ல வென்பது உங்களுக்கு வெளியாகும். சாமான்ய மனிதன் வாய் மூடி மௌனமாக இருந்துவிடுகிறான்; உலகத்தின் அமைதியை அவன் கெடுப்பதில்லை. மேலே சொல்லியபடி கட்சியாடுகிறவர் மனித வர்க்கத்தில் கலக்கத்தையும் துக்கத்தையும் உண்டுபண்ணுகிறார்கள்.

மததர்மமென்பது வாய்ப்பறையல்ல; நேரில் கண்டறியும் அனுபவ உண்மையாக இருப்பது மதவிஷயம். ஆதலால், வாய்ப்பறை செய்து வெற்றிபெறும் நிலைக்கும் உண்மையான உள்ளுணர்ச்சிக்கும் வித்தியாசத்தை நாம் அறிய வேண்டியது அவசியம். நமது ஜீவனிடம் ஆழ்ந்து அனுப

விக்கும் அநுபவமே மத மெனப்படுவது. இவ் விஷயத்தில் மனிதர்கள் தம் புத்தியை உபயோகித்துப் பார்ப்பது அரிதாயிருக்கிறது.

நமது மனம் ஒரு விநோதமான அமைப்பை உடையதாயிருக்கிறது. இந்த மனதின் சகாயத்தால் கடவுளை மனித சொரூபத்தில்தான் பார்க்க முடியும். எருமைகள் கடவுளை வணங்க விரும்பினால் என்ன செய்யும்? அவைகள் தம் சுபாவத்தைக்கொண்டே கடவுளும் ஒரு பெரிய எருமையென்றே பாவித்துவிடும். இது உண்மையிலும் உண்மை. ஒரு மீன் கடவுளை வணங்க நேர்ந்தால் அக் கடவுள் ஒரு பெரிய மச்சமென அதற்குத் தோன்றும். மனிதனும் கடவுளை மனித உருவத்தில்தான் நினைக்க நேரிடும். கடவுளைப் பற்றிய இவ்வித கொள்கைகளெல்லாம் மனத்தின்கண் தாமஸகுண மேலிட்டதால் ஏற்பட்டவைகளென்று நினைக்கக்கூடாது; அவ்வித குறைகள் காரணமல்ல. மனிதன், எருமை, மீன் முதலியவைகள் பலவித உருவங்களுடன்கூடி பலவித சக்திகளையுடைய பாத்திரங்கள் போன்றவை. இந்தப் பாத்திரங்களைக் கடவுளென்ற சாகரத்தில் கொண்டு போய் அமிழ்த்தினால் அந்தக் கடற்றண்ணீர் பாத்திரங்களின் ரூபங்களைத் தாங்கி அவற்றுள் நிறைகின்றன. இந்தப் பாத்திரங்களிடம் இருப்பதெல்லாம் கடவுளாகிய கடற்றண்ணீர்தான். ஆனால், பாத்திரங்களின் உருவத்துடன்தான் அத் தண்ணீர் தோன்றவேண்டும். அதுபோலவே, பல மனிதர்களும் தத்தம் மனோசக்திக்கு ஏற்ற அளவு முடிந்த வரையில் கடவுளைப்பற்றிய கொள்கையை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். இது இயற்கையாகவே உள்ள குணம். எவர்மீதும் குறை கூறுவதற்கில்லை. கடவுளைப்பற்றி நினைக்கவும் அவரை வணங்கவும் நமக்கு வேறு சாதனம்—மனதைத் தவிர—கிடையாதல்லவா?

சிலர், கடவுளை மனித சொரூபத்துடன் கூடியவராக நினைத்து வணங்குவதில்லை. அவர்கள் இருவகை. யாதொரு மதமுமின்றி—நிரீசுவர வாதியாகி—மிருகங்களுக்குச் சம

மாக இருப்பவர்கள் ஒரு வகுப்பு. முக்த புருஷர்களாகிய பரமஹம்ஸர்கள் மற்றொரு வகுப்பு. பரமஹம்ஸர்களுக்குப் பிரகிருதி முழுவதும் ஆத்மஜோதியுடன் தோன்றுகிறது. தம் மானிட சுபாவத்தைக் கடந்து அப்பால் சென்று பலஹீனத்தை யெல்லாம் போக்கிக்கொண்டு அவர்கள் விளங்குகிறார்கள். இவர்கள் மாத்திரமே கடவுளை உள்ளபடி (சுயஜோதிமயமாக) அறிய வல்லவர்கள். பிரகிருதி தர்மம் இங்கும் விளங்குகிறது. எந்த விஷயத்திலும் இரண்டு கோடியும் சேர்ந்துவிடுகின்றன. ஆழ்ந்த அஞ்ஞானியும் மிகச் சிறந்த ஞானியும் கடவுள் வணக்கம் என்ற காரியத்திலிறங்குவதில்லை. மிருகப் பிராயத்திலிருப்பவன் அறிவீனத்தால் வணங்காமலிருக்கிறான். ஜீவன்முக்தர்கள் தம்முள் கடவுளைக் கண்டனுபவித்துவருகின்றார்கள்; அதனால் கடவுளை வணங்கவேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. ஆனால், இந்த இரண்டு கோடிக்கும் இடையில் நாம் இருந்துகொண்டு கடவுளை மனித சொருபத்தில் வணங்கமாட்டேன் என்று சொல்வது பொருந்தாது. அப்படி ஒருவன் சொல்வானாகில் அவனிடம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பொறுப்பின்றிக் கண்டபடி பேசுகின்றவன் என்று மாத்திரம் அவனைக் கூறிவிடுவோம்; வேறு கடின அடைமொழிகள் கொடுக்கவேண்டியதில்லை. அப்படிப்பட்டவனுடைய மதமும் ஒழுங்கான புத்தியுள்ளவர்களுக்கு ஏற்பட்டதல்ல.

மனிதர்களுக்குள்ள இந்தக் குறையைக் கடவுள் அறிந்து மனிதவர்க்கத்திற்கு உதவி செய்ய மானிட உருவந்தாங்கி அவதரிக்கிறார். "தர்மம் தேய்ந்து அதர்மம் ஓங்கி நிற்கும்போதெல்லாம் நான் ஆவிர்ப்பவிக்கின்றேன். தர்மத்தை ஸ்தாபிக்கவும், அதர்மத்தை ஒழிக்கவும், நல்லோர்களைக் காக்கவும், யுகங்கள்தோறும் நான் தோன்றுகிறேன்." "மூடர்கள் என்னைப் பரிகசிக்கிறார்கள். நான் ஜகத்தையே ரட்சிக்கிறவன் என்பதை யறியாமல் மானிட உருவங்கொண்டு விளங்கும் என்னைப் பரிகசிக்கிறார்கள்." இவ்விதம் ஸ்ரீ கிருஷ்ணன் கீதையில் கடவுளின் அவதாரங்களைப்

பற்றிச் சொல்லியிருக்கின்றார். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு காலத்தில் சொல்லியிருப்பதைக் கேளுங்கள்: "ஒரு பெரிய அலை எழும்பும்போது சிறு கால்வாய்களும் சாக்கடைகளும்கூட நீர் நிறைந்துவிடுகின்றன. அவ்வாறு நிரப்பிக்கொள்வதற்கு அவை முயற்சி செய்யவேண்டியதில்லை. அதுபோல, அவதார புருஷன் வரும்போது ஆத்ம வெள்ளம் என்னும் பெரிய அலை உலகில் எழும்புகிறது. ஆகாயமெங்கும் தெய்விக மணம் வீசுவதை ஜனங்கள் அறிந்துவிடுகிறார்கள்."

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

வேதாந்த ரஹஸ்யம்

இதிலடங்கிய விஷயங்கள்:—

1. அநுபவ வேதாந்தம் நான்கு பாகமும், 2. யாக்ஞவல்கியரும் மைத்திரேயியும், 3. சிருஷ்டி சாஸ்திரம், 4. சிருஷ்டி, அண்டம், 5. சிருஷ்டி பிண்டம், 6 ஜீவ ஈசுவர ஜகத், 7. ஜீவனும், ஈசுவரனும், 8. அவ்யக்தமும், வியத்தமும், ஜகத் காலம்தேசம் காரண கார்யம் என்னும் சக்கரமும், 9. சாங்கிய சாஸ்திர ஆராய்ச்சி, 10. சாங்கியமும் வேதாந்தமும், 11. ஸ்வாமிகள் சரித்திரம், ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தரால் மதிக்கப்பெற்றவரும், உபகாரச்சம்பளம் பெற்றுவரும் மாஜி ஜஸ்டிஸ் திருமயிலை பாரதபூஷணம் டாக்டர் சர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது. இதில் சுவாமிகள் படமும், டாக்டரவர்கள் படமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இதன் விலை ரூபா 2.

ஆறாவது அதிகாரம்

'ஓம்' என்ற மந்திரமும் அதன் உட்பொருளும்

நாம் இப்போது கடவுளின் அவதாரங்களாக மதிக்கத்தக்கமகாபுருஷர்களைப்பற்றி ஆலோசிக்கவேண்டியதில்லை. முக்தியடைந்தவர்களான ஆசாரியபுருஷர்களாயுள்ள சித்த குருமார்களைப்பற்றியே பேசுகிறோம் என்பதை அறியவேண்டும். இவர்கள் எல்லோரும் சாதாரணமாய் ஆத்மஞான வித்துக்களை சிஷர்களிடம் ஏதேனும் ஒரு மந்திர மூலமாகவே புகட்டிவருவது வழக்கம். அந்த மந்திரத்தைத் தியானிப்பதால் சிஷன் கடைத்தேறுவான். இந்த மந்திரங்கள் என்ன கருத்தை விளக்குகின்றன? அதைத் தியானிப்பதற்குக் காரணமென்ன? சிருஷ்டியில் ஜகத் சொரூபம் தோன்றுவதற்கு நாமரூபங்கள் அவசியமென்பது இந்திய தத்துவ சாஸ்திரத்தின் கருத்தாகும். மனிதன் என்ற அந்தப் பிரகிருதியில் மனத்தினிடம் தோன்றுகிற (எண்ணங்களாகிற) அலைகளைக் கவனியுங்கள். நாமரூபங்களென்ற பந்தத்திற்கடங்காத ஒரு அலைகூடக் கிடைப்பதரிது என்பது நன்றாக விளங்கும். பிரகிருதி முழுமையும் ஒரே தத்துவம் நிரம்பியிருக்கிறதென்பது உண்மையானால் வெளிப் பிரகிருதி முழுமையுங்கூட நாம ரூபங்களுக்குட்பட்டதாகவே இருக்கவேண்டும். ஒரு மண்கட்டி அறியப்பட்டால் எல்லா மண்ணும் அறியப்பட்டதாகும். அதுபோலவே, அந்தப் பிரகிருதியின் பூரண அறிவும் நமக்குக் கிடைத்துவிட்டால் வெளிப் பிரகிருதியின் ஞானம் வந்தே தீரும். ஆதலால், விசாரித்தறிவோம். நாமம் அல்லது லட்சியத்தை உள்ளே வைத்து மேலே மூடிக்கொண்டிருக்கும் ஓட்டிற்கு ரூபம்

என்று பெயர். சிறிய பிரபஞ்சமாக விளங்கும் மனிதனிடத்தில் தேகமே ரூபம். உள்ளேயிருக்கும் அந்தக்கரணம் அல்லது மனம் என்பதே நாமமாகும். பேசும் சக்திபொருந்திய பிராணிகளிடத்திலெல்லாம் சப்த சின்னங்களை நாமமென்று சொல்வது வழக்கமாயிருக்கிறது. இதைச் சற்று விளக்கிச் சொல்வோம். வியஷ்டி பாவனையுடன்கூடிய மனிதனிடம் பந்த நிலையிலுள்ள மகத் இருக்கிறது. (இதுதான் அந்தக்கரணம்.) இதிலிருந்துதான் மனம் என்பது உண்டாக்கப்படுகிறது. இதனிடம் எழுகின்ற எண்ணங்களாகிற அலைகள் முதலில் தொனி (சொற்கள்) அல்லது மனோபாவனைகளாகிப் பிறகு வாக்கு என்றும் செய்கையென்றும் ரூபங்களாகின்றன.

இதுபோலவே வெளிப் பிரகிருதியிலும் நடைபெறுகிறது. பிரம்மா அல்லது ஹிரண்யகர்ப்பம் முதலில் நாமம் அல்லது பாவனையென்று தோன்றிப் பிறகு வெளிப் பிரகிருதியாகிய ரூபத்தை ஏற்றுக்கொள்கிறது. இந்திரியங்களின் மூலமாகக்கிரகிப்பதற்குத் தகுந்தபடி அமைக்கப்பெற்றுள்ள பிரகிருதி முழுமையும் ரூபமே. இதைத் தாங்கிக்கொண்டு இதற்கு ஆதாரமாக நித்தியமானதும் வாக்கிற்கெட்டாததுமான ஸ்போடம் என்பது அமைந்துள்ளது. இதுவே லோகங்களாகவும் தொனியாகவும் விளங்கும் மூலஸ்தானம். சுபாவத்தில் இந்த ஸ்போடம் நித்தியமாக உள்ளது. சகலவித பாவனைகளாகிய நாமங்களும் இதிலிருந்துதான்தோன்றுகின்றன. நாமங்களையெல்லாம் உண்டாக்குவதற்கு மூலமாகிய சார வஸ்துவாக ஸ்போடம் இருக்கின்றது. மேலும், கடவுள் ஜகத்தை சிருஷ்டிப்பதற்குச் சக்தியாக விளங்குவதும் அதுவே. கடவுள் முதலில் ஸ்போடம் என்ற பந்த நிலைமையி லிறங்கிப் பிறகு அதிக ஸ்தூலரூபமான விஷய ஜகத்தாகத் தாமே ஆவிர்ப்பவிக்கிறார். ஸ்போடம் என்ற நிலையைக் குறிப்பதற்கு ஒரே ஒரு தொனிதானுண்டு. அதுதான் ஓம் என்பது. ஒரு சப்தத்திலிருந்து அதனால் குறிக்கப்படும் மனோபாவனையைப் பிரிக்க முடியாது. இந்த விதி

எங்கும் உண்மையாகத்தானுள்ளது. ஆதலால், ஓம் என்பதும் நித்யமாக உள்ள ஸ்போடம் என்பதும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத நிலையில் அமைந்திருக்கின்றன. இதனால்தான் நாமங்களுக்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமாக உள்ளதும், நித்தியமாக உள்ளதும், மிகமிகப் பரிசுத்த மானதுமாகிய ஓம் என்ற தொனியிலிருந்து இந்த ஸ்தூலப் பிரபஞ்சமெல்லாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. என்று சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. ஒரு சந்தேகம் உண்டாகலாம். பாவனைகளும் சப்தங்களும் பிரிக்க முடியாதபடி அமைந்திருந்தபோதிலும், ஒரு பாவனையைக் குறிக்கப் பல சப்தங்கள் விளங்குகின்றன. அதுபோலவே, ஓம் என்ற ஒரு குறிப்புமாத்திரமே ஜகத்தை ஆவிர்ப்பவிக்க ஆதி காரணமாக நிற்கும் நித்தியமான சொரூபத்தைக் குறிக்க ஏற்பட்டதென்று கொள்ளவேண்டிய அவசியமில்லை யென்று தோன்றலாம். இந்த ஆட்சேபனைக்கு நாங்கள் பதில் கூற முடியும். எவ்வளவு பாவனைகள் உலகில் தோன்றக்கூடுமோ அவ்வளவையும் சேர்த்து ஒரே தொனி யால் குறிப்பதற்கு ஓம் என்பதைத் தவிர வேறெதுவும் கிடையாது என்போம். ஸ்போடம் என்ற வஸ்துவிலிருந்து எல்லாப் பாவனைகளும் உற்பத்தியாகின்றன; அவ்வளவே யன்றி அதுவே ஒரு குறிப்பிட்ட தனி பாவனையல்ல. அதாவது, ஒவ்வொரு பாவனை அல்லது கொள்கையிலிருந் தும் அது தனிப்பட்டதென்று பிரித்துக் காட்டுகிற பேதத்தை நீக்கிவிட்டால் எஞ்சி நிற்பது ஸ்போடமாகும். இப்போது சப்தம் அல்லது தொனியை ஆராய்வோம். ஒவ்வொரு சப்தமும் ஒரு குறிப்பிட்ட கொள்கையை மாத் திரமே குறித்துக் காட்டும். ஆதலால், எல்லாவித கொள்கை களின் (மனோ பாவனைகளின்) சமஷ்டியாக இருக்கும் ஸ்போ டத்தை விளக்கப் பல சப்தங்களும் தகுதியுடையவனல்ல. ஒவ்வொரு கொள்கையைமாத்திரமே குறிக்கும் சப்தங்க ளைக்கொண்டு ஸ்போடத்தை அறிய முயற்சி செய்தால் அந்த ஸ்போடம் சமஷ்டி பாவனையாக இருக்கச் சக்தி

யற்றுக் குறுகிய நிலைக்கு வந்துவிடும். ஆதலால், சிறிதளவு கூடக் குறைவுபடுத்தாமல் அதன் வியாபகத்தன்மையை அப்படியே விளக்கிக் காட்டத்தக்க ஒரு சப்தம் இன்ன தென்று காணல்வேண்டும். அப்போது அது ஸ்போடத்தைக் குறிப்பதற்கு ஏற்றதாக ஆகும். ஓம் என்ற சப்தமே அவ்வித லட்சணங்களுடன் கூடியதென்று சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன, அ உ ம் மூன்றும் சேர்ந்தது ஓம் என்று உச்சரிக்கப்படுகிறது. இந்த மூன்று எழுத்துக்களும் சேர்ந்து உண்டாகும் சப்தமே எல்லா சப்தங்களுக்கும் பொதுவானதென்று சொல்லிவிடலாம். அ என்ற அட்சரம் (எல்லா சப்தங்களுக்கும் ஆதியாக) எதையும் பிரித்துத் தனியே காட்டாததாய் இருக்கிறது. அதனால்தான் "அட்சராணாம் அகாரோஸ்மி" என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் கூறியிருக்கிறார். வாக்கினால் உச்சரிக்கப்படும் தொனியெல்லாம் நாக்கின் அடிப்பாகத்திலிருந்து உதடுகள் வரையிலுமுள்ள இடத்தில் ஏற்படுகின்றன. அடிப்பாகத்தில் ஏற்படும் தொனி அ என்பது. ம் என்பது உதடுகளில் வெளிப்படும் முடிவான தொனியாகும். நாக்கின் அடிப்பாகத்தில் ஏற்படும் சப்தத்தை உதடுகள் வரையில் உருட்டிச் செல்ல செய்யும் முயற்சிகளையெல்லாம் உ என்ற தொனி விளக்கிக் காட்டும் என்று சொல்லலாம். ஆதலால், ஓம் என்பதை ஒழுங்காக உச்சரித்தால், இந்தத் தொனியை எவ்வித சப்தத்திற்கும் பிரதிநிதியாகக் கூற முடியும். வேறு எதுவும் இவ்வளவு தெளிவாக எல்லா சப்தங்களையும் ஏற்றுக்கொள்ளாது. ஆதலால், ஸ்போடத்தைக் குறிப்பதற்கு ஏற்ற அடையாளமாக இந்த சப்தம் அமைந்திருக்கிறது. ஸ்போடமென்ற வார்த்தை எந்தப் பாவனையைக் குறிக்கிறதோ அதுவே ஓம் என்பதன் சத்தியப் பொருளாகும். சப்தத்தையும் அதனால் குறிக்கப்படும் விஷயத்தையும் பிரிக்க முடியாததாதலால் ஓம் என்பதும் ஸ்போடமும் ஒன்றேயாகும். ஆதலால், ஸ்போடத்திற்கு நாத ப்ரம்மமென்று பெயர். இந்த ஸ்போடம் ஸ்தூலப் பிரகிருதியின் சூட்சும பாகமாதலால் கடவுளின் சமீபத்திலேயே

உள்ளது. மேலும், பிரம்மஞானத்தின் முதல் தோற்றம் (ஆவிர்ப்பவம்) அதுவேயாதலால் ஓம் என்ற சப்தம் கடவுளை நிச்சயமாகக் குறிக்கிறதென்று சொல்லிவிடலாம். அகண்ட சச்சிதானந்தமென்று சாஸ்திரங்களில் வர்ணிக்கப்பட்டுள்ள ஏகமேவ பிரம்மத்தை முக்தர்கள் அல்லாத ஜீவர்கள் முற்றிலும் அறிய முடியாது. அவர்கள் ஏதோ ஒரு நிலையில் நின்று தமக்குப் பிரத்தியேகமாக ஏற்பட்ட திருஷ்டியுடன் அதைக் காண்பார்கள். ஆதலால், அவர்களுக்கு அது சிற்சில லட்சணங்களுடன் விளங்கும். கடவுளின் சரீரம் என்று சொல்லத் தகும் ஜகத்து முழுமையுங்கூட அவர்கள் முன் அவ்வாறே தோன்றும். அதாவது, சில விசேஷ குணங்களுடன் தோன்றும். கடவுளை வணங்கும் ஒருவனிடத்தில் (அவன் மனதில்) சத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்களில் எது அதிகம் வியாபித்திருக்கின்றதோ அதற்குத் தகுந்தபடி அவனால் பார்க்கப்படும் கடவுளும் ஜகத்தும் அமைந்து நிற்கும். ஆதலால், ஒரே கடவுள் பல பக்தர்களுக்குப் பற்பல குணங்களுடன் தோன்றுகிறார். இவற்றையெல்லாம் சோதித்தால் பல பக்தர்களுடைய கடவுள்களிடம் முரண்பட்ட குணங்களும் தோன்றக்கூடும். இதற்குக் காரணம் அவரவர்களுடைய மனோபாவனைகளேயாம். அதுபோலவே, ஒரே ஜகத்தில் தொடர்ச்சி எதுவும் இன்றி நாநாவித ரூபங்கள் அவர்கள் முன் தோன்றும். பேதமற்று ஜகத் பொதுவாக உள்ள ஓம் என்ற சப்தமும் அதன் உட்பொருளும் பிரிக்கமுடியாத ஏகமாக நிற்பதை நாம் கண்டோமல்லவா? அதுபோலவே கடவுள், ஜகத்து என்பதைப் பற்றிய பல வேறுகொள்கைகளிலும் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சப்தம் பிரத்தியேகமாக இருக்கவேண்டும். அவ்வித சப்தங்களை ரிஷிகள் தம் ஆழ்ந்த ஆத்மானுபவ உணர்ச்சியின் பயனாகக் கண்டிருக்கிறார்கள். கடவுளையும் ஜகத்தையும்பற்றி அவர்களுடைய கொள்கைகள் எவைகளோ அவற்றை அந்த சப்தங்கள் கூடியவரையில் தெளிவாகக் காண்பிக்கின்றன. நிர்க்குணமாகிய அகண்ட பிரம்

மத்தை ஓங்கார தொனி காட்டி நிற்பதுபோலவே இந்த வெவ்வேறு சப்தங்களும் கடவுளைப்பற்றிய கண்டமான அல்லது குணசம்பந்தமான கொள்கைகளைக் குறித்துக் காட்டுகின்றன. கடவுளைத் தியானிப்பதற்கு இவைகளும் உதவி செய்யும். கடவுளையும் ஜகத்தையும்பற்றி வெவ்வேறு கொள்கைகளை உடைய அடியார்கள் மெய்ஞ்ஞானம் அடையவும் இவைகள் துணை செய்யும்.

கந்தரலங்கார மூலமும்

மெய்ப்பொருள்விளக்க விருத்தி உரையும்.

கந்தரலங்கார மூலத்தின் ஒவ்வொரு செய்யுட்டும், இதுகாறும் எவர்களும் விஷயத்தலைப்புகள் கொடுத்துப் பதிப்பிக்கவில்லை. இப்போது நாங்கள் பதிப்பிக்கும் புஸ்தகத்தில் ஒவ்வொரு செய்யுட்கும் சிறந்த வித்வான் ஒருவரைக்கொண்டு மிக அருமையாக எழுதுவித்த மிகப் பொருத்தமான தலைப்புகளையும் இந்நூலில் சேர்த்திருக்கிறோம்.

இம்முறையில் வெளிவருவது இதுதான் முதன் முறையாகும். இதற்குமுன் கந்தரநுபூதி மூலத்திற்கும் புதிதாகத் தலைப்புகள் எழுதிச் சேர்த்த விஷயம் அன்பர்களனைவர்க்கும் தெரிந்த விஷயமேயன்றோ?

இந்நூலில் கந்தக்கடவுளின் பெருமைகள் பலவற்றையும் விரிவாகக் காணலாம். முருகக்கடவுளின் தலங்களிற் சிலவற்றையும் நூலாசிரியர் பாராட்டிக் கூறியிருக்கின்றனர். இந்தக் கந்தர் அலங்கார நூலைப் படிப்பவர்கட்கு இம்மை வாழ்வுகள் பலவும்வந்து கூடுதலோடு நோயின்மை, கவலை இன்மை, சத்துரு இன்மை, அகாலமிருத்யு இன்மையோடு புகழ்முதலியனவும் உண்டாகும். அவர் இவ்வுலகில் சுகத்தோடு நீண்டகாலம் வாழ்ந்து மறுமை இன்பத்தையும் பெற்று முடிவில் முக்தி இன்பம் பெறுவர். முருகப்பெருமானே குருவாகவந்து அருள் செய்து உபதேசஞ் செய்யப்பெற்ற பெரியராகிய ஸ்ரீ அருணகிரிநாத ஸ்வாமிகள் அருள்கொண்டு பாடியது இந்நூல்.

விலை 0 8 0

ஷை. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டது 0 12 0

ஏழாவது அதிகாரம்

விக்கிரகாராதனையும், மற்றுள்ள பாவனைகளும்.

பிரதீகங்கள் என்றும் பிரதிமைகளென்றும் சொல்லப்படுவதைப்பற்றி இப்போது கவனிப்போம். கடவுள் ஸ்தானத்தில் வைத்து ஆராதிக்கத்தகுந்ததாகவும், முடிவில் கடவுளை அடைவதற்குச் சாதனங்களாகவும் இருப்பவை பிரதீகங்களென்று சொல்லப்படும். விக்கிரகங்களுக்குப் பிரதிமைகளென்று பெயர். பிரதீகோபாசனை மூலமாகக் கடவுளை வணங்குவதென்றால் என்ன? சத்தியமான பிரம்மத்தைத் தேடியடையும் வரையில் பிரம்மமல்லாத ஒரு வஸ்துவைப் பிரம்மமெனப் பாவித்துப் அதனுடன் மனதைஒன்றுபடுத்துவது பிரதீகோபாசனையென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. "மனதைப் பிரம்மமென்று வணங்கு என்று சொல்வது அந்தப் பிரதீகத்திற்கு; ஆகாசம் பிரம்மமென்பது வெளிப்பிரதீகம்." என்று பகவான் ராமானுஜர் சொல்லியிருக்கிறார். மனமே அந்தப் பிரதீகம் என்றும், ஆகாசம் வெளிப்பிரதீகமென்றும் கருத்து. இந்த இரண்டும் கடவுள் ஸ்தானத்தில் வைத்து ஆராதிக்கத் தகுந்தவைகளே. இதேமாதிரி சங்கரர் சொல்வதைக் கேளுங்கள்:—"சூர்யன் பிரம்மமாகும்; இதுவே கட்டளை. நாமம் (சப்தம்) பிரம்மமென்று ஆராதிப்பவன். இவ்வித வாக்கியங்களில் பிரதீகோபாசனைகளைப் பற்றிய விஷயம் விளக்கப்படுகிறது." பிரதீகம் என்றால் 'நோக்கிச் செல்வது' என்று பொருள். பிரதீகோபாசனை என்றால் பிரம்மத்தை நேரில் ஆராதிப்பதற்குப் பதில் வேறொரு சாதனத்தைக்கொண்டு ஆராதிப்பது என்று கருத்து. இந்தச் சாதனப்பொருள் சில விஷயங்களில் பிரம்மத்தை ஒத்திரு

க்குமேயன்றி முற்றிலும் அதற்குச் சமமாக இராது. சுருதி அல்லது வேதங்களில் சொல்லப்பட்ட பிரதீகங்களைத் தவிர வேறு சிலவும் புராணங்களிலும் தந்திரங்களிலும் காணப் படுகின்றன. பிதிர்தேவதைகளையும் தேவர்களையும் ஆராதிப் பதைக்கூடப் பிரதிகாராதனையில் சாஸ்திரங்கள் சேர்த்திருக் கின்றன.

இப்போது பக்தி என்பதென்ன என்று கவனிப் போம். ஈசன் அல்லது கடவுளை ஆராதிப்பது மாத்திரமே பக்தியென்று சொல்லப்படும். தேவர், பிதிருக்கள் முதலிய வேறு எவ்வித தெய்வத்தை வணங்கினாலும் அது பக்தி யாகாது. தேவர்களை வணங்கும் பலவித ஆராதனைகளும் கிரியா பாகங்களடங்கிய கர்மகாண்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். ஆராதிக்கும் ஜீவனுக்கு ஏதேனும் சுவர்க்கானு பவத்தைத் தருவதற்கு அவை உதவும். கடவுளிடம் ஆழ்ந்த பக்தியை உண்டாக்கவாவது சர்வ பந்த நிவிர்த்தியாகிய முக்தியைத்தரவாவது அவை உதவமாட்டா. ஆதலால், ஒரு விஷயத்தை நாம் மறவாமல் கவனிக்கவேண்டும். பிரீதிகா ராதனைகளில் சில சமயம் தவறுகள் ஏற்படலாம். அதி உன் னதமான தத்துவ பாவனையாகிய பரப்பிரம்ம சொரூபத் தைப் பிரதீகபாவனைக்குச்சமமாகக் கீழே இழுத்து இவ்வித (கீழ்த்தர) பிரதிபொருளாகவே பிரம்மத்தைக் கருதி அதை ஆராதிக்கும் ஜீவன் அதையே தன் அந்தர்யாமியாக நினைத்துவிடக்கூடும். இவ்வாறு தன்னுள் நின்று சகலத் தையும் நடத்திவைக்கும் ஆத்மசொரூபம் இந்தப் பிரதீக மென்றே ஒருவன் நினைத்துவிட்டால் அவன் தவறான வழி யில் நடப்பவனாகிறான். எவ்வித பிரதீகமும் ஆத்மசொரூப மாக ஆக முடியாது. உண்மையான தெய்வவழிபாடு பின் வருமாறு:—பிரம்மசொரூபத்தையே வணங்கி உபாசிக்க விரும்பி அவ்வித அகண்ட சொரூபத்தை — எங்கும் நிறைந்த பிரம்மத்தை—பிரதீகத்தின் மூலமாக ஆராதித்து, பிரதீகத்தினிடம் ஜகத்காரண சொரூபத்தைக் கற்பித்து, பிரம்ம சாட்சாத்கார மடைவதற்கு இவ்வித உபாசனையைச்

எ-வது அதி.—விக்கிரகாராதனையும், நிஷ் மற்றுமுள்ள பாவனைகளும்.

சாதனமாக உபயோகித்தால் அது நன்மையைச் செய்து விடும். தெய்வ ஆராதனையில் ஆரம்ப நிலைமைத் தாண்டி அப்பால் செல்லாதவர்களுக்கெல்லாம் இவ்வித வழிபாடு அவசியம் வேண்டிய சாதனமாகும். இந்தச் சாதனமில்லாமல் மனிதர்கள் மேலான நிலைக்கு எழும்பவும் முடியாது.

ஆதலால், இப்போது விளங்குவதென்ன? தேவர்களையோ அல்லது வேறு சொரூபங்களையோ பிரத்தியேகமாகப் பாவனை செய்து அவ்வித சொரூபங்களை மாத்திரமே வணங்கிவந்தால் அவ் வணக்கம் கிரியாபாகங்க ளடங்கிய கர்மாவாகிறது. அதுவே ஒரு வித்தை அல்லது கலை என்று சொல்லப்படும். இவ்வித வித்தியாப்பியாசம் செய்தால் அந்த வித்தைக்குரிய பலன் கிடைத்துவிடும். அப்படிக்கின்றி அதே தேவர்களையும் மற்ற சொரூபங்களையும் பிரம்மமாகவே பாவித்து வணங்கிவந்தால், அப்போது சர்வேஸ்வரனை ஆராதிப்பதால் ஏற்படும் பலனே நமக்குக் கிடைக்கும். இதனாலேதான் சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் ஒரு கடவுள் அல்லது ஒரு ரிஷியை எடுத்துக்கொண்டு—அல்லது வேறு அரிய சக்தி சொரூபத்தை எடுத்துக்கொண்டு-அதன் தனி சொரூபத்திற்கு அப்பால் மேலே அதை ஏற்றி வர்ணித்து, பிரம்ம சொரூபமாகவே அதைப்பாவித்தபின் அந்தச் சொரூபத்தைப் பிரம்மமாகவே உபாசிக்கின்ற விவரங்கள் காணப்படுகின்றன. இதை விளக்கிக்கூற விரும்புகிற அத்வைதி: "நாம ரூபங்களை நீக்கிப் பார்த்தால் சர்வமும் பிரம்மமல்லவா?" என்கிறான். "கடவுள் ஒவ்வொருவரிடமும் அந்தர்யாமியாகிய ஆத்ம சொரூபமல்லவா?" என்று விசிஷ்டாத்வைதி சொல்கிறான். சங்கரர் சொல்வதைக் கேளுங்கள்:— "ஆதித்யாதி தேவர்களை உபாசிப்பதன் பயனாக வரும் பலத்தையும் பிரம்மசொரூபமாகிய கடவுளே கொடுக்கிறான்; ஏனெனில், அவனே சர்வத்தையும் ஆட்சி செலுத்துகிறவன் அல்லவா? இவ்விதம் பிரம்மமே ஆராதிக்கப்படும் விஷயரூபமாகவும் ஆகிறான்; எப்படியெனில், விஷ்ணுமுதலிய தேவர்

களை விக்கிரகங்களின்மீது ஏற்றியிருப்பதுபோல் ஒவ்வொரு வஸ்துவிலும் தானேயோ அல்லது தன் பிரகிருதியினுலோ வியாபித்திருக்கும் பிரம்மத்தையும் பிரதீகோபாசனையில் பிரதீகங்களின்மீது ஏற்றுகிறார்கள்."

மேலே சொல்லிய கொள்கைகள் பிரதிமைகள் அல்லது விக்கிரகங்களை ஆராதிக்கும் பாவனைகளுக்கும் பொருந்தும். அதாவது எப்படியெனில், விக்கிரகங்கள் ஒரு தெய்வத்தையோ அல்லது முனிவரையோ மாத்திரம் குறிக்கும் போது அந்த ஆராதனம் பக்தியாக மாறி விடுதலைக்கு வழி காட்டாது. விக்கிரகம் ஏகமாகிய கடவுளைக்குறித்து நிற்கும் போது அதை வணங்குவது பக்தி, முக்தி என்னுமிரண்டையும் கொடுத்துவிடும். உலகத்தில் வழங்கும் முக்கியமான மதங்களில் வேதாந்தமதமும், பௌத்தமதமும், கிறிஸ்தவ மதத்தில் சில குறிப்பிட்ட பிரிவுகளும், பக்தர்களுக்குச் சாதகமாக விக்கிரகங்களை மேற்சொல்லிய வழிகளில் தாராளமாகவே உபயோகிக்கின்றன. முகம்மதியமதம், புராடெஸ்டெண்டு மதம் என்ற இரண்டு வகுப்புக்கள் மாத்திரம் விக்கிரகங்களின் உதவியை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. ஆனுல், முகம்மதியர்கள் தம் முனிவர்களுடைய சமாதிகளை விக்கிரகங்களை உபயோகிக்கவேண்டிய விதமாக உபயோகிக்கிறார்கள். புராடெஸ்டெண்டு மதத்தினர் மாத்திரம் ஆத்ம வழிக்கு இவ்வித ஸ்தூல உதவிகளை யெல்லாம் அடியுடன் மறுத்துவிடுகிறார்கள். அதனுல் அவர்கள் நாளடைவில் ஆத்மப்பயிற்சியினின்று எட்டித் தூரத்தில் போய்க்கொண்டே இருந்தார்கள். அதன் பயனுக இப்போது அவர்களுக்கும், சன்மார்க்க போதனைகள்மாத்திரமே செய்யும் நாஸ்திகருக்கும் அதிகபேதமே கிடையாது.

கிறிஸ்தவமதத்திலும் முகம்மதியமதத்திலும் இப்போது எஞ்சிநிற்கும் விக்கிரகாராதனை கூடப் பிரதீகங்களையும் பிரதிமைகளையும் அப்படியே-மேலானகடவுள் சாட்சாத்காரத்திற்கல்லாமல்-வணங்கி உபாசிப்பதற்குச்சமமாக இருக்கின்றது. ஆதலால், கிரியைகளுடன் கூடிய கர்மாவுக்குச் சமமாக அது

௭-வது அதி.—விக்கிரகாராதனையும், மற்றுமுள்ள பாவனைகளும்.

நிற்கின்றதேயல்லாமல் பக்தியையும் முக்தியையும் கொடுக்கக் கூடிய சாதனமாக இருக்கவில்லை. இவ்வித விக்கிரகாராதனையில் ஜீவாத்மன் பரம்பொருளாகிய ஈஸ்வரனிடம் செலுத்தப்படாமல் வேறு வஸ்துக்களிடம் செலுத்தப்படுகிறது. ஆதலால், விக்கிரகங்களையும், சமாதிகளையும், கோவில்களையும், மற்றுமுள்ளவைகளையும் இவ்விதம் உபயோகிப்பதுதான் உண்மையான விக்கிரகாராதனையாகும். அப்படியிருந்தும் அவை தீயசெயல்களல்ல, பாவம் பொருந்தியவைகளுமல்ல. ஒரு கிரியையுடன் கூடிய கர்மா என்று அதைச் சொல்லலாம். உபாசிக்கின்றவர்கள் அதன் பயனை அவசியம் அடைந்தே தீருவார்கள்.

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த

கந்தரநுபூதி மூலமும் உரையும்.

இந்நூல் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள், தமிழ் நாட்டுச் செல்வர்கள் ஸ்ரீ கந்தபிரானை ஆத்மவடிவமாக அறியும் அறிவைப் படைத்தற்பொருட்டு 101 கலிவிருத்தங்களாகத் திருவாய்மலர்ந்தருளியதாம். இக்கலிவிருத்தங்கள் முருகப்பிரானைப் பக்தியினால் வழிப்படுத்தும் பிரார்த்தனைகளால், மனக் கிலேசங்கள் நீங்கக்கூடும். யோகத்தை உணர்த்தும் பாக்களும், முருகனுடன் ஐக்கியமாகும் ஆத்மானுபவ ஞானபோதமாகிய செய்யுள்களும், படிப்படியாய் மக்கள் பரநிலை யடையும் மார்க்கங்களும் உள்ள இந்நூலைப் பாமரரும் உணர்ந்துய்யும்பொருட்டு வேதாந்த தர்க்க இலக்கண இலக்கியயோக வல்லுனராகிய ஸ்ரீமத் கோ. வடிவேலுசெட்டியார் அவர்களால் பதவுரை, விசேடவுரை, விளக்கவுரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அருணகிரிநாதர் சரித்திர விளக்கத்துடனும், நிவேதனப் பொருள்களின் விபரமும், ஜெபிக்கும் உருஎண்களும் உரையாசிரியர் திருவுருவபடமும், சுப்பிரமணியர் படமும் சேர்த்து 250 பக்கங்களுக்கு அதிகமாக அச்சிட்டுள்ள இப்புத்தகத்தின் சொற்பவிலை அணா 8.

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டதற்கு விலை 0 12

எட்டாவது அதிகாரம்

குறிப்பிட்ட லட்சியங்கள்

அவரவர்களுக்கு ஏற்பட்ட லட்சியத்தினிடம் மனதைச் செலுத்துவது என்று பொருள்படுகிற இஷ்டநிஷ்டை என்றால் என்ன என்று இப்போது கவனிக்க வேண்டும். தெய்வ பக்தனாக ஆகவேண்டும் என்று விரும்புகிறவன் அறியவேண்டிய தொன்றுண்டு. கடவுளை வணங்குவதற்கு ஏற்பட்ட வழிகளில் பல அபிப்பிராயங்களும் பல கொள்கைகளும் அவ்வளவு மார்க்கங்கள் என்று நினைக்க வேண்டும். பலவேறு மதங்களின் பல உள்மதங்களும் ஒரே கடவுளின் பல ஆவிர்ப்பவங்களென்று பக்தன் அறிந்து கொள்ளவேண்டும். "உனக்குப் பல பெயர்களை ஜனங்கள் வழங்குகிறார்கள். பலவேறு பெயர்களால் உன்னை அவர்கள் பங்கிட்டுக்கொண்டதுபோலத் தோன்றினாலும் ஒவ்வொரு பெயருக்குள்ளும் உனது சர்வ சக்தித்துவம் விளங்குகிறது. ஒவ்வொரு பெயருடன் கூடிய வழியின் மூலமாகவும் ஆராதிக்கும் பக்தனை நீ அடைகிறாய். ஜீவனுக்கு உன்னிடம் ஆழ்ந்த பக்தி இருக்கும்வரையில் உனது நாமத்தைத் தியானிப்பதற்குக் கால நியமமும் ஏற்பாடு செய்தவரில்லை. உன்னை அடைவதும் மிக இலகுவான காரியமென்றே சொல்லலாம். அப்படிப்பட்ட லட்சணங்களையுடைய ஏ! பிரபுவே! உன்னிடம் பக்தி செலுத்த முடியாதவனாயிருப்பது எனது துர்ப்பாக்கியமே யல்லவா?"

இவ்வளவு மாத்திரமல்ல, பல மதஸ்தாபகர்களையும் பக்தியுடன் கூடியவன் துவேஷிக்கலாகாது. ஞான ஒளி பொருந்திய மகான்களாகிய அவர்களை எவ்விதத்திலும் குறைகூறவும் கூடாது. பிறர் குறைகூறத் தாம் கேட்பதுந்

தவறு. இவ்வாறு அளவுகடந்த அனுதாபமும் தாராளச் சிந்தையும் பொருந்தப்பெற்று ஆழ்ந்த பக்தியும் சேர்ந்து விளங்குவது மிக அருமையாக இருக்கிறது. அந்நிய மதத்தினிடம் மதிப்பும் தமது இஷ்ட தெய்வத்தினிடம் ஆழ்ந்த பக்தியும் சேர்ந்து ஒருவரிடம் விளங்குவது மிக அருமையாகவே இருக்கின்றது. அப்படிப்பட்ட குணம் பொருந்தியவர்கள் மிகச் சிலரேயாவர். மிகத் தாராள கொள்கையும் விரிவான அனுதாபமும் நிரம்பிய மதங்கள் சாதாரணமாக ஆழ்ந்த ஆத்மானுபவமில்லாதவைகளா யிருக்கின்றன. இவ்வித மதஸ்தர்களுக்கு மதமும் அரசியல் சங்கம், சமூக சீர்திருத்த சங்கம்போன்ற ஒருவித சங்கமாக ஆகிவிடுகின்றது. மிகக் குறுகிய கொள்கையையுடைய மதங்களோ தமது லட்சியங்களிடம் மிகத் தீவிரமான பக்தியைச் செலுத்துகின்றன. ஆனால், இவ்வித ஆழ்ந்த பக்தியில் ஒவ்வொரு படியும் வேற்று மதங்களிடம் பேதபுத்தி செலுத்தியே வளர்ந்ததாக இருக்கின்றது. இந்த மதஸ்தர்கள் தம் அபிப்பிராயங்களுக்கு மாறுபட்ட கொள்கையை யுடையவர்களிடம் விரோத பாவனையையே கொள்கிறார்கள். உலக முழுமையும் நிறைந்து பரவிய அனுதாபமும் அவ்வளவுக்கவ்வளவு ஆழ்ந்து விளங்கும் பக்தியும் ஒருங்கே அமைந்த மனிதர்கள் உலகில் நிறைந்திருக்குமாறு கடவுள் கருணை செய்யலாகாதோ! இப்படிப்பட்ட ஜீவர்கள் ஏதோ ஒரு காலத்தில் மிக அருமையாகவே விளங்குகிறவர்களாய் இருக்கிறார்கள். ஆனால், இவ்வித நிலைக்கு வருமாறு ஏராளமான ஜனங்களுக்கு வழிகாட்ட முடியும். அந்த வழிதான் இஷ்ட நிஷ்டை என்று வழங்குகிறது; அதாவது, குறிப்பிட்ட ஒரு லட்சியத்தினிடம் மனதைச் செலுத்தி நிறுத்துவது. ஒவ்வொரு மதத்திலும் விளங்கும் பல உட்பிரிவுகளில் ஒவ்வொன்றும் மானிட உலகிற்கு ஒவ்வொரு லட்சியத்தையே கொடுக்கின்றது. நித்தியமாக உள்ள வேதாந்தமதம் மாத்திரம் அவ்வாறு இல்லாமல், தெய்வசொரூபத்திற்குள் செல்வதற்குக் கணக்கில்லாத வழிகளைக் காட்டி நிற்கிறது. நித்தியமான ஏக வஸ்துவின் ஆவிர்ப்பவமாக மாத்திரமே இருக்கும் வழி

கள் வேதாந்த மதத்தில் கணக்கின்றிக் காணப்படுகின்றன. ஒவ்வொரு வழியும் எப்படி யுண்டாயின என்பதைக் கவனி யுங்கள்.

மனிதவாழ்க்கையின் சத்தியமான அனுபவங்களென்ற உறுதியான பாறையின்மீது ஞானஒளி பொருந்திய மகான் கள் செதுக்கிய ரஸ்தாக்களை, கடவுளே இங்கு இவ் வுலகில் ஆவிர்ப்பவித்திருக்கிறார் என்று சொல்லத்தக்க பெருமை வாய்ந்து பூர்வகாலங்களிலும் இக்காலத்திலும் விளங்கும் பெரியோர்கள் கண்டுபிடித்த வழிகளை—முக்தியடைய விரும்பும் மக்களுக்கு, ஆடவர் பெண்டிர் முதலிய பலருக் கும்—வேதாந்தமதம் மிகுந்த கருணையுடன் எடுத்துக் காட்டி சத் சித் ஆனந்த சொரூபத்தினிடம் எல்லோரும் வாருங்கள் என்று கைகளை நீட்டி எதிர்கொண் டழைக்கின் றது. அந்தச் சொரூபத்தினிடம் சென்றபின் ஜீவன் மாய வலையினின்று விடுபட்டுப் பரிபூர்ண சுதந்திரத்தையும் ஆநந் தத்தையும் அடைகிறான்.

இவ்வாறு முக்திக்கு வழிகாட்டியாக நிற்கும் பலவேறு ரஸ்தாக்களில் எந்த ஒன்றையும் வெறுக்கலாகாதென்றும், அது தவறு என்று கண்டிக்கலாகாதென்றும் பக்தியோக மானது நமக்குக் கண்டிப்பாகக் கட்டளையிடுகிறது. ஆனால், சிறு செடிகள் மரமாக வளர்வதற்குமுன் அவற்றைக் காத்து ரட்சிக்குமாறு வேலிகளைக் கட்டுகிறோமல்லவா? அது போலவே, அடிக்கடி கொள்கைகளும் லட்சியங்களும் மாறிக் கொண்டே யிருக்குமாறு ஆரம்பத்திலேயே விட்டுவிட்டால் ஆத்மப்பயிற்சியென்ற இளஞ்செடி நசித்துப்போய்விடும். ஆத்மதர்ம விஷயத்தில் தாராள நோக்கத்தைக் காட்ட விரும்புகின்ற பலர் எவ்விதம் நடக்கின்றார்களென்று கவனி யுங்கள். ஒன்றன்பின் ஒன்றாகப் பல லட்சியங்களை விடாமல் பற்றிக்கொண்டு வீண்பொழுது போக்குகின்றவர்களாகப் பலரைக் காணலாம். ஒரு லட்சியத்திலும் ஆழ்ந்து மனத் தைச் செலுத்துவதில்லை. எப்போதும் புதிய விஷயங்களையே தேடி அலையும் சித்தம் அவர்களிடத்தில் ஒரு வியாதிபோல

ஆகிவிடுகிறது. எப்போதும் புதிது புதிதாக ஏதோ ஒருவித உணர்ச்சி ஏற்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். ஒரு புதுவிஷயம் சிறிதுகாலத்திற்கு உணர்ச்சியை எழுப்பி உற்சாகமூட்டிவிட்டுப் பிறகு அடங்கிவிடுகிறது. மறுபடி வேறு ஒரு புதுவிஷயம் வேண்டியிருக்கிறது. இவ்விதம் ஆத்மவித்தையும்கூட இவர்களுக்குப் புத்திமயக்கத்திற்கு வேண்டிய ஒருவகை அபினிபோல் ஆகிவிடுகிறது; அவ்வளவில் அடங்கிவிடுவதால் உண்மையான ஆத்மப்பயிற்சியென்பது இவர்களிடம் ஏற்படக்காரணமில்லை. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்வதைக் கேளுங்கள்:—"முத்துச்சிப்பிகளை உண்டாக்கும் பூச்சிகளைப்போல் மற்றொருவகை மனிதர் உண்டு. இந்துதேசத்துக் கதையைக் கவனியுங்கள். கடலின் அடிவாரத்திலிருந்து சிப்பிப் பூச்சிகள் மேலே எழும்பித் தண்ணீரின் மேல் மட்டத்திற்கு வந்து காத்திருக்கும். ஸ்வாதி நட்சத்திரம் உச்சமாக இருக்கும்காலத்தில் மழைத்தண்ணீரை நேரே அடையவேண்டி இவ்வாறு அந்தப் பூச்சிகள் தம் ஓடுகளை தாராளமாகத் திறந்தபடியே அங்குமிங்கும் மிதந்துகொண்டிருக்கும். மழைத்தண்ணீரின் ஒரு துளியை அடைந்தவுடன் கடலில் அடிவாரத்திற்குச் சென்று அந்த ஆழத்திலேயே தங்கி அந்த மழைத்துளியை ஒரு அழகிய முத்தாகச் செய்துவிடுகிறது. அதுவரையில் சிப்பிப்பூச்சிகள் அடிவாரத்தைவிட்டு நீங்குவதில்லை."

இஷ்ட நிஷ்டை என்ற கொள்கையை எவ்வளவு தெளிவாகவும் அழகாகவும் விளக்கியிருக்கிறார் பாருங்கள்! மிகத் தேர்ந்த கவிகள் இதைக்காட்டிலும் பலமாகவும் அழகாகவும் வர்ணிக்கமாட்டார்கள் என்று சொல்லலாம். ஒரே லட்சியத்தினிடம் மனதைச் செலுத்துவதாகிய இந்த ஏக நிஷ்டை ஆத்மதர்ம வழியில் ஆரம்பநிலையில் உள்ளவருக்கு அத்தியாவசியமாயிருக்கிறது. ராமாயணத்தில் ஹனுமான் சொல்லியதுபோல் இந்த ஆரம்ப நிலையில் உள்ளவனும் சொல்லிக்கொள்ளவேண்டும். "ஸ்ரீதேவியின் தலைவராகிய கடவுளும் ஜானகி பிராட்டியின் தலைவரும் ஒரே

பரம்பொருளின் ஆவிர்ப்பவங்கள் என்று எனக்குத் தெரி யும்; சாரத்தில் இரண்டு மூர்த்திகளும் ஒன்றுதான். அப்படி நானறிந்தபோதிலும் கமலக்கண்ணனாகிய ஸ்ரீராம பிரானே எனக்குச் சொந்தமாகிய எல்லாமாகிறான்.” என்று ஹனுமான் தெரிவித்திருக்கிறார்.

துளசிதாஸர் போதித்த வழியையாவது ஆரம்ப நிலையிலுள்ள பக்தன் பின்பற்றலாம். “எல்லோரிடத்திலு முள்ள இனிமையை அடைந்துகொள்ளலாம்; எல்லோ ருடனும் அமர்ந்து அவர்கள் சொல்லும் நாமங்களையெல் லாம் அங்கீகரித்து ஒவ்வொருவருக்கும் ஆம் ஆம் என்று சொல்லலாம். ஆனால், உனது நிலையில், (லட்சியத்தில்) உறுதி யாக நிற்பாயாக!”

இவ்வாறு பழகும் பக்தன் ஆரம்ப நிலையிலிருந்து, சிரத் தையுடன் விளங்கி நடந்துவந்தால் ஆத்மப்பயிற்சி என்ற சிறிய வித்திலிருந்து மகத்தான ஒரு மரம் எழும்பிவிடும். இந்தியாவில் உள்ள ஆலவிருட்சம் நாலாபக்கங்களிலும் கிளைகள்மேல் கிளைகளாகப் படர்ந்து செழித்து எங்கு பார்த்தாலும் விழுதுகளையும் இறக்கிக்கொண்டு பெருமை யுடன் விளங்கும். ஆத்மதர்மமென்ற முழு விஸ்தீரணத் தையும் தனக்குள் அணைத்துக்கொண்டு விளங்கும்போது இந்த ஆத்மசொரூபம் மகத்தாகவே இருக்குமல்லவா?

எந்தக் கடவுள் தன் வாழ்நாட்களில் எப்போதும் தன் லட்சியப்பொருளா யமைந்து விளங்கியதோ அதே கடவுள் பல மதஸ்தர்களுக்கும் வெவ்வேறு லட்சியங்களாக அமைந்து அவர்களால் பல நாமரூபங்களில் ஆராதிக்கப் படுகிறான் என்று உண்மையான பக்தன் முடிவில் அறிந்து கொள்ளுகிறான்.

ஒன்பதாவது அதிகாரம்

வழியும், சாதனப் பொருள்களும்.

பக்தியோகத்தை அனுஷ்டிக்கும் வழியையும் அதற்கு வேண்டிய சாதனப்பொருள்களையும்பற்றிப் பகவான் ராமானுஜர் வேதாந்த சூத்திர பாஷ்யத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்:—"தத் பொருளாகிய (பிரம்மம்) விவேகத்தாலும், இச்சைகளை அடக்கியாளுவதாலும், விடாமுயற்சியாலும்,கர்மாக்களின் மூலமாகவும், பரிசுத்த குணத்தாலும், (மனோ) பலத்தாலும், அளவுகடந்த உற்சாகத்தைத் தணிப்பதாலும் அடையப்படுகிறது." உணவுப் பொருள்களில் பரிசுத்தமில்லாததைத் தள்ளிப் பரிசுத்த உணவைத் தேர்ந்தெடுத்தலே விவேகமென்று ராமாநுஜர் கூறுகிறார். மூன்றுவித காரணங்களால் உணவுப்பொருளுக்குப் பரிசுத்தக்குறைவு ஏற்படுவதாக ராமானுஜர் அபிப்பிராயப்படுகிறார். உள்ளிப் பூண்டுமுதலிய சில வஸ்துக்கள் இயற்கையாகவே பரிசுத்த குண மில்லாதவைகள். பிறகு துஷ்டர்கள் அல்லது பிரஷ்டர்கள் மூலமாகக் கிடைக்கும் உணவு அசுத்தமடைகிறது; இது இரண்டாவது வகை. இதற்குப் பிறகு மண், மயிர் முதலிய ஸ்தூலவஸ்துக்கள் விழுவதாலும் உணவுப்பொருள்கள் பரிசுத்த மிழக்கின்றன. "ஆகாரம் சுத்தமாயிருந்தால் தேகத்திலுள்ள சத்துவகுணம் சுத்தமாகிறது. மனதும் அப்போது பரிசுத்த குணமடைந்து ஞாபகசக்தி உறுதியாக நிற்கிறது." என்று சுருதிகள் கூறுகின்றன.

தெய்வ பக்தர்களுக்கு எப்போதும் ஆகார நியமங்களும் மிக முக்கியமாகவே இருந்துவந்திருக்கிறது. பக்தியை அடிப்படையாகக் கொண்ட சில மதங்கள் இந்த நியமங்களை அளவுக்கு மீறிக் கொண்டாடுகின்றன. அதை

நாம் கவனிக்கவேண்டிய அவசியமில்லையாயினும் இவ் விஷயத்தில் ஆழ்ந்த உண்மையிருக்கிறதென்பதை மறுக்க முடியாது. சாங்கிய தத்துவத்தில் சொல்லியிருப்பதை நாம் கவனிக்கவேண்டும். சத்துவ ரஜஸ் தமஸ் குணங்கள் ஒத்துச் சமமாக நிற்கும்போது பிரகிருதி என்றும், பேதப்பட்டுக் கலங்கி நிற்கும் நிலையில் ஜகத் என்றும் ஆகின்றன. பிரகிருதியின் சாரமும் லட்சணமும் இந்த முக்குணங்களே யன்றி வேறல்ல. பிரகிருதியே சிருஷ்டிசக்தி யெனப்படும். ஒவ்வொரு மனித உருவமும் இந்தப் பிரகிருதிப் பொருளால் ஆக்கப்பட்டதுதான். ஆதலால், ஆத்மப்பயிற்சி விருத்தியாவதற்குச் சத்துவப்பொருள் அவசியமாயிருக்கிறது. சத்துவ ஆத்மப்பயிற்சியே ஏற்பட முடியாது. உணவுப் பொருள்களின் மூலமாகவே நாம் தேகத்திற்குள் அடையும் வஸ்துக்கள் நம் மனோநிலையை உண்டாக்குவதில் பெரும்பாலும் உதவுகின்றன. ஆதலால், நாம் உட்கொள்ளும் உணவு விஷயத்திலும் மிக ஜாக்கிரதை நமக்கு வேண்டியது அவசியமே. அளவுக்கு மீறி இந்தக் கொள்கையைச் சில சீஷர்கள் ஏற்றுக்கொண்டு வெறிபிடித்தலைவதற்கு ஆசாரியர்கள் காரணமாகமாட்டார்கள்.

ஆகாரத்தில் வேண்டிய ஜாக்கிரதை அல்லது விவேகமெல்லாம் மிக முக்கியமான விஷயமல்ல; இரண்டாம்படியிலுள்ளதுதான். மேலே ராமானுஜர் மேற்கோளாக எடுத்துக்காட்டிய உபநிஷத்து வாக்கியத்திற்குச் சங்கரர் தம் உபநிஷத் பாஷியத்தில் வேறுவிதமாகப் பொருள் கூறியிருக்கிறார். ஆஹாரம் என்ற பதத்திற்குச் சாதாரணமாகச் சொல்லப்படும் உணவு என்று பொருள் கொள்ளாமல் வேறு பொருளை அப் பதத்திற்குக் கொடுத்து அந்த வாக்கியத்தின் கருத்தையே சங்கரர் மாற்றிவிடுகிறார். "சேகரிக்கப்படுவது ஆஹாரம். பல இந்திரியங்களின் வழியாக அடையப்படும் அறிவுகளெல்லாம்—சப்தம், கந்தம் முதலிய உணர்ச்சிகள் எல்லாம்—மனதினால் ஒன்றுசேர்க்கப்பட்டு ஜீவனால் அனுபவிக்கப்படுகின்றன. இவ்வாறு இந்திரியங்களின் மூலமாக

அடையப்படும் அறிவைப் பரிசுத்தம் செய்வதுதான் ஆஹாரசுத்தி என்ற வாசகத்தால் குறிக்கப்படும் பொருள். ஆதலால், உலகில் உள்ள எல்லா விஷயங்களின் அறிவையும் அடைந்து அவற்றினிடம் ராக, துவேஷ, மயக்கம் என்ற பற்று, வெறுப்பு, கலக்கம் முதலிய அழுக்குகளை ஏற்றாமல் இருப்பதே ஆஹாரசுத்தி என்பதன் பொருளாம். ஆஹாரம் அல்லது அறிவு பரிசுத்தமாக்கப்பட்டவுடன், இந்த அறிவுகள் போயடங்குமிடமாக விளங்கும் உள் கருவியாகிய அந்தக்கரணம் அல்லது மனஸில் உள்ள சத்வம் பரிசுத்தமாகின்றது. சத்வம் பரிசுத்த மடைந்தவுடன் மெய்யறிவு நிரம்பி முன்னமே சாஸ்திரக்கல்வியின் மூலமாக அடையப்பட்ட ஏகமான அகண்ட சொரூபத்தினிடம் புத்தியானது விடாமல் லயித்து ஒன்றுபட்டு நிற்கும். இவ்வித தியான பலம் ஏற்படுகிறது.”

சங்கரரும் ராமானுஜரும் ஆஹாரம் என்ற பதத்திற்குக் கொடுத்திருக்கும் பொருள்கள் பார்வைக்கு விரோத குணங்களுள்ளவைகளைப்போல் தோன்றினாலும் இரண்டும் உண்மையும் அவசியமுமாக இருக்கின்றன. ஸ்தூல சரீரத்தை நிர்வகித்து அடக்கியாளுவதைக்காட்டிலும் சூக்கும சரீரத்தை அடக்கியாளுவது உயர்ந்த காரியமென்பதில் சந்தேக மில்லை. ஆனால், சூக்கும சரீரத்தை நிர்வகிக்கச் சக்தி யேற்படுவதற்கு ஸ்தூல தேகத்தை நிர்வகிப்பது மிகவும் முக்கியமாயிருக்கிறது. ஆதலால், ஆரம்ப நிலையில் உள்ளவன் பக்தியோகத்தைப்பற்றித் தெரிவிக்கும் சிறந்த ஆசாரியர்களிடமிருந்து பாரம்பரையில் கிடைத்திருக்கும் ஆகார நியமங்களை நன்றாகக் கவனிக்கவேண்டும். அந்த விதிகளை உணவுப்பொருள் சம்பந்தப்பட்டவரையில் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால், இந்தியாவில் பல மதங்களும் இப்போது ஆத்மதர்மத்தை அடுப்பங்கரைக்கு விரட்டிவிட்டிருப்பதுபோல் சாரமற்ற வெறிகொள்ளுவது பிரயோஜனமில்லை. ஆத்மதத்துவத்தை நம்பாத ஜடதத்துவ வாதிக

ளுக்கும் இவர்களுக்கும் பேதமே கிடையாது. இவ்வித ஆசாரம் ஞானமுமல்ல, பக்தியுமல்ல, கர்மாவுமல்ல. பைத்தியத்தில் இது ஒரு விசேஷகுணம் பொருந்திய பைத்தியமென்று கூறலாம். இவ்வித வெறிகளில் மனதை நிறுத்துகிறவர்கள் மேலான உலகமாகிய பிரம்மலோகம் போவதற்குப் பதில் பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளுக்கே போய்ச் சேரக்கூடும். உணவுப்பொருள் ஆராய்ச்சி சிறிது தூரம் அவசியம் என்பது அறிவிற்குப் புலனாகும். இந்த ஆராய்ச்சியினால் மனம் ஒருவித உயர் நிலையை அடைவது போல் வேறெவ் வழியாலும் அடையாது.

அடுத்தபடியாகக் கவனிக்கவேண்டிய விஷயம் இச்சைகளை யடக்கியாளுவது. இந்திரிய விஷயங்களிடம் இடைவிடாது நம் இந்திரியங்கள் செல்லாதவாறு தடை செய்யவேண்டும். அவற்றை யடக்கி ஒருவன் தன் ஸ்வாதீனமாகச் செய்துகொள்ளவேண்டும். ஆத்மப் பயிற்சியில் இது ஒரு முக்கிய தர்மமாக நிற்கிறது.

தன் மறுப்பு அல்லது தன்னைத் தானடக்குதல் இதன் பிறகு வருகிறது. இந்தப் பயிற்சிகளை அப்பியசித்துப் போராடினாலன்றிக் கடவுள் சாட்சாத்காரம் ஆரம்ப நிலையிலுள்ள பக்தனுக்கு ஏற்படாது. எப்போதும் கடவுளைப்பற்றிய நினைப்பே மனதில் இருக்கவேண்டும். ஆரம்பத்தில் எப்போதும் அவனைப்பற்றிச் சிந்திக்குமாறு மனதை நிர்ப்பந்தம் செய்ய முடியாது. ஆனால், அடிக்கடி முயற்சிசெய்தால் அவ்விதம் நினைக்கும் சக்தியும் நம்மிடம் பலமாகிக் கொண்டே வரும். "ஏ கௌந்தேய! அப்பியாசத்தாலும் வைராக்கியமாகிற பற்றின்மையாலும் மனம் அடக்கியாளப் படுகிறது." என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறியிருக்கிறார்.

மேலே சொல்லப்பட்ட குணங்களெல்லாம் பராபக்தி அடைவதற்கு முக்கியமாதலால் தெய்வபக்தன் அவற்றை அப்பியசிக்க வேண்டும். சில சாஸ்திரங்களில் சொல்லப்படும் கர்மபாகங்கள் இவ் வுலகிலோ மறு உலகிலோ ஏற்படும்

இந்திரிய சுகங்களுக்காக மாத்திரமே உபயோகமாகுமாதலால் பக்தன் அவற்றை அப்பியசிக்கலாகாது. இந்தக் கர்ம பாகங்களெல்லாம் ஒருவனுக்குப் பந்தத்தின்பேரில் பந்தமாக ஏற்பட்டு அவனைக் கடவுளிடம் சேர்க்காமல் நெடுந்தூரத்தே தள்ளிக்கொண்டு போகும். பஞ்ச மஹா யக்ஞங்களை மாத்திரம் பக்தன் செய்யவேண்டும். மற்றவைகளைப் பற்றிச் சிறிதும் கவனிக்கவேண்டிய அவசியமில்லை.

எதற்கும் மேம்பட்டதாகப் பரிசுத்தம் என்னும் குணம் பக்திக்கு அஸ்திவாரமாக நிற்கிறது. ஸ்தூலதேகத்தைச் சுத்தம் செய்துகொள்ளமுடியும்; உணவுப் பொருள்களையும் தேர்ந்தெடுக்க முடியும். இந்த இரண்டும் இலகுவாகச் செய்துவிடலாம். ஆனால், அந்தரங்க சுத்தம் என்ற மனஸ் சுத்தம் இல்லையென்றால் அந்த வெளிச் சுத்தங்கள் எவ்வித பயனையும் அளிக்கா. பரிசுத்தம் அடைவதற்கு ஸ்ரீராமானுஜர் அவசியமென்று தெரிவிக்கிற குணங்களில் சத்தியம் என்ற உண்மையுடைமையும், ஆர்ஜவம் என்னும் சிரத்தையும், பிறருக்கு நன்மை புரிதலாகிய தயையும், மனோ வாக்குக் காயங்களால் பிறருக்குத் தீங்கு செய்யாமலிருப்பதாகிய அஹிம்ஸையும், பிறர் பொருளுக்கு இச்சையின்மையாகிய அபித்யையும், வீண் எண்ணங்களைச் சிந்திக்காமலிருத்தலும், பிறரிடமிருந்து தாம் அடைந்த தீங்கைப்பற்றி நினைக்காமலிருப்பதும் சேர்ந்திருக்கின்றன. இந்தத் தொகுதியில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது அஹிம்ஸை என்பதேயாம். அதாவது, பிறருக்கு ஹிம்ஸை செய்யாமை. பக்தன் எல்லாப் பிராணிகளிடத்திலும் இந்தக் குணத்தை அப்பியசிக்கவேண்டும். இது அவனுக்கு நிர்ப்பந்தமாக ஏற்பட்ட கடமை. 'மனிதர்களுக்கு ஹிம்ஸை செய்யாமல் மற்றப் பிராணிகளிடம் இரக்கமற்றிருப்பது' என்று சிலர் நினைப்பதும், மற்றும் சிலர் 'நாய்களையும் பூனைகளையும் காப்பாற்றி, எறும்புகளுக்கும் இனிய உணவு அளித்துப், பிறகு தம்மைப்போன்ற மனிதர்களை மிகக் கொடிய வழிகளில்

வருத்தலாம்' என்று நினைப்பதும் அஹிம்ஸா தர்மமல்ல. உலகத்தில் ஒவ்வொரு நல்ல கொள்கையும் இவ்வாறு மிகக் கொடிய வழியில் உபயோகமாகுமாறு இணங்குவது அதிசயிக்கத்தக்க விஷயமேயாகும். ஒரு நல்ல பழக்கத்தை அளவுக்கு மீறிக்கொண்டுபோய், விதியி லடங்கிய கருத்தை மறந்து அதன் எழுத்துக்களை மாத்திரம் நாம் உபயோகித்து வரும்போது, அந்த பழக்கம் நிச்சயமாகத் தீங்கை விளைவித்துவிடுகிறது. இந்த அஹிம்ஸாதர்ம அப்பியாசத்திலும் இவ்வித கொடுமை யேற்படுவது மிகவும் வருந்தத்தக்கது. மிதமிஞ்சிய கொள்கையை அனுஷ்டிக்கும் துறவிகள் சில மதங்களில் இருக்கிறார்கள். இவர்கள் தம் தேகத்திலுள்ள கிருமிகள் இறந்துபோகுமேயென்று பயந்து ஸ்நானம் செய்யமாட்டார்கள். இவ்வாறு இருப்பதால் தம்மைப்போன்ற மனிதர்களுக்குச் சுகக்குறைவும் வியாதியும் ஏற்படுமே என்று சிறிதும் இவர்கள் யோசிப்பதில்லை. 'இவர்கள் வேதங்களை ஆதாரமாக உடைய மதத்தை (வேதாந்த மதத்தை)ச் சேராதவர்கள்' என்று நினைக்கும்போது நாம் சிறிது ஆறுதல் அடையலாம்.

அஹிம்ஸா தர்மத்திற்கு லட்சண மென்ன? பொறாமையில்லாத குணமே இந்தத் தர்மத்தை அப்பியசிப்பதற்குப் பயன். ஏதேனும் ஒரு சமயம் ஏற்படும் வெளியிலோ, அல்லது மூடபக்தியாலோ, குருமார்கள் சொல்வதற்காகவோ, எந்த மனிதனும் ஒரு நற்காரியத்தைச் செய்துவிடக்கூடும், அல்லது ஒரு சிறந்த தானத்தைக் கொடுத்துவிடுவான். ஆனால், எவரிடமும் பொறாமை கொள்ளாமலிருப்பவனே உண்மையில் மனித வர்க்கத்தினிடம் அன்பு செலுத்துகிறவன். உலகில் பெரியோர்கள் என்று சொல்லப்படுகிறவர்களெல்லோரும் தம் பெயருக்காகவும் பெருமைக்காகவும் ஏதோ சொற்ப பொன்னுக்காகவும் ஒருவர்மீதொருவர் பொறாமை கொள்வதை நாம் காண முடியும். ஒருவன் மாமிச உணவை நீக்கிச் சைவம் பாராட்டியபோதிலும், இவ்வித பொறாமை அவன் ஹிருதயத்தினிடம் குடிகொண்

டிருக்கும் வரையில், அஹிம்ஸா தர்மத்தில் பூர்த்தியடையும் நிலைக்கு வெகு தூரத்தே அவன் நிற்பவனாகிறான். பசுவும் ஆடும் மாமிசத்தைப் புசிப்பதில்லை. அதனால் அவைகள் யோகிகளாகவும் அஹிம்ஸா தர்மத்தை ஏற்றுக்கொண்டதாகவும் ஆயினவோ? மாமிச போஜனத்தை எந்த மூடனும் நீக்கிவிட முடியும். இந்தக் குணம் இவனை மேற்சொல்லிய மிருகங்களைக்காட்டிலும் உன்னத நிலைக்குக் கொண்டு வந்துவிட மாட்டாது. ஈவிரக்கமின்றி விதவைகளையும் அனாதைகளையும் ஏமாற்றிப் பணத்திற்காக மிகக்கொடிய செய்கைகளைச்செய்கின்றவன் சிறிதும் மாமிசம்உண்ணாமலிருந்தாலும் எந்த மிருகத்திற்கும் கீழானவனாகவே இருக்கிறான். எவன் ஹிருதயத்தில் எவருக்கும் தீங்கு செய்யும் எண்ணம் ஒருபோதும் இல்லாமலிருக்கிறதோ, தன் பெரிய விரோதிக்கும் நேரக்கூடிய சம்பத்தைக்கொண்டு எவன் சந்தோஷமடைகிறானோ அப்படிப்பட்ட மனிதன் உண்மையில் ஒரு பக்தனும் யோகியுமாகிறான். அப்படிப்பட்ட மனிதன் தினந்தோறும் பன்றி மாமிசத்தையே புசித்தபோதிலும் எல்லோருக்கும் ஆத்மவழியைக் காட்டும் குருவாகிறான். ஆதலால், வெளி அப்பியாசங்களெல்லாம் உள்ளே பரிசுத்த குணத்தை விர்த்தி செய்யும் சாதனங்கள் மாத்திரமேயென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். வெளித்தோற்றங்களில் எல்லா விவரங்களையும் அனுசரிப்பது முடியாத காரியமாயிருக்கும்போது உள்ளே பரிசுத்த நிலையை அடைய மாத்திரம் முயற்சி செய்வது மிக நல்ல காரியம். ஆனால், உண்மையான தர்ம சாரமாகிய ஆத்மநிலையை மறந்து வெளியடையாளங்களில் ஒன்றையும் விடாமல் எல்லாவற்றையும உயிரற்ற யந்திரங்கள்போல் இறுகத்தழுவிக் கொண்டு நிற்கும் மனிதனும் தேசசமூகமும் கஷ்டத்திற்குள்ளாவது நிச்சயம். உள்ளேயிருக்கும் உயிரைக் குறித்துக் காட்டும் அடையாளமாக உருவம் விளங்கினால் அதுவும் முக்கியமானதுதான். எப்போதாவது உள்ளேயிருக்கும் உயிர் ஸ்தானத்தை அந்த உருவம் தெரிவிக்கவில்லையா

ஞல், ஜீவஸ்வரூபத்தை விளக்காத உருவமென்று தோன்றிஞல், அதை இரக்கமின்றி நாசம் செய்துவிடலாம்.

பக்தி யோகத்தை நிறைவேற்றுவதற்கு அடுத்த சாதனம் ஆநவஸாத் என்று சொல்லப்படும் பலம். "பலமில்லாதவர்களால் ஆத்மநிலை அடைய முடியாது." என்று சுருதிகள் கூறுகின்றன. சரீரபலம் மனேபலமென்னும் இரண்டுவித பலஹீனங்களும் இங்குச் சொல்லப்படுகின்றன. உறுதியும் பலமும் உள்ளவர்களே மதவிஷயத்திற்கு ஏற்ற மாணுக்கர்கள். அற்பமான சிறு பலவீனர்களால் யாது செய்ய முடியும்? எந்த யோகத்தையும் அப்பியாசம் செய்யும்போது சரீரத்திலும் மனதிலும் அடங்கிக் கிடக்கும் சூக்குமசக்திகள் சிறிது எழும்பியவுடன் அவர்கள் தாங்க மாட்டாமல் சிதறிவிடுவார்கள். யௌவன புருஷரும் திட சரீரமுள்ளவரும் பலவான்களும் எவர்களோ அவர்களே வெற்றி பெறுவார்கள். மனேபலம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு தேக பலமும் முக்கியமாகும். இந்திரியங்களை அடக்க முயற்சிசெய்வதன் பயனுக ஏற்படும் அதிர்ச்சியைப் பலமுள்ளவனே தாங்க முடியும். பக்தனுக ஆகவேண்டும் என்று விரும்புகிறவன் பலமும் திட சரீரமும் உடையவனுயிருத்தல்வேண்டும். பலவீனர்கள் எந்த யோகத்தை அப்பியாசம் செய்ய முயற்சி செய்தாலும் ஏதேனும் தீராத நோய் வாய்ப்படுவது அநேகமாக நிச்சயமென்றே சொல்லலாம். ஆதலால், வேண்டுமென்றே சரீரத்திற்குப் பலவீனத்தை வரவழைப்பது ஆத்மப்பயிற்சியில் அபிவிருத்தியடைவதற்கு ஏற்ற காரியமல்ல.

மனேபலமில்லாதவர்களும் ஆத்மநிலையை அடைய முடியாது. பக்தனுக விரும்புகிறவன் உற்சாகத்துடனிருக்க வேண்டும். "ஒருபோதும் புன்சிரிப்புக் கூடாது; முகத்தில் எப்போதும் இருள் அடர்ந்து நிற்கவேண்டும்; முகம் சுருங்கிவிடவேண்டும்; இதுவே மதவிஷயத்தில் சிரத்தையுள்ளவர்களுடைய லட்சணம்" என்று பலர் நினைக்கிறுர்கள். இவ்விதம் தேகம் பலம் குன்றி நீண்ட முகங்களுடன் கூடி

பவர்கள் வைத்தியர்களிடம் செல்லத் தகுதியுடையவர்கள் என்பதே எனது அபிப்பிராயம். அவர்கள் ஒருபோதும் யோகிகளாக முடியாது. உற்சாக மனத்துடன் கூடியவர்களே விடாமுயற்சியுடன் கூடியவர்களாவார்கள். ஆயிரம் கஷ்டங்களேற்பட்டாலும் அவற்றின் மூலமாக வழியைக் கண்டுபிடிப்பவர் பலமான மனமுள்ளவர்களாகவே இருக்க வேண்டும். எல்லாக் காரியங்களிலும் மிகக்கஷ்டமான காரியமாகிய யோகாப்பியாசத்திற்கு எவ்வளவு பலம் வேண்டுமென்று சொல்லவும் வேண்டுமோ? மாய வலையிலிருந்து அந்த வலையைக் கிழித்துக்கொண்டு வழியை உண்டாக்க மகத்தான மனோ பலம் கொண்டவர்களே வேண்டும்.

ஆனால், அளவு கடந்த உற்சாகமும் கூடாது. அநுத்தர்ஷம் என்ற தர்மம் பக்தனிடம் இருக்கவேண்டும். அளவு கடந்த உற்சாகத்தால் தீர்க்கமான எண்ணங்கள் தடைப்படும். மனதினிடமுள்ள சக்திகள் சிதறிப்போகும். மனோ பலம் எவ்வளவுக்கெவ்வளவு திடமுள்ளதாக இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு வெறிகள் அடங்கிக் கிடக்கும்; உணர்ச்சிகள் மிதமிஞ்சி எழும்பிவிடாமல் அடங்கிக் கிடக்கும். ஆதலால், துக்கமான தோற்றம் எவ்வளவு கெடுதலை விளைக்குமென்று சொன்னோமோ அதுபோலவே அளவு கடந்த உற்சாகமும் கெடுத்துவிடும். மனம் திடமாகவும் சமத்துவ நிலையுடன் கூடிய சாந்தமாகவும் இருந்தால் மாத்திரம் ஆத்மானுபவம் சாத்தியமாகும்.

இவ்வாறு ஒருவன் கடவுளிடம் அன்பென்ற பக்தி செலுத்தக் கற்றுக்கொண்டு மேன்மேலும் எழவேண்டும். இதற்குத்தான் ஆரம்ப பக்தி என்று பொருள்கொண்ட கௌணபக்தி என்று பெயர்.

இரண்டாம் பாகம்

பராபக்தி

முதலாவது அதிகாரம்

ஆரம்ப சாதனமாகிய தியாகம்

இதுவரையில் ஆரம்ப பக்தியின் லட்சணத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறி முடித்தோம். இப்போது பராபக்தி என்ற உன்னதமான தியானத்திற்குள் செல்ல வழி என்ன என்று அறியத் தயாராயிருக்கிறோம். ஆதலால், அந்த உயர்ந்த தெய்வ வணக்கத்திற்கு முடிவான சாதன மென்ன வென்று இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம். நாமங்களை உச்சரிப்பது, கர்ம பாகங்களைத் தழுவுவது, நாநா ரூபங்களைப் பாவனையால் வணங்குவது முதலிய ஆரம்ப அப்பியாசங்க ளெல்லாம் ஜீவனைப் பரிசுத்தம் செய்வதற்காக ஏற்பட்ட வைகளே என்பதை மறக்கலாகாது. பரிசுத்தம் செய்யக் கூடிய சாதனங்களுக்குள் மிகச் சிறந்தது எது இல்லையானால் ஒருவனும் உன்னத தியானத்தில் நிலைக்க முடியாதோ அவ் வித சாதனம் தியாகமென்று சொல்லப்படும். தியாகமென்ற பெயரைக் கண்டு பலர் நடுங்கிவிடுகிறார்கள். ஆனால், அது இல்லாமல் எவ்வித ஆத்மதர்மவளர்ச்சியு மேற்படாது. எல்லா யோகங்களுக்கும் தியாகம் என்பது அவசியம். ஆத்மப் பயிற்சிகளுக்கெல்லாம் நடுநாயகமாகவும் ஆரம்பப்படி போலவும் அமைந்திருப்பது தியாகமென்ற நிலையேயாம். சுருக்கிச் சொல்வோமானால் மதமென்பதே தியாகத்தைத்

தவிர வேறில்லை. உலக விஷயங்களிலிருந்து ஜீவன் திரும்பி விஷய சொரூபமெல்லாம் போயடங்கும் ஹிருதயஸ்தானத்தில் ஆழ்ந்து பார்க்க முயற்சி செய்யும்போது—எவ்விதமாகவோ ஸ்தூல ரூபத்தை அடைந்துவிட்ட ஜீவனாகிய மனிதன் தான் இவ்விதம் ஜடமாகவே ஆகிக்கொண்டு வருவதால் அழிந்துபோகவேண்டும் என அறிந்து பிரகிருதியினின்றும் தன் முகத்தைத் திருப்பும்போது—தியாக சக்தியும் உண்மையான ஆத்ம எழுச்சியும் ஏற்படுகிறது. தன் செய்கைகளின் பயன்களை விட்டுவிடுதல்—அதாவது, தன் ஊழியத்தின் பயனாகக் கிடைப்பதிலும் பற்றுவைக்காமலிருத்தல்—இதுவே கர்மயோகியின் தியாகநிலை. கர்மயோகி இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் தான் எவ்வித பயனையும் அடைய விரும்பமாட்டான். பிரகிருதி முழுமையும் ஜீவனுக்கு அனுபவம் ஏற்படுவதற்காகவே உண்டாயிற்று என்பதும், நமது அனுபவங்களெல்லாம் பிரகிருதியினின்று தான் எப்போதும் வேறு என்று ஜீவன் அறிவதற்காக மாத்திரமே உபயோகமுள்ளவை யென்பதும், தான் எப்போதும் ஆத்மசொரூபி, ஜடத்துடன் ஏற்படும் சம்பந்தமெல்லாம் சிறிது காலத்திற்கு மாத்திரமே இருக்கக்கூடியது என்று நினைப்பதும் ராஜயோகியின் லட்சணமாகும். ஆதலால், பிரகிருதியினிடம் தனக்கு நேரே ஏற்படும் அனுபவத்தைக் கொண்டு ராஜயோகி தியாக மென்னும் பாடத்தைப் படிக்கிறான். ஞானயோகியின் நிலைமை வெகு கடினம். ஸ்தூலமாகத் தோன்றும் இந்தப் பிரகிருதி முழுவதும் மாயாசொரூபமென்று ஞானயோகி ஆரம்பத்திலிருந்தே அனுபவிக்கவேண்டும். பிரகிருதியின்கண் தோன்றும் சக்தி சொரூபங்களெல்லாம் ஜீவனுக்கே சொந்தம், பிரகிருதிக்குச் சொந்தமல்ல என்று அறியவேண்டும். சகல அறிவும் அனுபவங்களும் பிரகிருதியி லில்லையென்றும், ஆத்மாவினிடமே உள்ளவையென்றும் அவன் ஆரம்பத்திலிருந்தே அறியவேண்டும். இவ்வாறு புத்தி பலத்தைக் கொண்டு மாத்திரமே பிரகிருதியினிடம் தான் பந்தப்பட்

டிருக்கும் நிலைமையைத் தெறித்துக்கொண்டு ஞானயோகி எழும்பவேண்டும். பிரகிருதி சம்பந்தமான விஷயங்களனைத்தும் மறைந்துபோகுமாறு செய்து தான் மாத்திரமே எஞ்சி நிற்கிறான்.

பலவிதமான தியாகங்களுள் பக்தியோகியின் தியாகமே இயற்கையாக அமையப்பெற்று விளங்குவது. நமது பலத்தைக்கொண்டே—பலவந்தமாக—எதனிடமிருந்தும் நாம் ஒதுங்கவேண்டிய அவசியமே இங்குக் கிடையாது. பக்தனுடைய தியாகம் இலகுவாயும், அமைதியாக விருத்தியாகிக்கொண்டும், சுற்றிலுமுள்ள பிரகிருதி வஸ்துக்களுடன் தானும் இயல்பாகவே வளர்ந்துகொண்டும் விளங்குகிறது. நம்மைச் சுற்றிலும் தினந்தோறும் இவ்வித தியாகங்களின் சிதறுண்ட தோற்றங்களை நாம் காண்கிறோம். ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயினிடம் காதல் வைக்கிறான். சிறிது காலத்திற்கெல்லாம் மற்றொருத்தியைக் காதலித்து முதலில் காதல் கொண்டவளைத் துறந்து நழுவிவிடுகிறான். இவள் அவன் மனதிலிருந்து மெதுவாக நழுவிவிடுகிறாள். இதே மாதிரி ஒரு பெண் ஒருவனை இச்சிக்கிறாள். பிறகு மற்றொருவனிடம் காதல் ஓடுகிறது. அப்போது முதல் மனிதன் அவள் மனத்திலிருந்து தானே நழுவிவிடுகிறான். ஒருவன் முதலில் தன் நகரத்தினிடம் அன்பு வைக்கிறான்; பிறகு தன் தேசத்தினிடம் அன்பைச் செலுத்துகிறான். அப்போது அவனுக்குத் தன் நகரத்தினிடம் இருந்த ஆழ்ந்த அன்பு சுலபமாகவே நழுவிவிடுகிறது. முடிவில் ஒருவன் உலக முழுமையிலும் தன் அன்பு பரவுமாறு செய்யும்போது அவன் தன் தேசத்தினிடம் வைத்திருந்த வெறிகொண்ட தேசபக்தியெல்லாம் அவனுக்கு யாதொரு துன்பமுமின்றி நழுவிவிடுகிறது.

கல்விப்பயிற்சி யில்லாதவனுக்கு இந்திரிய விஷய சுகங்களில் ஆழ்ந்த ஆசை உண்டாகிறது. பிறகு கல்விப்பயிற்சி ஏற்படும்போது புத்தியினால் அனுபவிக்கக்கூடிய சுகங்களில் அவன் இச்சை செல்கிறது. இந்திரிய விஷயானுபவங்களின்

மகிமை குறைந்துபோகின்றது. ஒரு நாய் அல்லது ஓநாய் தன் உணவைப் புசிக்கும் ஆவலுடன் ஒரு மனிதன் தன் உணவைச் சாப்பிட முடியாது. அவ்வளவு பலமான இச்சா பூர்த்தி மனிதனுக்கு உணவின் மூலமாக ஏற்பட முடியாது. அதுபோலவே, புத்தி வியவகாரங்களில் மனிதன் அடைகிற சுகங்களும் நாய்க்கு ஒருபோதும் கிடைக்காது. முதல் முதல் கீழ்ப்பட்ட இந்திரிய விஷயங்களுடன் சுகம் என்பது இணைக்கப்பட்டிருக்கிறது. பிராணி உயர் நிலைக்கு எழும்பியபின் தாழ்ந்த சுகம் அதற்குப் பயன் தருவதில்லை. மனித வர்க்கத்தில் மிருகத்திற்குச் சமமாக இருக்கும் மனிதருக்கு இந்திரிய விஷய சுகங்கள் பலமாகத் தோன்றும். மேலான பயிற்சியை உடைய மனிதன் புத்தியின் மூலமாகவும் மற்றுமுள்ள சூட்சுமவழியிலும் மேலான சுகத்தைக் காண்கிறான். அதுபோலவே, புத்திக்கு மேம்பட்ட நிலையாகிய ஈசுவரானுக்கிரகம் பொருந்திய ஆத்மநிலையை ஒரு மனிதன் அடைந்துவிட்டால் அங்கே அவன் ஒரு விசேஷமான ஆநந்தத்தை அனுபவிக்கிறான். அப்போது இந்திரிய விஷய சுகங்களும், புத்தியின் மூலமாக அடையப்படும் சுகங்களும் இந்தப் பேராநந்தத்தின் முன் சூன்யங்களாகின்றன. அவ்வித நிலை இயற்கையில் வந்து கூடுகிறது. சந்திரன் பிரகாசமாக ஒளி வீசும்போது நட்சத்திரங்கள் மங்கிவிடுகின்றன. சூரியன் பெருமையுடன் உதிக்கும் போது இந்தச் சந்திரனும் தன் ஒளி மழுங்கி விளங்குகிறான்.

பக்தியை அடைய அவசியமான தியாகம் ஏற்படுவதற்கு நம்மிடம் உள்ள எதையும் நாம் நாசம் செய்யவேண்டியதில்லை. அதிக பலமாகக் கிளம்பும் ஒளியின்முன் சொற்ப பலத்துடன்கூடிய வெளிச்சம் மங்கிப்போவது போலவும், முடிவில் இந்த வெளிச்சமே மறைந்துவிடுவது போலவும் நம்மிடம் பக்தி இயற்கையாகவே விர்த்தியாகி விடுகிறது. பக்தன் கடவுளிடம் செலுத்துகிற தீவிர பக்தியின் முன் இந்திரிய விஷய சுகங்களும், புத்தியின் மூலமாக

அடையப்படும் சுகங்களும் குறுகிப்போய் முடிவில் நாச மாக்கப்படுகின்றன. அவ்வளவு தீவிரமாகக் கடவுள் பக்தி எழும்போது அதற்குப் பராபக்தி அல்லது உன்னத தியா னம் என்று பெயர். இவ்வித நிலைக்கு எழும்பிய மனிதனு க்கு ரூபங்களெல்லாம் மறைந்து போகின்றன. கிரியா பாகங்கள் இவனைவிட் டோடுகின்றன. புத்தகங்கள், விக் கிரகங்கள், கோயில்கள், மதங்கள், தேசங்கள், ஜாதிப் பிரி வினைகள் என்னும் பந்தங்களெல்லாம் தாமே நழுவிவிடுகின் றன. அவனுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய எதுவும் மீதி யில்லை. கப்பல் சிதறிப்போவதைப்போல் அவனது பந்தங்கள் நீங்கிவிடுகின்றன. ஒரு காந்த மலையி னிடம் ஒரு கப்பல் திடமென்று நெருங்கவே அக் கப்பலி லிருந்த இரும்புக் கம்பிகளும் ஆணிமுதலியவைகளும் தெறித்துவிட, பலகைகள் தனித்தனியே போய்விட்டன என்று ஒரு கதை சொல்வதுண்டு. அதுபோலவே, பக்த னுடைய ஜீவனைப் பிடித்துக் கட்டிவைத்துக்கொண்டிருக் கும் பந்தங்களெல்லாம் அப்போதே கடவுளின் கருணை யால் விடுபட்டுப் பிறகு ஜீவன் எப்போதும் சுதந்திரனாகி றான். ஆதலால், பக்தியின் முன் தோன்றுகிற தியாகத்தில் கஷ்டமெதுவும் கிடையாது; போராட்டம் செய்து முயற்சி செய்யவேண்டிய தேவையே இல்லை. எதையும் அடக்க வேண்டும் என்ற கஷ்டம் கிடையாது. தன் உணர்ச்சிகளை பக்தன் அடக்கிவிடவேண்டிய அவசியமே கிடையாது. அவற்றையெல்லாம் பலமாக்கிக் கடவுளிடம் செலுத்தப் பழகவேண்டும்.

இரண்டாவது அதிகாரம்

உயர்ந்த அன்பின் மூலமாகவே தியாகம் ஏற்படுகிறது

பிரகிருதியெங்கும் அன்பின் வேலையை நாம் பார்க்கிறோம். சமூகத்தில் செய்யப்படும் நற்காரியங்களும் பெருமையும் கம்பீரத் தன்மையுமுள்ள காரியங்களும் அன்பின் வேலையாகவே இருக்கிறது. சமூகத்தில் கெட்டதும் மிகக் கொடியதுமாகத் தோன்றும் காரியங்களும் அதே அன்பின் சக்தியால் ஏற்பட்டவைகள். தம்பதிகளுக்குள் பரிசுத்தமான அன்பு ஒருவர்மீது மற்றொருவருக்கு ஏற்படுமாறு செய்ய எந்த உணர்ச்சி காரணமோ அதே உணர்ச்சிதான் மிகக் கீழ்த்தரமான இச்சைகளையும் பூர்த்திசெய்யக் காரணமாகிறது. உணர்ச்சி ஒன்றேயாயினும் இந்த இரண்டு இடங்களிலும் வெவ்வேறு விதங்களில் ஆவிர்ப்பவிக்கின்றது. ஒரு மனிதன் நன்மையையே செய்துகொண்டு தன்னிடம் இருப்பதையெல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறான். மற்றொருவன் தன் சகோதரர்களின் உயிர்களைக் கவர்ந்து அவர்களிடமுள்ள சொத்துக்களைப் பறிமுதல் செய்துகொள்கிறான். இரண்டு இடங்களிலும் உள்ள காரணம் ஒரே விதமான அன்புதான். கொள்ளையடிக்கின்றவன் தன்மீது எவ்வளவு அன்பைச் செலுத்திக்கொள்கிறானோ அவ்வளவு அன்பை நற்காரியம் செய்கிறவன் அந்நியர்மீது செலுத்துகிறான். கொள்ளையடிப்பவன் தவறான மார்க்கத்தில் தன் அன்பைச் செலுத்தி யிருக்கிறான் என்றும், நன்மையைச்செய்கிறவன் ஒழுங்கான வழியில் அன்பைச் செலுத்தியிருக்கிறான் என்றும் சொல்வோம். சமையலுக்கு உதவி செய்யும் நெருப்பு, குழந்தையைச்

சுட்டுவிடுகிறது. அதற்காக நெருப்பின்மீது பிழை சொல்ல முடியுமோ? அந்த நெருப்பை உபயோகித்த விதம் தவறு என்று சொல்வது ஒழுங்கான சமாதானமல்லவா? இரண்டு மனிதர்களுக்குள் அவர்கள் சேர்ந்தே இருக்கவேண்டும் என்ற விருப்பம் பலமாக நிலைத்து ஊன்றிக்கொண்டால் அதுதான் அவர்களுக்குள் ஏற்படும் அன்பு என்று சொல்லப்படும். முடிவில் இந்த அன்பு எல்லாரையும் ஒன்று படுத்திவிடும். இதே விஷயத்தை நாம் மேலான நிலைகளிலும் கீழ்ப்பட்ட காரியங்களிலும் காண்கிறோம். உயர்ந்த அன்பைப்பற்றித் தெரிவிப்பது பக்தியோகம் என்ற சாஸ்திரம். 'உயர்ந்த அன்பை எவ்வாறு கையாளவேண்டும்? எதை நோக்கிச் செலுத்தவேண்டும்? புதிய லட்சியம் ஏற்படுத்தி அதை எப்படி உபயோகிக்கவேண்டும்? முடிவில் ஆத்மாநந்தம் அடைவதாகிய உன்னத பயனை எவ்வாறு அடையவேண்டும்?' என்ற விஷயங்கள் இந்த சாஸ்திரத்தில் தெளிவாக விளங்கும். "தியாகம் செய், விட்டுவிடு" என்று பக்தியோகம் சொல்லவேயில்லை. "அன்பைச் செலுத்து, உயர்ந்த லட்சியத்தினிடம் அன்பைச் செலுத்து" என்றுதான் அது தெரிவிக்கிறது. அன்பு செலுத்தப்பட்ட விஷயம் உன்னத நிலையிலுள்ளதானால் கீழ்ப்பட்ட விஷயங்களெல்லாம் கீழே விழுந்துவிடும்.

எல்லாக் காலங்களிலும் உண்மையான பக்தர்களின் ஹிருதயங்களிலிருந்து வெளிக் கிளம்பும் தொனி ஒரே மாதிரிதான் அமைந்திருக்கிறது. "கடவுளே! உன்னைப் பற்றி நான் எவ்வித வர்ணனையும் சொல்ல முடியாது. என் அன்பின் முதிர்ச்சியாகிய பக்திக்கு நீ விஷயமாகிறாய்; அவ்வளவே நான் சொல்ல முடியும். நீ மிக்க அழகுடையவன்; அழகு என்பதே உன் சொரூபம்!" இதுவே பக்தர்கள் இருக்கும் நிலை. ஆதலால், இந்த யோகத்தை அடைவதற்கு நாம் செய்யவேண்டிய தெல்லாம் என்னவென்று கேட்டால், 'மிக்க அழகிய நிலை வேண்டும்' என்று நாம் விரும்பும் விருப்பத்தையெல்லாம் கடவுளையே நோக்கிச் செலுத்த

வேண்டும்; இதுதான் நாம் செய்யவேண்டிய காரியம். ஒரு மனிதனுடைய முகத்திலும், ஆகாயத்திலும், நட்சத்திரங்களிடமும், சந்திரனிடத்திலும் தோன்றும் அழகு என்னவென்று ஆராய்ந்து பாருங்கள். உண்மையாக எல்லா வஸ்துக்களையும் அணைத்துக்கொண்டு விளங்கும் கடவுளின் வடிவத்தில் ஒரு சிறு பாகத்தையே நாம் இவற்றில் காண்கிறோம். "அவனது பிரகாசத்தால் எல்லா வஸ்துக்களும் பிரகாசிக்கின்றன." என்று சாஸ்திரங்கள் கூறவில்லையா? அவனது ஜோதியைக்கொண்டே எல்லா வஸ்துக்களும் பிரகாசிக்கின்றன. பக்தியோகம் தெரிவிக்கிறபடி இந்த உன்னத பாவனையாகிய அழகை ஏற்றுக்கொள்ளுங்கள். குறுகிய வியஷ்டித் தன்மைகளிடம் உங்கள் அன்பைச் செலுத்தி அவற்றையே விஷய சுகங்களாக அடைவதை மறந்துவிடுங்கள். தன்னலத்தை விளைவிப்பதாகிய சிறு உலக விஷயப் பற்றுகளிலிருந்து நீ உன்னை விடுவித்துக்கொள். உன் காரியங்களெல்லாம் இந்த மனிதவர்க்கத்திடமே உண்டு என்ற பாவனையை ஒருபோதும் கொள்ளவேண்டாம். ஒரு சாட்சி போலவே, அல்லது மாணாக்கனாகவே நின்று பிரகிருதியின் தோற்றங்களைக் கவனித்துப் பார். ஒவ்வொரு மனிதனையும் பற்றின்மை என்ற உணர்ச்சியுடன் கவனித்துப் பார். அப்போது உலகில் அன்பென்ற மகத்தான உணர்ச்சி எவ்வளவு அழகாக வேலை செய்கிறதென்பது உனக்கு விளங்கும். சில வேளைகளில் சிறு சச்சரவு, சண்டை ஏற்பட்டுச் சிறிது தாழ்ந்துபோவது கூடத் தோன்றக்கூடும். ஆனால், அதுவும்கூட உண்மையில் உயர்ந்த நிலையில் உள்ள அன்பினிடம் செல்வதற்கு ஏற்படும் போராட்டமெனத் தெரிய வரும். தனியே நின்று இந்தப் போராட்டங்களெல்லாம் உன்னதமான அன்பை அடையுமாறு மனிதருக்கு வழி காட்டுவதைப் பாருங்கள். உலக சம்பந்தமான சூழலில் இருக்கும்போதுதான் ஒருவன் கஷ்டத்தை அனுபவிக்கிறான்; அவ்வித உணர்ச்சி உலக சம்பந்தமான விஷயங்களில்தான் உண்டு. அதை விட்டு வெளிப்பட்டு சாட்சி

யாக மாத்திரம் அல்லது மாணாக்கனாக மாத்திரம் இருந்தால், ஆகா! எவ்வித காட்சி மனிதனுக்குத் தென்படும். கோடானு கோடி வழிகளில் கடவுள் தன் அன்பின் வடிவத்தை ஆவிர்ப்பவிக்கச் செய்திருக்கிறார் என்பது விளங்கும்.

“எங்கேயாவது சிறிது ஆநந்தம் காணப்பட்டால், அது கடவுளின் சொரூபமாகவே உள்ள நித்யாநந்தத்தின் ஒரு சிறு சுடர்.” கீழ்ப்பட்டதாகிய பற்று நிலையிலும் கூட கடவுளின் அன்பு சொரூபத்தின் விதையே தோன்றுகிறது. ஸம்ஸ்கிருதத்தில் கடவுளுக்கு ஹரி என்று பெயர் உண்டு. எல்லா விஷயங்களையும் தனக்குள் இழுத்துக் கொள்கிறவன் என்பது அந்தப் பதத்தின் பொருள். மானிட ஹிருதயங்களையும் தன்னிடம் இழுத்துக்கொள்ளத் தக்க புருஷன் அவர் ஒருவரே. ஒரு ஆத்மாவை அவரைத் தவிர வேறு எவர் இழுத்துக்கொள்ளமுடியும்? அசேதனமாகிய ஜடப்பொருள் உண்மையில் ஒரு ஜீவாத்மாவை இழுத்துக்கொள்ள முடியுமென்று நினைக்கிறீர்களா? ஒரு போதும் இவ்வாறு நேர்ந்ததில்லை, இனியும் இவ்வாறு நேராது. அழகிய முகத்தைத் தேடிக்கொண்டு ஒரு மனிதன் போகிறான். அந்த முகத்தில் உள்ள ஜட வஸ்துக்களின் ஒரு விதமான சேர்க்கையா இவனை இழுத்தது? இல்லவேயில்லை. அந்த ஜடவஸ்துக்களைத் தாங்கிக் கடவுள் சொரூபமும் அன்பின் சொரூபமும் அங்கு விளங்குகின்றன. அஞ்ஞானி இதை யறிவதில்லை. அப்படியிருந்தும் அறிந்தோ அறியாமலோ அந்தப் பேரன்பு விளங்குமிடத்தையே அவன் பார்த்துக்கொண்டு நடக்கிறான். இவ்விதம் கீழ்ப்பட்ட பற்று நிலைக்கும் கடவுளின் சக்தியே காரணமாக ஜடவஸ்துக்களிலும் தோன்றுகிறது. “அன்பின் இருப்பிடமே! எந்த ஸ்திரீயும் புருஷனுக்காக மாத்திரமே புருஷனை இச்சிக்கவில்லை. அங்கு அந்தப் புருஷனிடம் உள்ளே அந்தர்யாமியாக விளங்கும் ஆத்மசொரூபமாகிய கடவுளுக்காக மாத்திரமே புருஷனிடம் அன்பு செலுத்தப் படுகிறது.” அன்பு செலுத்தும் பெண்கள் இதை யறியா

மலுமிருக்கலாம். ஆனால், இவ்விஷயம் மாத்திரம் உண்மைதான். "அன்பின் நிலையே! மனைவியினிமித்தமாக எவரும் மனைவியினிடம் அன்பு செலுத்துவதில்லை. மனைவியினிடம் காணப்படும் ஆத்மசொரூபத்திற்காகவே அன்பு செலுத்தப்படுகிறது." இதுபோலவேதான் உலகில் ஒரு குழந்தையினிடமும் மற்றெந்த வஸ்துவினிடமும் மனிதன் அன்பைச் செலுத்துவதெல்லாம். உள்ளே அந்தர்யாமியாக விளங்கும் கடவுள் சொரூபத்திற்காகவே அன்பு செலுத்தப்படுகிறது. கடவுள் ஒரு பெரிய காந்தம்போலவும், நாமெல்லோரும் இரும்புத் தூள்கள் போலவும் இருக்கிறோம். எல்லோரும் எப்போதும் அவரால் இழுக்கப்படுகிறோம். அவரை நோக்கிச் செல்லவே முயற்சி செய்கிறோம். ஆமாம்! இது உண்மைதான். உலகில் நாம் படும் கஷ்டமெல்லாம் சுயநலத்திற்காக அல்ல. மூடர்கள், தாம் செய்வதை யறியமாட்டார்கள். அறியாவிட்டாலும் அவர்கள் செய்யும் முயற்சிகளும்—வாழ்நாட்கள் முழுவதிலும் அவர்கள் அடையும் கஷ்டங்களெல்லாம்—அந்தப் பெரிய காந்தத்தினிடம் நெருங்குவதற்காகவேயாம். முடிவில் கடவுளிடம் நாம் சென்று அவருடன் ஒன்றாக ஆவதற்காகவே வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் போராட்டங்களெல்லாம் நடைபெறுகின்றன.

வாழ்க்கையிலேற்படும் போராட்டங்களின் உண்மையான பொருளும் அவற்றின் பயனும் இப்படிப்பட்டவையென்று பக்தியோகி மாத்திரமே அறிவான். நீண்ட காலப் போராட்டங்களை அவன் அனுபவித்திருக்கிறான். ஆதலால், அவற்றின் கருத்தை அவன் உள்ளபடி அறிந்து இப்போது அவற்றினின்றும் விடுதலையடைய விரும்புகிறான். சிறு போராட்டங்களை யெல்லாம் ஒழித்து, சகலத்தையும் வசீகரிக்கும் பெரிய ஹரியினிடம் நேரே செல்ல இச்சிக்கிறான். கடவுள் அவனை மிகப் பலமாகத் தன்னிடம் இழுப்பதால் மற்ற பற்றுக்களெல்லாம் அவன்முன் இல்லையாகின்றன.

கடவுளிடம் செலுத்தப்பட்ட எல்லையில்லாத அன்பு குடி கொண்ட அவனது ஹிருதயத்தில் வேறெவ்வித சிறு அன்புக்கும் இட மில்லை. வேறெவ்வித மிருக்க முடியும்? கடவுளின் சொரூபமாகவே இருக்கப்பட்ட அன்பென்னும் சமுத்திரத்திலுள்ள திவ்ய தீர்த்தத்தால் அவனது ஹிருதயம் நிறைந்திருக்கிறது. பக்தி என்பது இவ்வாறு அந்த ஹிருதயத்தை நிரப்பிவிடுவதால் சிறு அன்புகளுக்கு அங்கு இட மில்லை. இதுவே பக்தனுடைய தியாகம். கடவுளல்லாத இதர வஸ்துக்களை யெல்லாம் பக்தன் தியாகம் செய்து விடுகிறான். இதற்குக் காரணம் கடவுளிடம் அவனுக் கேற்படும் பெரிய பற்றுகிய அநுராகம் என்பதே. அவ்வித தியாக பலம் ஏற்படும்போது பராபக்தி என்ற உன்னத நிலைக்கு ஜீவன் செல்வதற்கு வழி யேற்படுகிறது. அப்போது நாம் உண்மையில் பக்தியென்பது என்னவென்று அறிய முடியும். பராபக்தியின் அந்தரங்க ஸ்தானத்தை அடைந்த மனிதன்தான் தன் ஆத்மதர்ம அனுபவங்களுக்கு நாநா ரூபங்களும் சாயைகளும் பயன்படமாட்டா என்று சொல்வதற்கு உரிமை யெற்றவனுவான். மனித வர்க்கம் சகோதரத்தன்மையுடையது என்று அனுபவத்தாலறியக்கூடிய உன்னதமான அன்பின் பீடத்தை அவனே அடைந்தவனுகிறான். மற்றவர்கள் சகோதரத்வத்தைப் பற்றிப் பேசுகிறவர்களே யாவர். அவ்வித பக்தன்மாத்திரமே பேதங்களைக் காணுமலிருக்கிறான். அன்பென்ற மகத்தான சாகரம் அவனுக்குள் புகுந்துகொண்டதன் பயனுக நாம் பார்ப்பதுபோலத் தினந்தோறும் மனிதர்களையும் மிருகங்களையும் செடிகளையும் சூரிய சந்திர நட்சத்திரங்களையும் அவன் காண்பதில்லை. அவனது பக்திக்கு இருப்பிடமாகிய வஸ்துவே எங்கும் எல்லா வஸ்துக்களிலும் இருப்பதாக அவனுக்குத் தோன்றும். அவனது ஹரி சொருபமே அவனுக்கு ஒவ்வொரு முகத்திலும் தென்படுகிறது. சூரியனது ஜோதியும் சந்திரனது ஒளியும் அந்தக் கடவுளின் ஆவிர்ப்பவங்களாகவே அவனுக்குத் தோன்றுகின்றன. ஆழ்ந்த பெருமைக்குணமும் அழகும் விளங்கு

மிடங்களிலெல்லாம் பக்தன் கடவுளின் குணங்களையே காண்கிறான். இவ்வித பக்தர்கள் இப்போதும் வசிக்கிறார்கள். இவர்களில்லாமல் உலகம் ஒருகாலத்திலும் இருந்ததில்லை. இவர்கள் ஒரு சர்ப்பத்தால் கடியுண்டபோதுகூடத் தன் அன்புக் களஞ்சியமாகிய கடவுளிடமிருந்து ஒரு தூதன் வந்தான் என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே சர்வஜகத்திலும் சகோதரத்தன்மை நிறைந்திருக்கிறதென்று சொல்ல உரிமை பெற்றவர்கள். ஏனெனில், அவர்களிடம் மனத்துன்பம் என்பதே கிடையாது. அவர்கள் மனத்தில் விரோத உணர்ச்சி பொறாமைமுதலிய குணங்கள் தோன்ற மாட்டா. ஏன் இவ்வளவு தூரம் வளர்த்தவேண்டும். வெளிப் பிரபஞ்சமாகிய விஷயானுபவ உலகம் அவர்களுக்கு இனி இல்லையாயின, அவர்கள் எவ்வாறு கோபமடைய முடியும் ? தோற்றங்களுக்குள்ளெல்லாம் அவர்கள் தம் அன்பின்மூலமாக சத் பொருளின் இருப்பையே காண்கிறார்கள் அல்லவா ?

ஸ்ரீ ஸ்வாமி இராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம்.

இந்நூலில் அடங்கிய விஷயங்கள் : (1) முன்னுரை, (2) இராமதீர்த்தரின் அற்புத சரித்திரம், (3) ஆத்மாநுபவத்திற்கு மார்க்கம், (4) ஓங்காரத் தொனி, (5) "ஓம்" என்ற மஹா மந்திரத்தின் மகிமை, (6) பின்வரும் காரணங்களுக்காகத் தனியே நடந்து உலாவச் செல்லல்; (7) உண்மையான சுகம் எது ? (8) மதப்பயிற்சியின் பூர்த்தி, (9) ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, (10) மாயை, (11) சமாதி நிலை கலையாத குடும்ப வாழ்க்கை, (12) தேசபக்தி, (13) ஹிந்துமதத்தின் முற்கால தற்கால நிலை, (14) எக்ஜும் செய்வதன் இரஹஸ்யம், (15) வேதாந்தமும் தனசேர்க்கையும், (16) ஜாதி தத்துவம், (17) சில கதைகள், (18)ஹிமாசல காடுகளிலிருந்து கடிதங்கள்வருதல் முதலியன. ஸ்வாமிகள் படத்துடன் உயர்ந்த பயிண்டு. (முதல்பாகம்) விலை ரூ.1-4-0, உயர்ந்த கிளேஸ்பதிப்பு ரூ.2.

மூன்றாவது அதிகாரம்

பக்தியோகத்தின் முக்கிய தத்துவம்

"உன்னையே இடைவிடாமல் சிலர் வணங்கிறார்கள். எப்போதும் அவர்களுக்கு உன்னிடம் மனம் செல்லுகின்றது. பேதமற்ற ஈஸ்வரனையும் பிரம்மத்தையும் மற்றும் சிலர் வணங்குகிறார்கள். இந்த இரண்டு பிரிவினர்களில் எவர்கள் சிறந்த யோகிகள்?" என்று அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கேட்டான். அதற்குப் பின்வரும் பதில் கிடைத்தது:—"என்னிடமே மனதைச் செலுத்துகிறவர்களாய்த் தம் மனங்களை என்னிடம் ஏகாக்கிரம் செய்து இடைவிடாமல் நித்யமாக என்னை வணங்குகிறவர்கள் எவரோ அவர்களே என்னை நன்றாக வணங்குகிறவர்கள்; அவர்களே சிறந்த யோகிகள். வாக்குக்கெட்டாததும், தனித்த குணங்களற்றதும், எங்கும் நிறைந்ததும், மனத்தாலும் நினைக்க முடியாததும், எல்லாவற்றையும் ஊடுருவிக்கொண்டு அசலமாக நிற்பதும், நித்யமான பிரம்மசொரூபமாயுள்ளதும் எதுவோ அந்த வஸ்துவை இந்திரிய நிக்கிரகத்தாலும், எல்லா வஸ்துவும் சமம் என்ற நிச்சய புத்தியாலும், எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்வதன்மூலமாகவும் எவர்கள் வணங்குகிறார்களோ அப்படிப்பட்டவர்களும் என்னையடைகிறார்கள். ஆனால், தோற்றங்களாக வெளிப்படாத அகண்ட சொரூபத்தினிடம் பக்தியைச் செலுத்திவிட்ட மனிதர்களுக்கு போராட்டம் மிகக் கடினமாக இருக்கும். ஏனெனில், சரீர சம்பந்தமுடைய பிராணிகள் யாதொரு சம்பந்தமும் இல்லாத அகண்ட வஸ்துவை நோக்கிப் பிரயாணம் தொடங்குவது மிகுந்த கஷ்டமான காரியமாகத்தான் இருக்கும். தங்கள் கர்மாக்களையெல்லாம் என்னிடமே ஒப்புவித்து, முழு நம்பிக்கையுடன் என்னையே

தியானம் செய்து வணங்கி வேறெந்த வஸ்துவினிடமும் பற்று வைக்காமலிருப்பவர்களை நான் இடைவிடாமல் அவர்களை வாட்டுகிற ஜனன மரணங்களென்ற சாகரத்தினின்றும் சீக்கிரம் கரையேற்றுவேன். அவர்களுடைய மனம் என்னையே முற்றிலும் பற்றி நிற்கிறதல்லவா?” இந்த வாசகங்களில் ஞானயோகமும் பக்தியோகமும் குறிப்பிடப்படுகின்றன. அந்த இரண்டு யோகங்களும் மேற்சொல்லிய வாக்கியங்களால் விளக்கப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லிவிடலாம். ஞானயோகம் மகத்தான பெருமையுடன் கூடியது. தத்துவசாஸ்திர மூலமாகப் பிரம்மானுபவம் அடையும் வழி அது. ஆனால், ஒரு விநோதம் பாருங்கள்; தான் செய்யவேண்டிய காரியங்களை யெல்லாம் தத்துவ மறிவதால் செய்து முடித்துவிடலாமென்று ஒவ்வொரு மனிதனும் நினைத்துவிடுகிறான். ஆனால், தத்துவங்களை யறிந்து ஒழுங்காக வாழ்க்கையை நடத்துவது உண்மையில் மிகவும் கடினம். அவ்விதம் வாழ்க்கையை நடத்த முயற்சி செய்யும்போது பெரிய ஆபத்துக்களில் நாம் அகப்பட நேரிடும். உலகில் உள்ள ஜனங்கள் அரக்கர்சுபாவ முள்ளவரென்றும் தெய்வ சுபாவ முள்ளவரென்றும் இருவகையினராவர். தம் சரீர சுகங்களை மாத்திரமே நினைத்து, அதைப் பாராட்டுவது மாத்திரமே வாழ்க்கையின் சகலமும் என்று நினைப்பவர் அரக்கர் சுபாவமுள்ளவர். அப்படியின்றிச் ‘சரீரம் ஏதோ ஒரு லட்சியத்தை அடைதற்குச் சாதனமாத்திரமே’ என்றும், ‘ஆத்மப் பயிற்சிக்கு ஏற்பட்ட ஒரு கருவியே’ என்றும் நினைப்பவர் தெய்விக சுபாவம் பொருந்தியவராவார். “துஷ்ட சுபாவமுள்ள பிசாசும் தன் காரியத்தைப் பூர்த்தி செய்து முடிக்க சாஸ்திரங்களிலிருந்து மேற்கோளைக்கூறும்” என்று ஒரு பழமொழி யுண்டு. இதுபோல ஞானமார்க்கமாகிய தத்துவவழியானது நல்ல மனிதனுக்கு வழி காட்டி அவன் உன்னத லட்சியத்தை யடைவதற்கு உதவி செய்வதுபோலவே கெட்டவன் செய்யும் காரியங்களுக்கும் நியாயமெடுத்து உரைக்க முன்வருவதுபோ லிருக்கின்றது.

ஞானயோகத்திலுள்ள பெரிய ஆபத்து இதுதான். பக்தி யோகமோ இவ்வித ஆபத்துடன் கூடியதல்ல; இலகுவான தும் இனிமையும் மிருதுத்தன்மையும் பொருந்தியதா யிருக்கிறது. ஞானயோகியைப்போல் அவ்வளவு உன்னத வழிகளைப் பக்தன் பின் பற்றுவதில்லையாதலால் அவ்வளவு பெரிய படுகுழிகளும் இவனுக்குக் கிடையா. எந்த வழி யை ஒருவன் பின்பற்றினாலும் ஆத்மாவின் பந்தங்கள் முழுமையும் தெறித்து நீக்கினாலன்றி ஒரு மனிதனுக்கு முக்தியாகிய சுதந்திரம் கிட்டாது என்பது நிச்சயமாயிற் றே; ஆதலால், இந்த மிருதுவான எளிய வழியைத் தேர்ந் தெடுத்துக்கொண்ட பக்தன் எவ்வாறு முக்திநிலை பெறு வான்?

பகவானுடைய கருணையை அடைந்த கோபிகளில் ஒருத்தியின் நிலைமையைச் சற்றுக் கேளுங்கள்; அவள் செய்த புண்ணிய பாபங்கள் எல்லாம் தீவிர பக்தியினால் தெறித்து நீங்குகின்றன. "கடவுளைத் தியானிப்பதில் ஏற் படும் ஆழ்ந்த உற்சாகமாகியசுகம் அவளுடைய நற்காரியங் களால் ஏற்படும் பந்தங்களை எடுத்துக்கொண்டது. 'தியா னத்தால் அந்தக் கடவுளை அடையவில்லையே' என்று பெரிய துக்கம் ஏற்படும்போது அவளது ஜீவன் அடைகிற துன் பத்தால் அவளது பாவ விருத்திகளெல்லாம் நாசமாக்கப் படுகின்றன. இவ்வாறு எல்லாப் பந்தங்களும் நீங்கப்பெற்று அவள் முக்தியை அடைந்தாள்." (ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் உள்ளவை.) மானிட ஹிருதயத்தில் உண்டாகும் பலவித உணர்ச்சிகளும் இயற்கையில் தவறுகளல்ல வென்பதும், அவற்றை ஜாக்கிரதையாகக் கையாண்டு உயர்ந்த வழியில் செலுத்திக்கொண்டே போய் அதியுன்னதமான பரிசுத்த குண மடையுமாறு செய்யவேண்டியதே காரியமென்பதும் பக்தியோகத்தின் முக்கிய ரகஸ்யமாகும். நாம் கடவுளிடம் போய்ச் சேருமாறு அந்த உணர்ச்சிகளைச் செலுத்தும் வழியே அதியுன்னதமான வழியாகும். மற்ற வழிகள் கள எல்லாம் கீழானவைகளே. மேலும், நம் உணர்ச்சிகளை

யெல்லாம் அவற்றாலேற்படும் பயன்களை நோக்கிச் சுகரூபங்களென்றும் துக்கரூபங்களென்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாமாதலால், 'துக்கரூபமான உணர்ச்சிகளை எப்படி நாம் மேலெழுப்ப முடியும்?' என்று ஒருவன் மயங்கக்கூடும். அது நிச்சயம் முடியும் என்றும், துக்கமும் நமக்குப் பயனை விளைக்கு மென்றும் பக்தியோகம் நமக்குப் போதிக்கிறது. ஒருவன் தனக்குத் தனமில்லை யென்றோ, வேறு உலக சம்பந்தமான விஷய மில்லையென்றோ துக்கப்படுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவன் தவறான வழியில் தன் உணர்ச்சியைச் செலுத்துகிறான். ஆனால், 'வாழ்க்கையின் உன்னதலட்சியமாகிய கடவுள் சாந்நித்தியம் ஏற்படவில்லையே' என்று ஒருவன் துக்கப்பட்டால் அதனால் ஏற்படும் துன்பம் இவன் முக்தியடையுமாறு உதவி செய்துவிடும். அதுபோலவே, சொற்ப தனம் கிடைத்துவிட்டதென்று நீ சந்தோஷமடைந்தால் அப்போது தவறான வழியில் நீ அந்த நல்லுணர்ச்சியைச் செலுத்தியவனாகிறாய். சந்தோஷ உணர்ச்சியை இன்னும் மேலான வழியில் செலுத்தி உன்னதமான லட்சியத்தைப் போயடையுமாறு செய்யவேண்டும். ஏனெனில், உன்னதமான லட்சியத்திலேதான் நம் உன்னதமான ஆநந்தமும் இருக்கவேண்டும். நம்மிடம் தோன்றுகிற எல்லா அறிவுகளும், உணர்ச்சிகளும் இவ்வாறே விவகரிக்கப்படும். அவற்றில் எதுவும் தவறான எண்ணங்களல்லவென்றே பக்தன் சொல்கிறான். அவற்றையெல்லாம் பக்தன் கைப்பற்றி எல்லாவற்றையும் கடவுளிடமே செல்லுமாறு வழி காட்டிவிடுகிறான்.

நான்காவது அதிகாரம்

பக்தனது பல நிலைகள்

கடவுளிடம் செலுத்தப்படும் பக்தி எந்த எந்த விதங்களில் வெளிப்படுகின்றது என்று பார்ப்போம். மரியாதையுடன் கூடிய வணக்கம் முதலில் தோன்றுகிறது. கோயில்களிலும் புண்ணிய ஸ்தலங்களிலும் ஜனங்கள் ஏன் மரியாதையுடன் நடந்துகொள்கிறார்கள்? ஏனெனில், அவ்விடங்களில் கடவுள் வணங்கப்படுகிறார். அவ்வித இடங்களுடன் கடவுளின் நினைப்பும் கூடவே இணைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தேசத்திலும் ஜனங்கள் ஏன் மதாசாரியர்களைக் கண்டு மரியாதை செலுத்துகிறார்கள்? அவ்வித ஆசாரியர்களெல்லாரும் கடவுளைப்பற்றியே போதிக்கிறார்களாதலால் மனிதர்கள் அவர்களுக்கு மரியாதை செலுத்துவது இயல்பாகவே அமைகிறது. இவ்விதம் அன்பிலிருந்து மரியாதை உற்பத்தியென்று தெரிகிறது. நமது அன்பு ஒருவரிடம் செல்லவில்லையானால் அவருக்கு நாம் மரியாதை செலுத்தவும் முடியாது.

பிறகு கடவுளிடம் பிரீதி என்பது ஏற்படுகிறது. இந்திரிய விஷயங்களிடம் மனிதர்களுக்கு எவ்வளவு அளவு கடந்த ப்ரீதி ஏற்படுகிறது பாருங்கள். இந்திரியங்களைத் திருப்தி செய்துவைப்பதற்காக எங்கே வேண்டுமானாலும் சென்று எவ்வளவு ஆபத்துக்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இவ்வளவு தீவிர அன்பைக் கடவுளிடம் திருப்பிவிடுவதே பக்தன் செய்யவேண்டிய கடமையாகும்.

பிறகு துன்பங்களுக்குள் மிக இனிய துன்பம் ஒன்று உண்டு; அதுதான் விரகம் என்று சொல்லப்படுவது; காதலனைப் பிரிந்ததனால் ஏற்படும் மிகுந்த துயரம். 'கடவுளை இன்னும் காணவில்லையே' என்ற காரணத்தால் ஆழ்ந்த துக்

கத்தை ஒருவன் அடைந்து, 'வாழ்க்கையில் அடையத்தக்க ஒரே விஷயமாகிய அக்கடவுளை எப்போது அடைவோம்?' என்று ஏக்கமடைந்து, அதனால் அதிருப்தியுள்ளவனாய் வெறுப்பும் கொண்டு விளங்குகிறவன் விரகத்தை அடைந்தவனென்று சொல்லப்படுவான். அவ்வித மனோபாவனை உள்ளவன் தான் காதலித்த (ஒப்பற்ற) வஸ்துவைத் தவிர வேறெதைக் கண்டாலும் மனக்கலக்க மடைவான். வெளிப்பிரகிருதி சம்பந்தமான காதலில்கூட இவ்வித மனோநிலை சில சமயங்களில் ஏற்படுகின்றது. ஒரு மனிதன் ஒரு பெண்ணிடத்திலோ, அல்லது ஒரு பெண் ஒரு மனிதனிடத்திலோ அதிதீவிரமான காதல் செலுத்திவிட்டால் அப்போது அவர்கள் வேறெவரைக் கண்டாலும் ஒரு விதமான துன்பத்தையே அடைகிறார்கள். இதை நாம் அடிக்கடி பார்த்து வருகிறோம். பராபக்தியினால் மனம் நிறைந்திருக்கும்போது பக்தி செலுத்தப்படாத மனிதர்களையும் விஷயங்களையும் காணும்போதெல்லாம் இதேமாதிரி அவசர புத்திதான் உண்டாகித் துன்பம் விளைக்கின்றது. கடவுளைத்தவிர வேறெதைப்பற்றியும் பேசினால்கூட அப்போது வெறுப்பு உண்டாகிறது. "அவன் ஒருவனையே நினைப்பாய்; அவனை மாத்திரமே நினைப்பாயாக! மற்ற வீண் வார்த்தைகளையெல்லாம் ஒழித்துவிடு." என்று முண்டக உபநிஷத் கூறுகிறது. கடவுளைப்பற்றி மாத்திரமே பேசுகிறவர்களிடம் பக்தன் நட்புக் கொள்கிறான். மற்றவைகளைப்பற்றிப் பேசுகிறவரிடம் பக்தனுக்கு வெறுப்பு உண்டாகிறது.

காதலித்த வஸ்துவிற்காக மாத்திரமே வாழ்க்கையை வைத்திருக்கும் நிலைமை இன்னும் உயர்ந்தது. அதைத்தான் ததார்த்த ப்ராண சம்ஸ்தாந மென்று பக்தியோகத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. "கடவுளிடம் அன்பைச் செலுத்தினால் மாத்திரமே வாழ்க்கை அழகு பொருந்தியது, சிறப்புடன் விளங்குவது" என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்த அன்பை நீக்கிவிட்டால் ஒரு நிமிஷமேனும் உயிர் இந்தத் தேகத்தில் தரித்திராது. அப்படிப்பட்ட உன்னத

மான அன்புநிலை அது. அன்பனை நினைக்கும் காரணத்தால் அப்போது வாழ்க்கை இனிமை பொருந்தியதாகிறது. (வேறு இனிப்பு வாழ்க்கையில் கிடையாது.)

பக்தியினால் பூரணத்தன்மை யடையும்போது ததீயத நிலை வருகிறது. கடவுள் கருணை வந்து எவன் அக் கடவுளைப் போய் அடைந்துவிட்டானோ அவனே அந் நிலைக்கு எழும்பமுடியும். அப்போது பக்தன் தன் கடவுளின் பாதங்களை ஸ்பரிசித்ததன் பயனாகத் தன் குண முழுமையும் மாறி மகா பரிசுத்தவானாகி விடுகிறான். வாழ்க்கையின் காரியமெல்லாம் அப்போது பூர்த்தியாகிவிட்டது. அதுமுதற்கொண்டு கடவுளைத் தொழுவதற்காக மாத்திரமே பக்தன் ஜீவித்திருக்கிறான். கடவுளைத் தொழுவது ஒன்றே அவனுக்கு இன்பம் தருவதாகும்; அதிலே அவன் ஆநந்த மடைகிறான்; அதை அவன் விடவேமாட்டான். அப்படிப்பட்டவர்களைப் பற்றித்தான் சாஸ்திரங்கள் பின் வருமாறு கூறுகின்றன:— "ஓ! அரசனே! ஹரியினது காருண்ய சொரூபத்தை எப்படி வர்ணிப்பது? எல்லாவற்றையும் அனுபவித்து முடித்துத் தம் ஹிருதய பந்தங்களை யெல்லாம் தெறிக்கச் செய்தவர்களும் கடவுளிடம் பக்தியை மாத்திரம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்." மேலும், "தேவர்களும் வணங்குகிற தேவாதிதேவன், முக்தியை இச்சிக்கின்றவர்கள் வணங்கும் மூர்த்தி, பிரம்மஞானிகளும் ஆராதிக்கும் பெருமை வாய்ந்தவன்" முதலிய வாக்கியங்களைப் பாருங்கள். ஒரு மனிதன் இவ்விதம் ததீய நிலைக்கு எழும்பிவிட்டால் அவனது பக்தியின் பலம் இவ்வாறு விளங்குகிறது. ஒருவன் தன்னையே மறந்து தனக்கு எதுவும் சொந்தமில்லையென்று நினைத்தானானால், அப்போதுதான் அவன் ததீய நிலையை அடைகிறான். சாமான்ய காதல் செலுத்தும் ஒருவன் தன் காதலிக்குச் சொந்தமான எதையும் சிறந்த மதிப்புள்ள பொருளாகவே பாராட்டுவான்; அதுபோலவே, பக்தனுக்கும் எல்லாப் பொருளும், அவன் அன்பிற்கு (பக்திக்குப்) பாத்திரமான கடவுளுக்கே அவை சொந்தமாகை

யால், பரிசுத்தமான தன்மையுடன் கூடியவைகளேயாம். ஆமாம்! இது உண்மைதான். கடவுளிடம் பக்தி செலுத்து கிறவர்களுக்கு ஜகத்திலுள்ள எல்லா விஷயங்களும் அருமை யானவைகளே; எல்லாம் கடவுளுக்கே சொந்தமல்லவா?

ஸ்ரீ ஸ்வாமி இராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம்.

(ஷை இரண்டாம் பாகம் இதில் அடங்கிய விஷயங்கள்.)

1. வெற்றிபெறும் இரஹஸ்யம், 2. இந்தியாவிற்குத் தற்காலம் வேண்டியவை, 3. ஆத்மதர்மம், 4. சாதாரண தர்ம சபையின் கொள்கைகள், 5. ஸ்வாமிகள் எழுதிய கடிதங்களின் சாரங்கள், 6. பரிபூர்ண அன்பும், குண சோதனையும், (1) தீரத்தன்மை, (2) பரிசுத்தகுணம் என்பதென்ன? (3) அழகு என்பது என்ன? (4) விதியென்பது, (5) தொழில், (6) சித்திரம், 7. அனுபவஞானம், சோம்பேறித்தனம் அல்லது தமோகுணம், 8. சயஞ்சோதி, 9. சமஷ்டி பாவனையும் ஆத்மானுபவமும், 10. ப்ரஹ்மமும் சிருஷ்டியும், 11. ஆத்ம விரிவு, 12. சகோதரத்துவமா? ஏகத்துவமா? 13. துக்க நிவர்த்தியும் சுயானுபோகமும், 14. கிருஹஸ்த தர்மம் பேரானந்தத்தைத் தருவதெப்படி? 15. தன் விதிக்குத் தானே கர்த்தா, 16. உன்னதமான ஊக்கம் என்னும் அமைதி, 17. அன்பெனப்படுவது யாது? 18. சத்சொரூபானுவம், 19. சத்பொருளும் பாவரூபமும், 20. வேதாந்தமும் சமூக உணர்ச்சியும், 21. அஞ்ஞானமே பாபமாகிறது, 22. ஆத்ம தர்மவிதி, 23. வேத தத்துவ பொக்கிஷம், 24. கிருஹதர்மம் கண்ணாடிபோன்றது, 25. சில சிறுகதைகள்:—(1) 99 என்ற மயக்கம், (2) இவனுக்கும் ஒரு கோடரி தீட்டவேண்டும் போலும், (3) வீண்காலம் என்பது யாது? (4) கடவுள் எங்கும் இருக்கிறார் என்பதற்குத் தக்க ருஜு, 26. கடவுள் நன்றியறிவுள்ளவர், 27. ஸ்திரீகளிடம் ஆசை, 28. பிராணாயாமம், 29. அழகிய சிறுகதைகள் முதலியன. (1) பைரன் என்ற கவி, (2) சங்கீதத்தில் ஆதி புருஷன் அல்லது நாதன், 30. அமெரிக்கர்களுக்கு ஒரு விண்ணப்பம், ஓர் வேண்டுகோள், (31) வெற்றி பெறுதற்கேற்ற சாதனங்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகள் யோக ஆசனப் படத்துடன் காலிகோ கட்டடம் விலை ரூபாய் 3-12-0, மாதர்நீதி ரூ. 1.

ஐந்தாவது அதிகாரம்

ஜகத்தினிடம் செலுத்தப்படும் அன்பும், தன்னல மறுப்பும்

சமஷ்டியாகிய ஜகத்தினிடம் அன்பு செலுத்தாமல் தனிப்பட்டதாகிய வியஷ்டியினிடம் எவ்வாறு அன்பு செலுத்த முடியும்? எல்லாவற்றிற்கும் பொதுவாய்க் காரணரூபமானதாய் ஜகத் முழுவதும் சேர்ந்ததாக விளங்குவதே சமஷ்டி சொரூபமாகிய கடவுள். நம்மால் பார்க்கப்படும் ஜகத் ஸ்தூலரூபமாகிய வியஷ்டியே. இந்த வியஷ்டித் தன்மையுடன் கூடிய ஜகத்தினிடம் ஒரே மாதிரி அன்பு செலுத்தவேண்டுமானால் பொதுவான தன்மையுடன்கூடிய சமஷ்டியினிடம் அன்பு செலுத்தித்தான் ஆகவேண்டும். அந்த ஏக வஸ்துவினிடம் கோடிக்கணக்காகப் பல சிறு வஸ்துக்கள் காணப்படுகின்றன. இந்தப் பலவித குணங்களுடன் கூடிய வஸ்துக்களில் இந்திய தத்துவ சாஸ்திரிகள் நிற்பதில்லை. இவ்வித வஸ்துக்களில் வேகமாகவே தமது பார்வையைச் செலுத்திப் பிறகு திடீரென்று மேலெ மூழ்பி இவற்றையெல்லாம் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் பொதுவான சொரூபத்தினிடம் மனதைச் செலுத்தி அவ்வித வஸ்துவைக் கண்டுவிடுகிறார்கள். இவ்வாறு பொதுவான தர்மத்தைக் காண்பதே இந்திய தத்துவ சாஸ்திரங்களுக்கும் மதங்களுக்கும் வேலையாக இருக்கிறது. ஒரே அகண்ட சொரூபமாகிய பொது வஸ்துவினிடம் எல்லாவற்றினுடைய ஏகத்வத்தைக் காண்பதற்காக ஞானி பாடுபடுகிறான். அதை அறிந்ததும் எல்லா மறிந்தவனாகிறான். இந்தப்பொதுவான ஒரேவித குணத்தையுடைய பரமபுருஷனைக் காண்பதற்கே பக்தனும் விரும்புகிறான்.

ரு-வது அதி.— ஜகத்தினிடம் செலுத்த கூகப்படும் அன்பும், தன்னல மறுப்பும்

ஆத்மானுபவத்தால் அந்தப் புருஷனையே அடைய பக்தன் விரும்புகிறான். அந்தப் புருஷனிடம் அன்பு செலுத்தி விட்டால் ஜகத் முழுமையிலும் அன்பு செலுத்தியதாக ஆகிறது. சர்வ சக்திகளையும் அடக்கிக்கொண்டிருக்கும் அந்தப் பொதுவான சக்தியை அடக்கி யாளவேண்டு மென்று யோகி விரும்புகிறான். அந்தப் பொதுவான சக்தி வசமானால் ஜகத் முழுமையும் வசமாகிறது. எவ்வழியில் பார்த்தாலும் இந்தியாது மனம் ஒவ்வொன்றிலு மிருக்கும் சமஷ்டித் தன்மையைத் தேடியே செல்கிறது. பூத பௌதிக கலைகளிலும், மனோதத்துவத்திலும், பக்தியிலும், தத்துவத்திலும் இவ்விதம் பொதுத்தன்மையை நாடியே மனம் செல்கின்றது.

பக்தனுடைய நிலைமையைக் கவனிப்போம். நாம் ஒவ்வொருவரிடமும் அன்பு செலுத்திக்கொண்டு போவோம் என்று மெதுவாகச் சென்றுகொண்டிருந்தால் எவ்வளவு காலம் கடந்தாலும் ஜகத் முழுவதிலும் அன்பு செலுத்தத் தக்க நிலை யேற்படாது. இதையே பக்தன் அறிகிறான். ஆதலால், 'எல்லாவித அன்பும் ஒன்றுகூடுவதே கடவுள்' என்று அவன் அறிகிறான். இந்த முக்கிய கொள்கையை அறியவே ஒரு மனிதன் முயற்சி செய்யவேண்டும். ஜகத்திலுள்ள ஜீவர்கள் — முக்தர்களும் பந்தநிலையிலுள்ளவர்களும் முக்திக்காகப் போராடுகிறவர்களும் ஆகிய எல்லா ஜனங்களும்— கொண்டுள்ள லட்சியங்களை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் அவற்றின் சமஷ்டியே கடவுள். இந்தப் பாவனையை யடைந்த பிறகுதான் ஒருவன் ஜகத்முழுவதிலும் பரவக்கூடிய அன்பை அனுபவிக்க முடியும். ஆகவே, கடவுள் சமஷ்டி சொரூபியென்றும், அக் கடவுளின் குணங்களே பார்க்கப்படும் ஜகத்தாக ஆவிர்ப்பவித்திருக்கின்றன என்றும் பக்தன் அறிகிறான். இவ்வித சமஷ்டியினிடம் அன்புசெலுத்த முடியுமானால் அப்போது நாம் ஒவ்வொன்றினிடமும் அன்பு செலுத்த முடியும். அப்போது உலகத்

தில் அன்பு செலுத்தி நற்காரியங்களைச் செய்து முடிப்பது இலகுவான காரியமாக இருக்கும். அதற்கு முதலில் கடவுளிடம் பக்தி செலுத்தி அதிகாரம் பெற்றாகவேண்டும். அந்த அதிகாரம் பெறாமல் உலகினிடம் அன்பு செலுத்தவும் முடியாது; எவ்வித நன்மையும் செய்ய முடியாது. "எவ்வித வஸ்துவும் அவனுடையதே; அவனே என் அன்பன்; அவனிடமே என் அன்பும் செல்கிறது." என்று பக்தன் சொல்கிறான். காலக்கிரமத்தில் எல்லாம் அவனுக்குப் புண்ணிய வஸ்துக்களாக ஆகின்றன. ஏனெனில், 'எல்லா வஸ்துக்களும் மனிதர்களும் கடவுளின் ஆவிர்ப்பவங்களே' என்று அறிய அவன் முயற்சி செய்துகொண்டிருக்கிறான். அப்படியிருக்க அவன் எவ்வாறு பிறருக்குத் துன்பம் செய்வான்? பிறரிடம் அவன் ஏன் வெறுப்புக் கொள்வான்? கடவுளிடம் செலுத்திய அன்பின் முதிர்ச்சியாகிய பக்தியால் அவனுக்கு ஜகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவினிடத்தும் அன்பு ஏற்பட்டுவிடுகிறது. கடவுளின் சமீபம் நெருங்கும்போது 'எல்லாவஸ்துக்களும் அவரிடமே தோன்றி விளங்குகின்றன' என்று பக்தன் அறிகிறான். இவ்வித பராபக்தி என்ற ஆநந்தத்தைத் தனக்குச் சொந்தமாக்கியபின் பக்தன், 'கடவுள் எங்கும் எல்லா வஸ்துக்களிலும் இருக்கிறார்' என்பதை யறிகிறான். அப்போது அவன் ஹிருதயத்திலிருந்து வற்றாமல் அன்பு ஊறிக்கொண்டே யிருக்கும். ஆதலால், நாம் அன்பின் உன்னத நிலைக்குச் செல்லச் செல்ல உலக வஸ்துக்களிடம் தோன்றுகிற பேதங்களெல்லாம் அடியுடன் மறைந்துகொண்டே வரும். மனிதனை மனிதனாகக் காண்பது அப்போது இல்லை. 'எல்லோரும் கடவுள் சொரூபமே' என்று சொல்லப்படுவார்கள். மிருகங்களும் மிருகங்களாகத் தென்படமாட்டா; புலிகூடப் புலியாகத் தென்படாது. எல்லாம் கடவுளின் ஆவிர்ப்பவங்களாகவே தோன்றும். ஆதலால், இவ்வித தீவிர பக்தியுள்ளவனிடம் உள்ளேயிருந்து வழிபாடு தானே பொங்கி ஒவ்வொரு பிராணியினிடமும் செல்லுகின்றது. "ஹரி எல்லாவற்றுள்ளும் இருக்கிறார்' என்று அறிந்து ஞானிகள்

எல்லாப் பிராணிகளிடமும் சலிக்காத அன்பு செலுத்து கிறார்கள்.” என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இவ்வாறு எல்லாவற்றையும் அணைத்துக்கொள்ளும் தீவிர அன்பின் பயன் என்ன? ‘உலகில் நடைபெறும் எதுவும் நமக்கு விரோதப்பான்மை கொண்டதல்ல’ என்னும் திட நம்பிக்கையாகிய அப்ராதிகூல்யம் ஏற்படுகிறது. இது தான் பரிபூர்ண தன்னல தியாகம் எனப்படுவது. அப்போதுமாத்திரமே துன்பம் வரும்போது அன்பு நிறைந்த ஜீவன் துன்பத்தை எதிர்கொண் டழைக்க முடியும்; துக்கம் வரும்போது “நீயும் என் அன்பனால் அனுப்பப்பட்ட விஷயமேயாதலால், ஏ, துக்கமே! வா!” என்றழைக்க முடியும். ஒரு சர்ப்பம் வந்தாலும் அதையும் எதிர்கொண்டு பக்தன் அழைப்பான். இவ்வாறே மரணத்தையும் வரவேற்பான். எல்லாவற்றையும் புன்சிரிப்புடன் வரவேற்று, “எல்லாம் என்னிடம் வருகின்றன. நானே புண்ணியசாலி.” என்று சொல்வான். கடவுளிடத்திலும் கடவுளுக்குச் சொந்தமான வஸ்துக்களிடத்திலும் அதிதீவிரமான அன்பைச் செலுத்திவரும் பக்தனுக்கு தன்னைப்பற்றிய வரையில் நேரக்கூடிய சுகத்திற்கும் துன்பத்திற்கும் பேதம் தெரியாது. துன்பம் வந்துவிட்டது என்றும், துக்கம் வந்து விட்டது என்றும் குறை கூறுவதென்றால் என்னவென்றே அவன் அறியமாட்டான். இவ்வாறு கடவுளின் இச்சைப் படியே விட்டுவிட்டு யாதொரு குறையும் கூறாமல் இருக்கக் கூடிய தன்னல மறுப்பின் பூரணத்தன்மையை அடைவது எவ்வளவோ மேலானதல்லவா? உலகில் தீர புருஷர்கள் என்று பெயர் பெற்று விளங்கும் எல்லோருடைய புகழையும் சேர்த்து அடைவதைக் காட்டிலும் இவ்வித தன்னல மறுப்பு எவ்வளவோ மேம்பட்ட நிலையாகும்.

ஏராளமான ஜனங்களுக்குச் சரீரமே சகலமும். ஜகத் முழுமையும் சரீரமே என்று அவர்கள் நினைத்துவிடுகிறார்கள். ஆதலால், சரீர சுகாநுபவங்களை அடைவதே அவர்

களுக்கு வாழ்க்கை முழுவதுமாகும். சரீரத்தையும் இந்திரியங்களுக்குச் சுகங்களைத் தரக்கூடிய விஷயங்களையும் வணங்குமாறு பலவந்தம் செய்கிற பூதம் நம்மிடமெல்லாம் குடிகொண்டுவிட்டது. வீண் தர்க்கங்களை யெல்லாம் செய்துகொண்டு பகுத்தறிவு என்ற பிரதேசங்களில் அதியுன்னதமான உயரத்திற்கு நாம் ஏறினாலும் கழுகுகளைப் போலவே நாம் ஜீவித்துக் கீழேயுள்ள பிணங்களிடமே நமது மனதைச் செலுத்திவிடுகிறோம். நமது சரீரத்தை நாம் ஏன் ஒரு புலிக்குக் கொடுத்து அதன் பசியை ஆற்றலாகாது? இந்தச் சரீரத்தை எதற்காக நாம் காப்பாற்ற வேண்டும். இதனால் ஒரு புலி திருப்தியடையுமே! தன்னலத்தியாகமாகிய ஆராதனைக்கு இது வெகு தூரத்தேயுள்ள நிலையோ? தான் என்ற அகம் சிறிதுமின்றி முற்றிலும் நீங்கக்கூடிய லட்சியத்தை நாம் ஏன் அனுபவிக்கலாகாது? அன்பென்ற மதத்தில் இது ஒரு உன்னதமான உயரம். இவ்வளவு உயரத்தில் எழும்பும்போது மயக்கம் வரக்கூடும். ஆதலால்தான் உலகில் மிகச் சிலரே அவ்வளவு உயரம் எழும்பியுள்ளார்கள். ஆனால், அவ்வளவு உயரக் கிளம்பினாலன்றி, எப்போதும் மனமார்ந்த தன்னல தியாகம் செய்யத் தயாராகவே இருந்தாலன்றி எந்த மனிதனும் பூரண பக்தனாக முடியாது. நமது சரீரங்களை நம்மால் முடிந்த வரையில் காப்பாற்றப் பிரயத்தனம் செய்தாலும் அவைகள் நீங்கிப்போகும் காலம் வந்தே தீரும். சரீரங்கள் நித்தியமான வஸ்துக்கள் சேர்ந்தவைகளல்ல. அப்படியிருக்க நாசமடையக்கூடிய இச் சரீரங்கள் பிறர்பொருட்டுச் செய்யும் ஊழியங்களில் அழிவது மேன்மையாகாதோ? இவ்வித ஊழியங்களில் சரீரங்களைச் செலவிடுகிறவர்களே புண்ணிய புருஷர்கள். "தனத்தை மாத்திரமல்ல, உயிரையே பிறர் பொருட்டு விட்டுவிட ஞானி தயாராயிருக்கிறான். உலகில் மரணமென்பது நிச்சயமாக இருப்பதால் நல்ல காரியத்தில் மரணமடைவது நல்லது." ஐம்பது வருஷ காலமோ அல்லது நூறு வருஷங்களோ நாம் ஜீவித்திருக்கலாமென்று வைத்துக்கொள்ளுங்கள்; முடிவில் கிடைப்பதென்ன?

மரணமேயாம். பல வஸ்துக்களின் சேர்க்கையால் ஆக்கப்பட்ட ஒரு வஸ்து எப்போதேனும் பிரிந்து நாசத்தையடையவேண்டியதுதான். ஆதலால், சரீரமும் பிரிந்துபோகும் காலம் வந்துவிடும். ஏசுகிறிஸ்து, முகம்மது நபி, புத்தபகவான் முதலிய பல தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் ஆகிய இவர்களுடைய சரீரங்களும் இதே கதியைத்தானடைந்துவிட்டன. ஆதலால், 'தோன்றி மறையும் இவ்வுலகத்தில், ஒவ்வொன்றும் வீழ்ந்து அழிந்துவரும் இவ்வுலகத்தில், நமக்குக் கிடைக்கும் காலத்தைச் சிறந்த காரியங்களிலேயே செலவிடவேண்டும்' என்றும், 'வாழ்க்கையைச் சகல பிராணிகளுக்காகவும் செலவு செய்வதைவிடச் சிறந்தகாரிய மெதுவுமில்லை' என்றும் பக்தன் அறிகிறான். இந்தக் கொடிய சரீர ஆத்ம புத்தியே உலகில் தன்னலத்தை விர்த்திசெய்து வளர்க்கின்றது. 'நாம் சரீரத்தைத் தவிர வேறல்ல' என்றும், 'அதைக் காப்பாற்றிச்சந்தோஷமடையச் செய்யவேண்டும்' என்றும் நினைத்து மயங்கிவிடுகிறோம். 'நாம் சரீரமல்ல, ஆத்மாதான்' என்ற நிச்சய புத்தி நமக்கு ஏற்பட்டால் எவருடனும் நாம் சண்டைக்குப்போகக் காரணம் ஏற்படாது. தன்னலமிக்க எண்ணங்கள் அப்போது நம்மிடம் தோன்றமாட்டா. "உலக விஷயங்களைப் பற்றியவரையில் நாம் இறந்துவிட்டதாகவே நினைக்கவேண்டும்" என்று பக்தன் சொல்கிறான். அதுதான் தன்னல தியாகம். எல்லாம் கடவுள் செயல்—"உன் இச்சை நிறைவேறட்டும்"—என்று பிரார்த்திப்பதன் கருத்தும் அதுவே. நமது பலவீனங்களும் ஆசைகளும் காரணமாக நாம் செய்யும் காரியங்களுக்கும் "கடவுள் இச்சை" என்று கூறிச் சண்டையிடுவது அல்ல. தன்னலமிக்க போராட்டங்களின் மூலமாகவும் நன்மை யுண்டாவதுண்டு. இதற்குக் காரணம் நமது சக்தியல்ல; கடவுளின் கருணையே இதற்குக் காரணம். ஆதலால், ஒருபோதும் தன்னிமித்தம் இச்சித்து ஒரு காரியமும் செய்யாமலிருப்பது பூர்ண பக்தியுடையவனது நிலைமையாகும். "கடவுளே ! உனக்காக, உன் பெயரைச்

சொல்லி உயர்ந்த கோவில்களைக் கட்டுகிறார்கள்; ஏராளமான தர்மங்களைச் செய்கிறார்கள். நானோ ஏழை; என்னிடம் ஒன்றுமில்லை. ஆதலால், இதோ என் சரீரத்தையே என்னைவிட்டு (வேறுபடுத்தி) அதை உனது பாதகமலங்களில் சேர்த்துவிடுகிறேன். என்னைக் கைவிடாமலிருப்பாயாக.” இவ்வித பிரார்த்தனை பக்தனுடைய ஹிருதயத்தினின்று வெளியேறுகின்றது. தன் ஆத்மாவையே இவ்வாறு தன் அன்பனுக்காக அர்ப்பணம் செய்வதாகிய நித்திய எக்ஞத்தைவிட உயர்ந்த காரிய மெதுவுமில்லை. தனமும் அதிகாரமும் கல்வியும் சேர்ந்து இவ்வளவு சிறந்த தன் மறுப்பைக் கொடுக்கமாட்டா. பக்தனது அமைதியான இந்தத் துறவின் மூலமாக அடையப்படும் சாந்தம் ‘அறிவிற் கப்பாற்பட்ட சாந்த’ நிலையாகும். இதற்கிணை எதுவுமில்லை. இதன் மூலமாக அடையப்படுவது, உலக விஷயங்களில் யாதொரு கருத்தும் செல்லாத நிலையாகிய அப்ராதிகுப்யம் என்பது. இவ்வித ஆழ்ந்த துறவு நிலையில் எல்லாப் பற்றுகளும் நீங்கிவிடுகின்றன. மீதியிருப்பது ‘எவரிடம் எல்லா வஸ்துக்களும் வசித்துச் சலிக்கின்றனவோ’ அவ்வித கடவுளிடம் மனப்பூர்த்தியான அன்பு தான். கடவுளிடம் ஏற்படும் இந்தப் பற்று ஆத்மாவைப் பந்தப்படுத்தாமல் எல்லாப் பந்தங்களையும் தெறிக்கச் செய்கின்றது.

கந்தர் கலிவெண்பா மூலமும், உரையும்	அணா 6
திருப்பாதிரிப்புலியூர் சண்முகஞானியார் அருளிச்செய்த விநாயகர் மாலை, சுப்பிரமணியர் பரம்பர பதிகம், முருகர் அந்தாதி ஆகிய இம்மூன்றும் ஒரே கட்டடம் ...	அணா 3
திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் அருளிச்செய்த ஸ்ரீ மீனாக்ஷியம்மை கலிவெண்பா (புதிய பதிப்பு)	அணா 6
மநுநீதி சதகம் புதிய பதிப்பு ...	அணா 6

12 4 5 | 2
2243
T S 2 4043
1386

ஆறாவது அதிகாரம்

அன்பும் ஞானமும் ஒன்றே

உன்னதமான பரஞானம், கீழ்ப்பட்டதான அபர ஞானம் என்ற இருவகை ஞானங்களை உபநிஷத்துக்கள் போதிக்கின்றன. உபநிஷத்தில் கூறப்பட்ட பரஞானத்திற்கும், பக்தனது பராபக்திக்கும் உண்மையில் எவ்வித பேதமும் கிடையாது. முண்டகோபநிஷத் பின்வருமாறு கூறுகிறது :—“ மேலானது (பரம்), தாழ்ந்தது (அபரம்) என்று இருவகை அறிவுகள் அறியத்தகுந்தவை என்று பிரம்ம ஞானிகள் தெரிவிக்கிறார்கள். தாழ்ந்த அறிவானது ரிக் வேதம் - யஜுர்வேதம் - சாமவேதம் - அதர்வவேதம் முதலிய வேதங்களையும், ஸ்வரத்தோடு உச்சரிக்கவேண்டிய முறைகளைப் போதிக்கும் சிக்ஷையையும், யக்ஞ சம்பந்தமான விதிகளைப் போதிக்கும் கல்பத்தையும், பதங்களின் பொருள்கள் தாதுக்கள் முதலியவற்றைப் போதிக்கும் நிருக்தத்தையும், இலக்கணம்- சந்தஸ் - ஜோதிஷம் முதலியவைகளையும் அறிவது. மாறுத்தன்மையுடன் கூடிய அகண்ட பிரம்மத்தை யறிவது எதுவோ அதுவே மேலான பர ஞானம்.” இவ்வாறு பிரம்மஞானமே மேலான அறிவு என்று தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இனி தேவி பாகவதத்தில் பராபக்தியைப்பற்றிக் கூறியிருப்பதைக் கவனிப்போம்:—“ ஒரு பாத்திரத்தினின்று மற்றொரு பாத்திரத்திற்குள் எண்ணெயை ஊற்றும்போது இடைவெளி தோன்றாமல் ஒரே தாரையாக விழுவதுபோல் கடவுளிடம் மனது இடைவிடாத சிந்தனையைச் செலுத்தினால் அப்போது பராபக்தி இருக்கிறதென்று சொல்லப்படும்.” யாதொரு கலக்கமுமின்றித் திடமாக ஒருவனது மனமும் ஹிருதயமும் கடவுளிடம் செலுத்தப்படுவதாகிய நிலை,

மிருந்த பற்றினுல் ஏற்படுகிறது; இதுவே கடவுளிடம் மனிதன் செலுத்துகிற அன்பின் உன்னதமான ஆவிர்ப்பவமாகும். பக்தியின் இதர நிலைகளெல்லாம் உன்னத நிலையில் உள்ள பராபக்திக்கு அழைத்துச் செல்லும் சாதனங்களேயாம். இந்தப் பராபக்திக்கு ராகாநுகா என்ற பெயரும் வழங்கப்படுகிறது; அதாவது, பற்றின் பிறகு ஏற்படும் அன்பு. இவ்வித பராபக்தி மனித ஹிருதயத்திற்குள் வந்து சேர்ந்தவுடன் அப்படிப்பட்ட மனிதன் இடைவிடாமல் கடவுளையே சிந்திப்பான்; வேறெவ்வித சிந்தையும் அவனுக்கு ஏற்படுவதில்லை. கடவுளைத்தவிர வேறெவ்வித சிந்தனைக்கும் அவன் தன் மனத்தில் இடம் கொடுப்பதில்லை. அவனது ஆத்மாவும் பரிபூர்ண பரிசுத்தத்தன்மை யடைந்து, ஜடசம்பந்தமான பந்தங்களையும் மனது சம்பந்தமான பந்தங்களையும் தெறித்துக்கொண்டு, சாந்த நிலையையும் முக்தியையும் அடைகிறது. அவ்வித மனிதன் மாத்திரமே தன் ஹிருதயத்தில் கடவுளை வணங்க முடியும். அவனுக்கு ரூபங்களும், சொரூப லட்சணங்களும், புத்தகங்களும், மதக் கொள்கைகளும் ஆகிய எதுவும் அவசியமில்லையாகின்றன; அவனுக்கு எவ்விதத்திலும் உபயோகமில்லாமற் போகின்றன. ஆனல், இவ்வித அன்பை (பக்தியை)க் கடவுளிடம் செலுத்துவது ஏதோ இலகுவான காரியமென்று நினைத்துவிட முடியாது.

அன்பு எங்குத் திரும்பவும் அடையப்படுகிறதோ அவ்விடத்திலேயே சாதாரணமாக மானிட அன்பு செல்லுகின்றது. அன்பு செலுத்திய இடத்திலிருந்து பிரதியாக அன்பு திரும்பவில்லையானுல் பிறகு கொடிய அலட்சியமே ஏற்படுகிறது. ஆனுலும் ஏதோ அருமையாகச் சில இடங்களில் அன்பு திரும்பாமலிருக்கும்போதுகூட அன்பு செலுத்தப்படுவதையும் நாம் காண்கிறோம். இதற்கு உபமானம் சொல்லவேண்டியதற்காக விட்டில்கள் விளக்கினிடம் வைக்கும் அன்பை எடுத்துக்கொள்வோம். இதுவும் பிரதிபலிக்காத இடத்தில் செலுத்தப்படும் அன்பும் ஒத்திருக்கின்

றது என்று சொல்லலாம். பூச்சிகள் விளக்கினிடம் அன்பு செலுத்துவதே சுபாவமாகையால் அவ்விதம் செலுத்தி விளக்கில் விழுந்து மரண மடைகின்றது. அன்பைச் செலுத்துவதே சுபாவமென்பதைத் தவிர வேறு காரணமில்லையென்ற நிலையே உலகில் காணக்கூடிய அன்பின் அதிபுன்னதமான நிலை என்பதிற் சந்தேகமே யில்லை. இதே மாதிரி (பிரதிபலனைப்பற்றிய சிந்தை யில்லாமல்) ஆத்மதர்ம விஷயத்தில் அன்பு சென்றுவருமானால் அதுவே ஒருவனைப் பராபக்தியினிடம் சேர்ப்பிக்கும்.

ஸ்ரீ தேவராய சுவாமிகள் அருளிய

கந்தர் சஷ்டி கவசம் மூலமும்,

மெய்ப்பொருள் விளக்க விருத்தி உரையும்.

இந்நூலைப் பல்லாயிரம் அன்பர்கள் பக்தியோடு பாடிப் பாராட்டித் துதித்துப் போற்றிக் குமரக் கடவுளின் அருளால் பேய், பில்லி, சூனியம், பிணி, பகை முதலியவற்றால் உண்டாகிய பல துயரையும் அகற்றி வென்று, நிலைபெற்ற சுக வாழ்வை யடைந்திருக்கின்றனர். இந்நூல் மந்திர ரூபமாக உடையது; மந்திராட்சரங்களும் மந்திரங்களும் பொதிந்து விளங்குவதாகும். இந்நூற்கு உரை எழுதுதல் கூடாதென ஒரு சாரார் கூறுவர். இது ஒரு வகையில் உண்மையேயாமாயினும், இதனைப் படிப்போர்க்கு இதன் பொருள் ஒருவாறு பிண்டமாக உணர்ந்தாலன்றி மநநம் செய்தல் அருமையாதலின் இந்நூலின் பொருளை ஒருவாறு தொகுத்து வகுத்து உரை எழுதப்பட்டது. இந்நூலின் சிற்சில இடங்களில் பற்பல அழகான கருத்துக்களும் வேதசார உண்மையும் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

ஸ்ரீ சுப்பிரமணியர் படத்துடன் விலை அணா 8.
உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது ,, 12.

ஏழாவது அதிகாரம்

பக்தியின் மூன்று அம்சங்களும் கடவுளும்

அன்பினின்று பிரிக்க முடியாத மூன்று குணங்களை யும் முக்கோணங்களாகப்பாவித்து 'அன்பு முக்கோணவடிவு கொண்டது' என்று நினைப்போம். மூன்று கோணங்களின்றி ஒரு முக்கோண உருவம் ஏற்படாது; அதுபோல, பின் வரும் மூன்று குணங்களுமில்லாமல் உண்மையான அன்பு ஏற்படமாட்டாது. அன்பு வர்த்தக முறையை அறியாது. இதுவே அன்பென்ற முக்கோணத்தின் முதற்கோணம் அல்லது அம்சம். அன்பு செலுத்தியதற்குப் பிரதியாக எதையேனும் தேடும் குண முண்டானால், அப்போது உண் மையான அன்பு இருக்க முடியாது. அது வெறும் வர்த் தக மாத்திரமேயாகும். ஆதலால், கடவுளிடம் நாம் செலுத் தும் மரியாதைக்கும் அன்பிற்கும் பதிலாக அவரிடம் ஏதே னும் ஒரு கருணையை எதிர் பார்க்கும் வரையில் நமது ஹிரு தயத்தில் உண்மையான கடவுள் பக்தி யிருக்க முடியாது. தங்களிடம் கடவுள் ஏதேனும் தயவு வைக்கவேண்டு மென்று எதிர்பார்த்துக் கடவுள் பக்தி செய்கிறவர்கள் அவ் வித தயவு அல்லது கிருபை கிடைக்காவிட்டால் பக்தியைச் செலுத்தமாட்டார்கள் என்பது நிச்சயம். கடவுளிடம் அன்பு பாராட்டத்தக்க குணங்கள் அமைந்திருக்கின்றன என்று கண்டு பக்தன் அன்பு செலுத்துகிறான். மெய்யன்பு செலுத்தும் பக்தர்களிடம் இவ்வித தெய்வீக உணர்ச்சிகளை எழுப்பி வளர்ப்பதற்கு வேறெவ்வித எண்ணமும் தேவை யில்லை.

எ-வது அதி.—பக்தியின் மூன்று அம்சங்களும் கடவுளும்

ஒரு காலத்தில் ஒரு பெரிய அரசன் காட்டிற்குச் சென்று அங்கு ஒரு முனிவரைச் சந்தித்த கதையைப்பற்றிக் கேட்டிருக்கிறோம். சிறிது நேரம் அரசன் அம் முனிவரிடம் பேசிக்கொண்டிருந்த பிறகு அவரது பரிசுத்த குணமும் ஞானமும் இவ்வளவு அதிகமாக இருக்கிறதென்றறிந்து சந்தோஷமடைந்தான். ஆதலால், அம் முனிவர் ஏதேனும் வெகுமதிகளைத் தன்னிடம் அடைந்து தன்னைக் கௌரவப்படுத்தவேண்டுமென்று அரசனுக்கு விருப்பமுண்டாயிற்று. முனிவரோ அதற்கு உடன்படவில்லை. "இக் காட்டிலுள்ள கனிகள் எனக்குப் போதுமான உணவாகின்றன. குன்றுகளிலிருந்து ஓடி வருகிற தெளிவான தண்ணீரோ எனக்கு நேர்த்தியான பானமாகிறது. மரங்களின் பட்டைகள் என் சரீரத்தைப் போர்த்து ரட்சிக்கின்றன. மலைகளிலுள்ள குகைகள் எனக்குப் போதுமான வீடு ஆகின்றன. ஆதலால், உன்னிடமிருந்தும் பிறரிடமிருந்தும் நான் ஏன் வெகுமதியடையவேண்டும்?" என்று தெரிவித்தார். அரசன் அவரை விடாமல் "எனக்குப் பயன் விளைத்து என்னை ரட்சிப்பதற்காக, ஐயனே! தயவு செய்து என் அரண்மனைக்கு வந்து என் கைகளிலிருந்து ஏதேனும் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான். இவ்வாறு பலமாகத் தூண்டிய பிறகு அரசன் விருப்பப்படி செய்ய முனிவர் ஒப்புக்கொண்டு அவனுடன் அரண்மனைக்குச் சென்றார். அங்கு முனிவருக்கு வெகுமதி யளிப்பதற்கு முன் அரசன் தான் தெய்வத்தைப் பிரார்த்திக்கும் வழக்கப்படி ஆரம்பித்து, "கடவுளே! எனக்கு இன்னும் குழந்தைகளும் அதிக தனமும் ராஜ்யங்களும் கொடும். என் தேகம் இன்னும் அதிக ஆரோக்கியமுள்ளதாக ஆகட்டும்." முதலிய பலவித வேண்டுகோள்களைச் சொல்லிப் பிரார்த்தித்தான். அரசன் இவ்வித பிரார்த்தனைகளை முடிப்பதற்குமுன் முனிவர் எழுந்து அந்த அறைக்கு வெளியே வந்துவிட்டார். இதைக் கண்ட அரசன் அதிசயித்து, ஒன்றும் விளங்காதவனாய், அம் முனிவரைத்

தொடர்ந்து சென்றான். பின்னால் தொடர்ந்து செல்லும் போதே அரசன், "ஐயா! நீர் என்னிடம் வெகுமதி பெற்றுக்கொள்ளாமலே போகின்றீர்களே!" என்று கூவிக் கொண்டு சென்றான். உடனே முனிவர் திரும்பி, "அரசே! யாசிப்பவர்களிடம் நான் யாசிக்கும் வழக்கம் இல்லை. நீயே ஒரு யாசகனாயிருக்கிறாய். அப்படியிருக்க நீ எவ்வாறு எனக்கு எதையாவது கொடுக்க முடியும்? பிச்சைக்காரனிடம் வந்து வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ள நான் ஒரு மூடனல்ல. ஆதலால், என்னைத் தொடர்ந்து வரவேண்டாம். நீ போகலாம்." என்றார். இக் கதையில் மதசம்பந்தமான விஷயங்களில் யாசகர்களுக்கும் மெய்யன்புடன் பக்தி செலுத்துகிறவர்களுக்கும் வித்தியாசம் விளங்குகிறது. எவ்விதமான வெகுமதியை உத்தேசித்தும்—முக்திக்காக என்றுகூட—கடவுளை வணங்குவது பக்தி என்ற உயர்ந்த கொள்கையைக் குறைவு படுத்தியதுபோலாகின்றது. ஏனெனில், யாதொரு பிரதிபலனையும் இச்சிக்காமல் எப்போதும் இயற்கையாகவே விளங்கிக்கொண்டிருப்பதுதான் அன்பு அல்லது பக்தியெனப்படுவது. பக்தனால் அன்பு செலுத்தாமலிருக்க முடியாது; அதனால் அன்பனாகிறான். ஒரு அழகிய காட்சியை நீங்கள் பார்க்கும்போது அதனிடம் அன்பு செலுத்திவிடுகிறீர்கள். (பார்க்க அழகென்று காட்சியை அனுபவிக்கிறீர்கள்.) அப்போது ஏதேனும் பிரதியாக அதனிடமிருந்து நீங்கள் எதிர்பார்ப்பதில்லை. அந்தக் காட்சியும் உங்களிடம் எதையும் விரும்புகிறதில்லை. ஆனால், அக் காட்சியானது உங்கள் ஆத்மாவிடம் இருக்கக்கூடிய கரடு முரடுகளைப் போக்கி மனதினிடம் ஒரு ஆநந்தத்தை உண்டாக்கிவிடுகிறது. உங்களுக்கு அமைதியைக் கொடுத்து, உங்களை மேலெழுப்பி ஏதோ இந்த அநித்திய வாழ்க்கையிலிருந்து மேலே உள்ள ஒருவித நிலைக்கு உங்களைக் கொண்டுபோயிருக்கிறதுபோல் காட்டிவிடுகின்றது; ஏனெனில், உங்கள் மனம் திவ்ய சொரூபாநந்தத்தை யடைந்து ஒப்பற்ற அமைதி அல்லது சாந்த நிலையை அடைந்துவிட்டது. உண்மையான அன்பின் தன்மை இப்படிப்பட்ட

தாகும். இந்தக் குணமே நாம் சொல்லிய முக்கோணத்தின் முதற்கோணம். ஆதலால், நீங்கள் அன்பு செலுத்துவதற்குப் பிரதியாக எதையும் கேட்டுவிடாதீர்கள். எப்போதும் நீங்கள் கொடுக்கின்றவராகவே இருந்துவிடுங்கள். உங்கள் அன்பாகிய பக்தியைக் கடவுளிடம் செலுத்தி அதற்குப் பிரதியாக அவரிடமிருந்து எதையும் கேட்காதீர்கள்.

அன்பென்பது பயத்தையே அறியாது. இதுவே அன்பென்ற முக்கோணத்தின் இரண்டாவது கோணம். பயத்தால் கடவுளிடம் அன்பு (பக்தி) செலுத்துகிறவர்கள் மனிதர்களுக்குள் கடைப்பட்டவர்களே; இன்னும் இவர்கள் மனிதராகவும் ஆகவில்லை. கடவுள் தண்டிப்பாரென்ற பயத்தால் மாத்திரம் அவர்கள் கடவுளைத் தொழுகிறார்கள். ஒரு கையில் சவுக்கும் மற்றொரு கையில் செங்கோலும் ஏந்திய ஒரு பெரிய புருஷராகவே கடவுள் அவர்களுக்குத் தோன்றுகிறார். கடவுள் கட்டளைக்குக் கீழ்ப்படியாவிட்டால் சவுக்கடி விழுமென்ற பயம் அவர்களை வாட்டுகிறது. அவ்வாறு தண்டனைக்குப் பயந்து கடவுளைத் தொழுவது இழிவான காரியம். இவ்விதம் செய்வதைப் பார்த்துக் கடவுள் வழிபாடு என்ற பெயரையும் அதற்குக் கொடுக்க வேண்டுமானால் மிகத் தாழ்ந்த வழிபாடு என்று அதைச் சொல்லவேண்டும். மனதில் பயமுள்ள வரையில் அன்பென்பது எப்படி யிருக்கமுடியும்? அன்பு என்பது பயத்தையெல்லாம் ஒழித்துவிடத்தக்கதாயிற்றே. குழந்தையைப் பெற்ற ஒரு யுவதி தெருவில் இருக்கிறாள். அவளைப் பார்த்து ஒரு நாய் குரைத்தாலும் அவள் பயந்து அடுத்த வீட்டிற்குள் போய் ஒளிந்துகொள்கிறாள். இவ்வித பயம் கொண்ட யுவதி தன் குழந்தையுடன் தெருவில் நிற்பதாகவும், அப்போது ஒரு சிங்கம் வந்து குழந்தையின்மீது பாய்வதாகவும் வைத்துக்கொள்ளுங்கள். அப்போது தாயார் எங்குச் செல்வாள்? குழந்தையைக் காப்பாற்றவேண்டிச் சிங்கத்தின் வாய்க்குள்கூட இருப்பாள் என்று சொல்வதில்

சந்தேகமே வேண்டாம். அன்பென்பது பயத்தை யெல்லாம் ஓட்டிவிடுகிறது. ஜகத்திலிருந்து தான் வேறு என்று பிரிந்து நிற்கும் காரணத்தால்—தன்னலமிக்க எண்ணத்தால்—பயம் என்பது ஜனிக்கிறது. என் மனதைக் குறுகியதாகச் செய்துகொண்டு, நான் அதிகமாகத் தன்னலமுடையவனாக ஆனால், என்னிடம் அதிக பயமும் குடிகொள்ளும். தான் எதற்கும் பிரயோசனமில்லாதவன் என்று ஒருவன் நினைத்துக்கொண்டால் அவனிடம் பயமென்பது இயற்கையில் ஏற்படும். எவ்வளவுக் கெவ்வளவு அந்த எண்ணத்தைக் குறைத்துக்கொள்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு பயமும் குறையும். பயமென்பது சிறிது கூட இருக்குமானால் உங்களிடம் அப்போது அன்பென்பது விளங்காது. அன்பு என்பதும் பயம் என்பதும் சேர்ந்து வசிக்கமாட்டா. ஆதலால், கடவுளிடம் அன்பு செலுத்திவருகிறவர்கள் அவரைக்கண்டு பயப்படவேண்டியதே இல்லை. "உன் கடவுளது நாமத்தை நீ வீணே ஏற்றுக் கொள்ளாதே" என்ற கட்டளையைக் கண்டு மெய்யான கடவுள் பக்தன் நகைப்பான். "அன்பென்னும் மதத்தில் வேஷமென்பது எவ்வாறு ஏற்படும்?" என்று பக்தன் கேட்பான். கடவுள் பெயரை எவ்வழியாகவேனும் ஏற்றுக்கொள்வது நலத்தையே செய்துவிடும். மெய்யான பக்தன் கடவுள் நாமத்தை அடிக்கடி உச்சரித்துக்கொண்டிருப்பான். அதுவே அவனுக்கு பிரீதியான வஸ்து.

அன்பில் போட்டி என்பதும் இருக்க முடியாது. இது அன்பென்ற முக்கோணத்தில் உள்ள மூன்றாவது கோணம். போட்டி என்னும் சித்தம் ஏற்படாமலிருக்கவேண்டும். இந்த லட்சணமே மூன்றாவது அம்சம். அன்புடன்கூடவே அன்பு செலுத்துகிறவனது உன்னத லட்சியமும் இணைந்திருக்கிறது. நாம் அன்பு செலுத்தும்பொருள் நமது உன்னத லட்சியமாக ஆகும்வரையில் உண்மையான அன்பு நமக்கு ஏற்பட முடியாது. பல தடவைகளில் மனிதரது அன்பு தவறான இடங்களில் செலுத்தப்படுகிறது என்பது

உண்மையாக இருக்கலாம். ஆனால், அன்பு செலுத்துகிறவன் நோக்கத்தில் அம் மனிதனே தனக்கு உன்னதமான லட்சிய வஸ்துவாக ஆகிறான். மனிதர்களுக்குள் மிகக் கடைசி நிலையிலிருப்பவனிடம் ஒருவன் அன்பு செலுத்தலாம். ஆனாலும் எவ்வித நிலையிலும் அன்பு செலுத்துகிறவன் அவனிடம் தன் உன்னத லட்சியத்தையே காண்கிறான். இதுவே ரகஸ்யம். ஒவ்வொரு மனிதனுடையவும் உன்னத லட்சியம் கடவுள் என்று சொல்லப்படும். ஞானியும் அஞ்ஞானியும், முனிவனும் பாவியும், மனிதனும் ஸ்திரீயும்,படித்தவனும் படிக்காத மூடனும்,சிறந்த பயிற்சியுள்ளவனும் இல்லாதவனும் ஆகிய ஒவ்வொரு மனிதனும் உன்னத நிலையிலுள்ள லட்சியமாயிருப்பது கடவுளே. அழகு, காம்பீரியம், சக்தி முதலியவற்றின் அதியுன்னத பாவனைகளின் சேர்க்கையே காருண்ய மூர்த்தியாகிய கடவுளின் நினைப்பை உண்டாக்குகிறது. இந்தப் பாவனைகளெல்லாம் ஏதேனும் ஒருவிதமாக ஒவ்வொருவர் மனத்திலும் இயற்கையில் அமைந்திருக்கிறது. ஒவ்வொருவருடைய சொரூபத்திலும் இது கலந்தே நிற்கிறது. மனிதர்கள் செய்யும் காரியங்களின் தன்மையெல்லாம் இவ்வித பாவனைகள் அனுபவ வாழ்க்கையில் உண்மையாக வேண்டுமென்று அவர்கள் செய்யும் போராட்டங்களேயன்றி வேறில்லை. சமூகத்தில் நம்மைச் சுற்றி நாம் பார்க்கும் கிளர்ச்சிகளெல்லாம் கூடி என்ன? பல ஜீவர்களிடமும் விளங்கும் இந்த லட்சியங்கள் வெளிப்பட்டுக் காரிய ரூபங்களை (ஸ்தூல ரூபங்களை) ஏற்றுக்கொள்ள முயற்சி செய்வதன் பயனே யன்றி வேறல்ல. உள்ளேயிருப்பது வெளியில் வருவதற்காக மோதிக்கொண்டிருக்கிறது. எப்போதும் ஆதிக்கத்தைச் செலுத்திக்கொண்டு விடாமல் விளங்குவதாகிய லட்சிய வஸ்துவே—இந்த ஒரு சக்தியே, ஒரே எண்ணம்தான்—மனித சமூகத்தில் ஓயாமல் வேலைசெய்துகொண்டிருக்கிறது. "வெளிப்பிரபஞ்சத்தில் உள்ள நிலைமைகளை ஒழுங்குபடுத்தி முற்றிலும் சமமாக்கி உள்ளேயிருக்கும் லட்சிய

வஸ்துவுடன் ஒத்து நடக்குமாறு செய்யும் முயற்சியெல்லாம் வீண்" என்ற உண்மையை மனிதன் கண்டுபிடிக்க நூற்றுக்கணக்கான ஜன்மங்களும் ஆயிரக்கணக்கான வருஷங்களும் ஆகலாம். முடிவில் அவ்விதம் கண்டுதான் தீர வேண்டும். அதன்பிறகு அப்படிக் கண்டுபிடித்த மனிதன் தன் லட்சிய வஸ்துவை (சக்தியை) வெளியுலகில் செலுத்த முயற்சி செய்யமாட்டான். அந்த லட்சியத்தையே அன்பின் உன்னத நிலையிலிருந்து வணங்குவான்.

உண்மையில் பரிபூரணமான லட்சியப்பொருள் உண்டானால் அது கீழ்ப்பட்ட லட்சியங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. மிகக் குரூபியானாலும் அவளிடம் காதல் செலுத்திய புருஷன் அங்குத் தெய்வலோகத்து அரம்பையைத்தான் பார்க்கிறான் என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். வெளியே இந்த வேடிக்கையைக் காண்பவன் "அங்கு அன்பு (காதல்) தவறான இடத்தில் சென்றது" என்று கூறலாம். காதலனோ எப்போதும் எங்கும் அரம்பையைத்தான் பார்க்கிறான். குரூபி அவன் கண்களில் தோன்றுவதில்லை. ஏனெனில், ரூபம் எப்படியிருந்தாலும் தன்னால் விரும்பப்பட்ட பொருளைச் சுற்றிலும் தன் லட்சிய வஸ்துவின் அம்சமே சூழ்ந்துகொள்கிறது. அதன் உருவமாகவே அந்தப் பொருளும் ஆகிவிடுகிறது. சாமான்யமாக ஜனங்களுக்கு எதனிடம் அதிக பற்று ஏற்படுகிறதென்று இப்போது கவனிப்போம். எல்லாவற்றையும் தன்னிடம் அடக்கிக்கொண்டுள்ள பரிபூரண லட்சிய வஸ்துவாகிய பக்தனது பாவஸ்துவல்ல என்று சொல்லிவிடலாம். சாதாரண மனிதர்களும் ஸ்திரீகளும் வணங்கும் சக்தி அவர்களிடமுள்ளதேயாம். ஒவ்வொருவனும் தன் லட்சிய வஸ்துவையே வெளியில் செலுத்தி அதற்குத் தண்டனிடுகிறான். ஆதலால், மிகக் குரூர குணமுள்ளவர்களும் பழி தீர்த்துக்கொள்ள விரும்புகிறவர்களும் வணங்கும் கடவுளிடமும் அதே குணங்களைக் கற்பித்துவிடுகிறார்கள். இதுதான் இயற்கையில் ஏற்பட முடியும்.

அவர்கள் தம் உன்னத லட்சியத்தைத்தான் வணங்க முடியும். அதுபோலவே, நல்லோர்களுடைய கடவுளும் மிகச் சிறந்த லட்சிய வஸ்துவாக இருக்கிறது. இவர்களுடைய லட்சிய வஸ்து மற்றவர்களுடைய லட்சியங்களிலிருந்து மிகவும் வேறுபட்ட குணங்களுடன் கூடியிருக்கிறது.

ஆநந்த ராமாயணம்

இது உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு, ஆர்ட் பேப்பரில் அச்சிட்ட 13 உயர்ந்த ஆப்டோன் படங்களுடன், முதுகில் தங்க கிலிட்டு பெயருடன் விலை ரூபா 6.

இந்நூல் ஸ்ரீவால்மீகி மஹரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டது. இதைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டிருக்கின்றோம்: இதில், ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன. ஸ்ரீ ராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்களுடைய ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அந்தத் தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கியிருப்பதுடன் படிப்பதற்கு வெகு இனிமையாகவுமிருக்கும். ஆநந்த ராமாயணம் என்ற இதன் பெயருக்கேற்றபடி படிப்போர்கள் மனத்திற்கு உற்சாகமும் ஆநந்தமும் உண்டாகுமென்பதில் தடையில்லை. நெடுங்காலமாக இந்நூல் தமிழில் வெளிவராதிருந்து, இப்போது வெளிவந்தது. ஆகையால், நமது தமிழ் அபிமானிகள் ஒவ்வொருவரும இந்நூலை வாங்கி வாசித்துப் பயன் பெறும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்புத்தகம் ஒன்பது காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் அடங்கிய காண்டங்களின் விபரம்:—

1. ஸார காண்டம், 2. யாத்ரா காண்டம், 3. யாக காண்டம், 4. விலாச காண்டம், 5. ஜன்ம காண்டம், 6. விவாக காண்டம், 7. ராஜ்ய காண்டம், 8. மனோகர காண்டம், 9. பூர்ண காண்டம்.

எட்டாவது அதிகாரம்

அன்பின் சொரூபமே கடவுள்

தன்னலமிக்க சிந்தைகளுக்கப்பாற் சென்ற பக்தனைப்பற்றி இப்போது கவனிப்போம். அன்பு விஷயத்தில் பேரம் செய்வதும் வர்த்தகம் செய்வதும் அவனிடம் கிடையாது. கடவுள் சம்பந்தப்பட்ட வரையில் பயமென்ற உணர்ச்சியே அவனிடம் கிடையாது. மகத்தான கடவுளிடத்திலும் இவ்வித மனிதன் "எனக்குச் சொந்தமானவற்றையெல்லாம் உனக்கே அளித்துவிட்டேன். எனக்குச் சொந்தமென்று எதையும் சொல்லிக்கொள்ளக் கூடியதாக இல்லை. அப்படியிருந்தும் உன்னிடமிருந்து நான் எதையும் வேண்டவில்லை." என்று சொல்லிவிடுவான். இவ்வித உன்னத நிலையை அடைந்தவுடன் மனிதன் கொண்டுள்ள லட்சியம் பரிபூர்ண அன்பு (பக்தி) ஆகிறது. அதனிடம் பிரத்தியேகமான குணமெதுவும் இருந்துவிடாது. எங்கும் நிறைந்த அன்பாக யாதொரு குறையுமின்றி அகண்ட பரிபூர்ணத் தன்மையை அடைகிறது. இவ்வளவு மகத்தான லட்சியத்தை ஆராதிப்பதற்கு அடையாளமெதுவும், பிம்பங்கள் எவையும் வெளிக்கருவிகளாக பக்தனுக்கு வேண்டியதில்லை. ஆதலால், சகலத்தையும் தன்னுள் அடக்கிக்கொள்ளும் அன்பே ஒருவனுக்கு இஷ்ட லட்சியமாக ஆகும்போது அதை வணங்குவதுதான் பக்தியின் உன்னத சொரூபம். இந்த லட்சியத்தை நோக்கிச் செல்லும் மார்க்கத்தில் இதர கொள்கைகளும் பாவனைகளும் இருக்கின்றன. பக்தி மார்க்கத்தைப் பின்பற்றும்போது, நமக்கு ஏற்படும் வெற்றியும் தோல்வியும் அந்த உன்னத லட்சியத்தை யனுபவிக்கச் செல்லும் வழியில் உள்ளவை. ஒவ்வொரு விஷயமாக எடுத்துக்கொண்டு

பக்தன் அவற்றினிடம் தன் லட்சியமாகிய பாவனையைச் செலுத்திப் பார்க்கிறான். முடிவில் "எப்போதும் பெருகிக் கொண்டே வருகிற ஆத்ம லட்சியத்தை விளக்கிக் காட்டுவதற்கு வெளி விஷயங்கள் தகுதியுடையவைகளல்ல" என்று அறிகிறான். ஆதலால், விஷயங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஒதுக்கப்படுகின்றன. வெளி விஷயங்களின் உதவியால் லட்சியத்தை யடைவது வீண் எனக் கண்டு சுயமான லட்சியத்தையே தியானிக்க ஆரம்பம் செய்கிறான். இவ்விதம் அப்பியசித்துக் காலக்கிரமத்தில் அதியுன்னதமானதும் எல்லாவற்றிலும் நிரம்பியுள்ளதுமாகிய அன்பின் சொரூபத்தைப் பாவனையாகவே தனியே அனுபவித்தறியச் சக்தி வாய்ந்தவனாகிறான். அதுவே அவனுக்கு மெய்ப் பொருளாக ஆகிறது. இந்த நிலைக்குப் பக்தன் எழும்பியவுடன் கடவுளுக்கு ருஜு உண்டா இல்லையா என்றுகூட பக்தன் கேட்பதில்லை. சர்வ சக்திமானா அல்லது சர்வஞ்ஞனா என்பதும் தெரியவேண்டியதில்லை. இப்போது கடவுள் அவனுக்கு அன்பின் சொரூபம். அன்பென்ற உன்னதமான லட்சியப்பொருளாக இருக்கிறது. பக்தனுக்கு அதுவே எல்லாக் காரியங்களுக்கும் போதும். காதலர்கள் தம் அன்புக்கு ருஜு தேடமாட்டார்கள்; அதுபோலவே, பக்தனும் அன்பின் சொரூபமாக விளங்கும் கடவுளுக்கு எவ்வித ருஜுவும் கேட்கமாட்டான். இதர மதங்களில் கடவுள் (சர்வ சக்திமான்) அதிகாரம் வகித்து வருவதற்குப் பல ருஜுக்கள் தேவையாக இருக்கலாம். பக்தனுக்கு இப்போது பக்தி பூர்த்தியானதும் அவ்வித கடவுள்களைத் தேடவேண்டிய அவசியமே கிடையாது. அவனுக்குக் கடவுள் சொரூபமெல்லாம் அன்பின் பூர்த்தியாகவே யிருக்கிறது. எல்லா வஸ்துக்களிடத்திலும் அந்தர்யாமியாக இருக்கப்பட்ட ஆத்மவஸ்துவாகவே கடவுளைக் கண்டு ஆநந்தத்தால் பின்வருமாறு கூறுகிறான் :—"ஏ! அன்பனே! எவரும் புருஷனைப் புருஷன் என்பதற்காக விரும்புவதில்லை. அவரிடம் விளங்கும் ஆத்மவஸ்துவிற்காகவே புருஷனிடம்

அன்பு செலுத்தப்படுகிறது. மனைவியை மனைவிக்காகவே எவரும் இச்சிப்பதில்லை. மனைவியினிடம் விளங்கும் ஆத்மாவிற்காகவே அவளிடம் அன்பு செலுத்தப்படுகிறது.''

''மனிதருடைய செய்கைகளுக்கெல்லாம் காரணம் தன்னல மொன்றே'' என்று சிலர் கூறுகின்றார்கள். அதுவும் கூட அன்பேயாம். அன்பென்பதன் கீழ்ப்பட்ட தன்மையென்று அதைச் சொல்லலாம். நான் ஜகத் பொதுவான சமஷ்டியென்று அனுபவத்தா லறிந்த பிறகு எனது அன்பு கூட ஜகத்வியாபகமடைந்து தன்னலமற்ற தன்மை ஏற்படுகிறது. தவறுதலாக நான் சிறு பிராணியென்று நினைத்துக்கொண்டேனானால் அந்த சமஷ்டியினின்று வேறுபட்டவனாகி என் அன்புகூடக் குறுகிவிடுகிறது. அன்பு செலுத்தப்படும் இடத்தையும் சிறியதாக்கிக்கொண்ட பிறகு அந்தத் தவறு தடித்துவிடுகிறது. ஜகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் கடவுளிடமிருந்தே உற்பத்தியாகின்றன. அதனால் எல்லாவற்றினிடமும் அன்பு செலுத்த வேண்டியது அவசியம். ஆனால், சமஷ்டியினிடம் செலுத்தப்படும் அன்பு வியஷ்டிகளையும் சேர்த்துக்கொள்கிறதல்லவா? இந்த ஜகத் முழுமையும் சேர்ந்த சமஷ்டியே உன்னத ஸ்தானத்தையடைந்த பக்தனுடைய கடவுள். சுவர்க்கத்திலுள்ள பிதா, ஆளுகிறவர், சிருஷ்டி கர்த்தா முதலிய பாவனைகளெல்லாம், பலவித மதக்கொள்கைகளும் சித்தாந்தங்களும் சாஸ்திரங்களும் அர்த்தமில்லாத வீண் விஷயங்களெனவே பக்தனுக்குத் தோன்றும். அவர்கள் தம் பராபக்தியினாலும் தெய்வ வழிபாட்டினாலும் இவற்றிற்கெல்லாம் மேலாகக் கிளம்பிவிட்டார்கள். ஹிருதயம் பரிசுத்தமாகித் தெளிவான நிலையை அடைந்தால், அன்பென்ற தேவாமிர்தம் ஹிருதயத்தில் நிறைந்து ததும்பும்போது, கடவுள் அன்புமயம் என்பதைத் தவிர வேறு எவ்வித பாவனையும் போதுமானதல்ல என்றும் பயனற்றதென்றும் தோன்றிவிடும். ஆதலால், அவற்றைப் பக்தன் தள்ளிவிடுவான், பராபக்தியின் சக்தி இவ்வளவு மகிமை பொருந்தி

யது. பரிபூர்ண பக்தன் கடவுளை எங்கும் காண்கிறான்; ஆதலால், கோவில்களிலும், புண்ணிய பீடங்களிலும் சென்று கடவுளைத் தேட பக்தன் செல்வதில்லை. கோவில் களிலிருப்பதுபோலவே வெளியிலும் இருப்பது கடவுளே யென்று அவன் அறிகிறான். முனிவருடைய மகிமையிலும் துஷ்டனுடைய துஷ்டச் செயலிலும் பக்தன் கடவுளையே காண்கின்றான். ஏனெனில், பக்தன் தன் ஹிருதயத்திலேயே சர்வசக்தி பொருந்தி ஒருபோதும் தணியாத ஜோதியாகக் கடவுளைப் பெருமையாக ஸ்தாபித்துக்கொண்டிருக்கிறான். நித்தியமாக அது நின்று எப்போதும் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது.

திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகர் உரையும்.

இதில் நக்கீரதேவர் வரலாறும், பரிமேலழகர் வரலாறும், தோத்திரப்பாக்கட்குப் புதிய உரையும், காப்புச் செய்யுளுக் குப் புதிய உரையும் ஸ்ரீமான் ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியாரவர்களால் எழுதப்பெற்று ஷை யாரால் பார்வை யிடப்பெற்றது.

இந்நூலின் அமைப்புப் பின் வருமாறு:—

1. ஒவ்வொரு திருப்படைவீட்டுத் துதியின் மூலம் வரிக் கணக்கோடும் போடப்பட்டிருக்கின்றது.

2. ஷை துதியைச் சிறு வாக்கியங்களாக எடுத்து அந் வயப்படுத்திக் காட்டி, அதன்கீழ் ஷை வாக்கியம் இன்ன வரி யைச் சார்ந்ததென்று காட்டப்பட்டிருக்கின்றது.

3. பிறகு ஷை பதங்கள் ஒரே வரிசையாகவும், ஷை பதங் களின் பதப்பொருள் ஷை பதங்களுக்கு நேர் நேராகவும் போடப்பட்டிருக்கின்றன. ஷை பதவுரையையே பொழிப் புரையாகவும் படித்துக்கொள்ளுமாறு இப்போது நூல் அமைந்துள்ளது.

4. ஷை பதவுரையின் கீழ்ச் சிற்சில இடங்களில் உரை விளக்கம் காட்டப்பட்டிருக்கின்றது. விலை அணா 8.

ஷை கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டது அணா 12.

ஒன்பதாவது அதிகாரம்

பக்தி என்ற திவ்ய லட்சியத்தின் சில பிரதிகள்

பராபக்தி என்ற லட்சியத்தின் சுபாவ மின்னதென்று மானிட பாஷையில் விளக்க முடியாது. அந்த பக்தியின் அகண்ட பரிபூரணத்தன்மையின் அழகை முற்றிலும் கிரகிப்பதற்கு எவ்வளவு உன்னதமான மனோபாவனையாலும் முடியாது. ஆனால், எல்லாத் தேசங்களிலும் பக்தி மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் பக்தியில் உன்னத நிலையையும் கீழ்ப்பட்ட நிலையையும் அறிவதற்கு இந்தக் குறைவுபட்ட மானிட பாஷையைத்தான் உபயோகிக்கவேண்டியிருக்கிறது. இவ்வளவுடன் அவர்கள் விட்டுவிடுவதில்லை. வாக்கிற்கெட்டாத இந்தத் திவ்ய அன்புசொரூபத்தை மானிட அன்பின் பலவகையான பாவனைகளாலும் சுட்டிக்காட்ட விரும்புகிறார்கள். தெய்வீக விஷயங்களையும் மனிதன் தன் மானிட இயல்புள்ள வழியிலேதான் சிந்திக்க முடியும்; பரிபூர்ண பிரம்மசொரூபத்தையும் ஏறத்தாழ உள்ள உலக விஷயங்களுடன் சீர்தூக்கித்தான் விளக்கமுடியும். எல்லைக்குட்பட்டதாக இருக்கும் சொரூபங்களின் பாஷையில் அகண்ட சுதந்திரவஸ்து வரையப்பட்டதென்று சொல்ல முடியுமானால் அதுவே இந்த ஜகத்தாகும். ஆதலால், கடவுளைப்பற்றியும் அவரை வழிபடுதலைப் பற்றியும் பேசும்போது பக்தர்கள் சாமான்ய மானிட அன்பின் தன்மைகளையே உபயோகிக்கிறார்கள். பராபக்தியைப்பற்றி எழுதியிருக்கும் பெரிய ஆசிரியர்களில் சிலர் பல வழிகளில் தெய்வத்தன்மை பொருந்திய அன்பை அனுபவித்து விளக்கிக் காட்ட முயன்றிருக்கிறார்கள். அவை பின்வருமாறு:—

அமைதி பொருந்திய சாந்தம் என்ற வழியில் அன்பை அறிவதுதான் கடைசிப் படியிலுள்ளதாகும். அன்பென்ற ஜுவாலையில்லாமல் ஒரு மனிதன் கடவுள் வழிபாடு செய்தானால், அமைதியுடன் கூடிய சாமான்ய அன்பாகவே அவனது அன்பு இருந்தால், ரூபங்கள்-கிரியைகள்-பாவனைகள் என்றவைகளைக் கவனிப்பதினின்றும் சிறிதளவு மாத்திரமே உயர்ந்திருந்தால், அதிதீவிரமான சுறுசுறுப்புடன் கூடிய அன்பு என்ற வெறியில்லாமலிருந்தால், அப்போது ஏற்படும் அன்பிற்குத்தான் சாந்தம் என்று பெயர். உலகில் சிலர் மெதுவாகச் செல்ல விரும்புகிறார்கள்; மற்றும் சிலர் சுழற்காற்றுப்போல வந்து போய்விடுகின்றனர். முதற்சொல்லியவர்களைப்போல் சாந்த பக்தர்கள்: அமைதியாகவும், சாந்தமாகவும், மிருதுவான தன்மையுடன் கூடியவர்களாகவுமிருக்கின்றார்கள்.

இவர்களுக்கு அடுத்தபடியாக இவர்களைவிடத் திறமாக இருக்கப்பட்டவர்கள் தாஸ்ய பக்தர்கள்; அதாவது, ஊழியம் செய்பவர்கள் என்று பொருள். கடவுளின் ஊழியன் என்று மனிதன் தன்னைப் பாவித்துக்கொள்ளும்போது இவ்வித பக்தி ஏற்படுகிறது. அப்போது கடவுளை வணங்குவதற்கு விசுவாசமுள்ள வேலைக்காரன் தன் எஜமானனிடம் காட்டும் அன்பே லட்சியமாக அவனுக்குத் தோன்றுகிறது. சக்யம் அல்லது நட்பு என்பதே அடுத்த படியில் மேலே உள்ளது. "துவமேவ பந்துஸ்ச ஸகா த்வமேவ" என்று இந்த லட்சியத்தைப் பின்பற்றுகிறவன் சொல்கிறான். "அன்பு மிக்க நண்பன் நீயே" என்பது இதன் பொருள். ஒரு மனிதன் தன் நண்பனிடம் தன் ஹிருதயத்தை ஒளியாது காட்டுவதுபோல, இவனும் கடவுளிடம் தன் ஹிருதயத்தை அவிழ்த்துவிடுகிறான். தன் குற்றங்களுக்காகத் தன்னை நண்பன் கண்டிக்காமல் எப்போதும் உதவி செய்வான் என்பதை இந்த பக்தன் அறிகிறான். கடவுளுக்கும் பக்தனுக்குமுள்ள இவ்வித சம்பந்தத்தில் சமத்துவ உணர்ச்சியும் பரஸ்பர அந்நியோந்ய பாவனையும் விர்த்தி

யாகின்றது; ஒரு மனிதனுக்கும் அவனது நண்பனுக்கும் ஏற்படும் சம்பந்தத்திலும் இவ்வித உணர்ச்சியே காணப்படுகிறது. இவ்வித பக்தியை லட்சியமாக அடையும்போது தெய்வத்தை வணங்குகிறவனுடைய ஹிருதயத்தினின்று வெளிப்பாயும் அன்பின் தன்மை இதுவே. இந்த நிலையில் உறுதியாக நிற்க முடியுமானால் கடவுள் நமக்கு ஒரு நண்பனைப்போல நின்று எப்போதும் அருகிலிருப்பார்; தாராளமாக நம் மனத்திலுள்ள ரகஸ்யங்களையெல்லாம் வெளியிடலாம்; அவருடைய உதவியும் பலமும் நமக்கு நிச்சயம் கிடைக்கும். இவ்விதம் கடவுள் நமக்குச் சமமான நண்பர் ஆகி வாழ்க்கை என்று சொல்லப்பட்ட இந்த விளையாட்டில் நமக்கு மிக நெருங்கிய சகாவாக ஆகிறார்.

நாமெல்லோரும் இந்த ஜகத்தில் கடவுளுடன் விளையாடிக்கொண்டிருக்கிறோமென்று தாராளமாகச் சொல்லிவிடலாம். குழந்தைகள் தமக்குத் தகுந்த விளையாட்டுக்களை விளையாடுவதுபோலவே பெரிய மனிதர்களும் தமக்குத் தகுந்த விளையாட்டுகளை உடையவர்களாயிருக்கிறார்களல்லவா? அதுபோலவே, அன்பு செலுத்தப்பட்ட கடவுளும் அவருக்குச் சொந்தமான விளையாட்டுகளை உடையவராகிறார். விளையாட்டாக இந்த ஜகத்தை சிருஷ்டிக்கிறார். அவர் சிருஷ்டி செய்வதற்கு வேறு எவ்வித எண்ணமும் அவரிடம் இருப்பதாக உன்னால் கற்பிக்க முடியாது. ஏனெனில், அவர் பரிபூரணர்; அவருக்கு எவ்வித தேவையுமில்லை. அப்படியிருக்க அவர் ஏன் சிருஷ்டி செய்யவேண்டும்? சில தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டே நம்மிடம் சுறுசுறுப்பு இருக்கின்றது. தேவையிருக்கிறதென்றபோதே முன்பு பூரணத்தன்மையில்லையென்கிறது. கடவுள் பூரணரும் தேவைகளற்றவருமாயிருந்தால் அவர் ஏன் சுறுசுறுப்புடன் இந்தச் சிருஷ்டி காரியத்தில் இறங்கவேண்டும்? அப்படிச் செய்வதில் அவர் எந்தக் காரியத்தை நோக்கமாகக் கொண்டுள்ளார்? இந்தக் காரணத்திற்காக, இந்த எண்ணத்தை முடிப்பதற்கு, கடவுள் உலகைச் சிருஷ்டித்தார் என்று சொல்லப்படும் கதைகள் நல்ல கதைகளாக இருக்க

லாம். அவற்றால் வேறு காரியம் கிடையாது. ஆதலால், கடவுளுக்கு விளையாட்டாக மாத்திரம் உலகம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கவேண்டும்; இப்போது அவருடைய விளையாட்டிற்காகவே உலகம் நடைபெறுகிறது. ஆமாம்! அதுவே உண்மை ஜகத் முழுமையும் அவருக்கு இனிமையைக் கொடுக்கும் வேடிக்கையாகவே இருக்கவேண்டும். ஆதலால், பக்தன் இவ்வாறு உங்களுக்குச் சொல்கிறான் :—விளையாட்டிற்கு ஏற்பட்ட நித்யமான சகாவாகவே கடவுளைப் பாவித்து அவரிடத்து அன்பு செலுத்துங்கள். எது நடந்தாலும் அவன் கூத்தென்று அதைப் பாராட்டுங்கள். நீங்கள் ஏழைகளானால் அதுவும் அவனது வேடிக்கையென்று அனுபவியுங்கள். நீங்கள் தனவந்தர்களானால் அதையும் வேடிக்கையென்று அனுபவியுங்கள். ஆபத்து வந்ததானால் அதுவும் ஒரு நல்ல வேடிக்கைதான். சுகானுபவம் ஏற்பட்டால் அதிகமான நன்மை பொருந்திய வேடிக்கையாகும். உலகம் ஒரு விளையாட்டுப் பூமி என்றும், அதில் எப்போதும் கடவுளுடன் விளையாடுகிறோம் என்றும் எண்ணுங்கள். எவ்வளவு அழகாக நித்தியத்தன்மையுடன் கூடிய சகா விளையாடிக் கொண்டிருக்கிறான் பாருங்கள்!! இந்தச் சதுர்யுகம் முடிவடைந்ததும் விளையாட்டு முடிவு பெற்றுச் சிறிது காலம் ஓய்வு ஏற்படும். மறுபடியும் இதே விளையாட்டுத் திரும்பி ஜகத்தும் அதன்கண் உள்ள சகல வஸ்துக்களும் மீண்டும் தோன்றி அவருடன் விளையாட முன்வரும். இவ்விதமே எல்லாம் நடைபெறுகின்றன. எல்லாம் விளையாட்டு என்பதை மறந்து, நீங்களும் மற்ற ஒவ்வொரு வஸ்துவும் கடவுளின் இந்த விளையாட்டிற்கு உதவி செய்வதாக நினைக்கும்போது மாத்திரமே துக்கமும் மனவேதனைகளும் உற்பத்தியாகின்றன; ஹிருதயம் பாரமாக ஆகின்றது; உலக விஷயங்கள் மகத்தான சக்தியுடன் உங்களை வாட்டிவிடுகின்றன. மெய்ப்பொருளுக்கே சொந்தமான சத்தியத்தன்மையை, மூன்று நிமிஷ வாழ்க்கையாகிய இவ் வாழ்க்கையில் நேரும் மாயாவிஷயங்களிடம் செலுத்தாமல் விட்டுவிட நீங்கள்

வல்லவராகும்போது துக்கம் என்பது உங்களுக்கில்லை யாகின்றது. அணுக்களைக்கொண்டு கடவுள் விளையாட்டுப் போல் பூமிகளையும் மானிட ஹிருதயங்களையும் உருவாக்கிக் கொண்டுவரும் கடவுளைக் காண்பாயாக! அவர் கைகளில் நாமெல்லோரும் சொக்கட்டான் காய்களைப்போன்ற மனிதர்கள் என்று பாவனை செய்யுங்கள். நம்மை அவர் தம் இஷ்டம்போல் முதலில் ஒரு விதமாகவும் பிறகு வேறுவிதமாகவும் வைக்கிறார். இவ்விதம் அவர் நடத்தும் விளையாட்டிற்கு நாம் அறிந்தோ அறியாமலோ உதவி செய்கிறோம். இவ்வித விளையாட்டில் நாமும் கடவுளும் சகாக்கள் என்று நினைக்கும்போது ஆகா! எவ்வித ஆனந்தம் ஜனிக்கிறது!

வாத்ஸல்யம் என்பது அடுத்தபடியாக மேலே உள்ளது. இதில் கடவுளை மாதாவாகவோ பிதாவாகவோ பாவித்து அன்பு செலுத்தாமல் நமது குழந்தையாகவே அவரைக் கருதி அன்பு செலுத்தப்படுகிறது. இது விநோதமாகத் தோன்றக்கூடும். கடவுளிடம் சக்திகள் இருக்கின்றன என்ற பாவனைகளை நாம் நீக்கும்படி செய்துகொள்வதற்கு இந்தப் பழக்கம் அவசியமாகிறது. அதிகாரம் அல்லது சக்தி யிருக்கிறதென்று சொல்லும்போது கூடவே பயமென்பது உண்டாகிறது. 'கடவுளிடம் அன்பு செலுத்தும்போது யாதொரு பயமும் ஏற்படலாகாது என்பதே லட்சியமல்லவா? பக்தனிடம் மேலான குணம் படிவதற்குமுன் மரியாதையும் கீழ்ப்படியும் குணமும் அவனுக்கு வேண்டும். ஆனால், அவ்வித குணம் ஸ்திரப்பட்டவுடன், பக்தன் தன்னிடம் அமைதியான சாந்தகுணம் மிக்க அன்பை அனுபவித்த பிறகு சிறிது பக்தி வெறியும் கொண்டானானால் பிறகு அவனுக்கு நீதிபோதனையும் வேண்டாம்; சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட விதிகளின்படி நடந்தே தீரவேண்டும் என்பதும் வேண்டியதில்லை. மகத் சக்தியும் காம்பீரியமும் பெருமையும் பொருந்தப்பெற்று ஜகத் கர்த்தா என்ற கடவுள் அவ்வித நிலைக்கு எழும்பிய மனிதனுக்குத் தேவையில்லை. தேவாதிதேவன் என்ற அடைமொழியும் அவனுக்கு வேண்டாம். பயத்தை யுண்டாக்கும்படியான சக்தி

கூ-வது அதி.—பக்தி என்ற திவ்ய கௌ லட்சியத்தின் சில பிரதிகள்

கடவுளிடம் இருக்கிறதென்ற பாவனையே மனதில் தோன்றக்கூடாது என்பதற்காகத்தான் கடவுளைத் தன் குழந்தையாகப் பாவித்து வணங்குகிறான். குழந்தையினிடம் அன்பு செலுத்தும்போது மாதா பிதாக்கள் பயம் என்ற உணர்வினால் தூண்டப்படுவதில்லை; குழந்தையினிடம் மரியாதை என்ற பாவனையும் ஏற்படுவதில்லை. குழந்தையின் தயவை எவ்விதத்திலும் அவர்கள் எதிர்பார்க்க முடியாது. குழந்தை விஷயமாகப் பெற்றோர்கள் எப்போதும் கொடுக்கின்ற நிலையிலேயே இருப்பவர்கள்; பிரதியாக எதையும் அடைய மாட்டார்கள். குழந்தையினிடம் ஏற்படும் அன்பு காரணமாகப் பெற்றோர்கள் தம் சரீரங்களையும் நூறு தடவைகூட விடத் தயாராயிருப்பார்கள். குழந்தைக்காக உண்மையில் ஆயிரம் ஜன்மமும் எடுக்க விரும்புகிறவர்களுமுண்டு. இவ்வித தீவிரமான அன்புடன் பக்தனும் தன் கடவுளிடம் அன்பு செலுத்தப் பார்க்கிறான். அதனால் அவன் எண்ணத்தில் கடவுள் ஒரு குழந்தையாகத் தென்படுகிறார். இவ்வாறு கடவுளைக் குழந்தையாகப் பாவித்து வணங்கும் பாவனை உற்பத்தியாகித் தானே வளர்ந்து வந்தது. முகம்மதியர்களுக்குக் கடவுளிடம் இவ்வித பக்தி ஏற்பட்டு வளர முடியாது. அவ்வித பாவனையைக் கண்டு அவர்கள் நடுங்கிவிடுவார்கள். கிறிஸ்தவ மதத்தில் ஏசுநாதர் குழந்தையாக வளர்ந்ததும், ஹிந்து மதத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் குழந்தையாக வளர்ந்ததும் கதைகளாக வழங்கி வருகின்றன. ஆதலால், அந்த மதஸ்தர்கள் இலகுவாக இவ்வித பாவனைகளை அனுபவிக்க முடியும். இந்திய பெண்மக்கள் தம்மைக் ஸ்ரீ கிருஷ்ணனுடைய தாய்கள்போல் பாவித்துக்கொள்வதுண்டு. கிறிஸ்தவ மதப்பெண்மணிகளும் இவ்விதம் தம்மை ஏசுநாதரின் தாய்கள் எனப் பாவிக்கலாம். இவ்வித பாவனை மேனாடுகளுக்குள் வளர்ந்துவந்தால் தெய்வ சொரூபம் பொருந்திய தாய் என்ற ஞானம் அத்தேச ஜனங்களுக்கு ஏற்பட்டு அவர்கள் மேன்மை யடைவார்கள். இதுவும் அவர்களுக்கு அதிக அவசியமானதாக இருக்கிறது.

ஆனால், இது மிகக் கடினம். கடவுளிடம் மரியாதை, பயம் என்ற மூட பக்திகள் நம் ஹிருதயங்களில் ஆழமாக ஊன்றி நிற்கின்றன. அவற்றை முற்றிலும் இந்த அன்பென்ற லட்சியத்திற்குள் அழுந்திவிடுமாறு செய்வதற்கு நீண்ட காலமாகும்.

அன்பைப்பற்றிய மானிட லட்சியங்களில் இன்னும் ஒரு பாவனை மீதியிருக்கிறது. மதுரம் அல்லது இனிமை யென்பது அதன் பெயர். மானிட பாவனைகளுள் இதுவே உயர்ந்தது. இவ் வுலகில் மனிதன் அறியக்கூடிய அன்பின் ஆவிர்ப்பவங்களுள் அதிபுன்னதமானதும் பலம் பொருந்திய தும் இதுதான். மனிதனது முழு சுபாவத்தையும் கலங் கச்செய்து அவன் தேகத்தின் ஒவ்வொரு அணுவினுள்ளும் ஊடுருவிப்பாய்ந்து அவனை வெறிபிடிக்குமாறு செய்வதெது? தன்னையே முற்றிலும் மறக்கும்படி செய்து, தன் முழுகுணத் தையும் மாற்றிவிடத் தக்கதாய் ஒரு தெய்வமாகவோ பைசாசமாகவோ தன்னை மாற்றக்கூடிய சக்தி எது? அது தான் ஸ்திரீ புருஷர்களுக்குள் ஏற்படும் அன்பு. தெய்வத்தி னிடம் இவ்வித இனிமைபொருந்திய அன்பு செலுத்தப் படும்போது கடவுள் புருஷ ஸ்வரூபத்தில் வணங்கப்படு கிறார். இவ்வித லட்சியத்தை ஏற்றுக்கொள்ளும் பக்தன் 'கடவுள் ஒருவரே உலகில் புருஷன் என்று சொல்லத் தகுதி யுடையவர்' என்று நினைக்கிறான். அவருடன் சீர்தூக்கிப் பார்க்கும்போது நாமெல்லோரும் (ஜீவர்களெல்லாம்) ஸ்திரீ களுக்குச் சமம். ஆதலால், உலகில் புருஷன் ஸ்திரீயினிட மும் ஸ்திரீ புருஷனிடமும் செலுத்தும் அன்பெல்லாம் கடவு ளிடமே செலுத்தப்படவேண்டும். உலகில் தோன்றுகிற வெவ்வேறுவித அன்புகளெல்லாம்—நாம் அவற்றோடு அநேகமாக வீண் விளையாட்டுக்கள் விளையாடுகிறோமென்று சொல்லவேண்டும், அவ்வித அன்பெல்லாம்—உண்மையில் ஏகவஸ்துவாகிய கடவுளையே லட்சியமாகக்கொண்டு விளங்கு கிறது. அன்பென்று சொல்லப்படும் இந்த மகத்தான நதிகள் போய்ப் பாய்கின்ற அகண்டமான சாகரத்தின் தன் மையை மனிதன் அறிகிறதில்லை. ஆதலால், அஞ்ஞானத்

தால் சிறு பொம்மைகளாக உள்ள மானிட தேகங்களிடம் அன்பைச் செலுத்த முயற்சி செய்கிறான். குழந்தைகளிடம் செலுத்தப்படும் மகத்தான அன்பு அந்தச் சிறு குழந்தையாகிய பொம்மையினிடம் ஏற்பட்டதல்ல. குருட்டுத்தனமாக அந்தக் குழந்தையினிடம் மாத்திரமே நீங்கள் செலுத்தினீர்களானால், உங்களுக்குக் கஷ்டமே ஏற்படும். ஆனால், இவ்வித கஷ்டங்களின் பயனாக நீங்கள் அறிவை அடைவீர்கள். உங்களிடம் ஏற்படும் அன்பென்ற உணர்ச்சியை எந்த மனிதனிடமாவது செலுத்தினால் உங்களுக்கு எப்போதாவது துக்கமும் துன்பமும் ஏற்பட்டே தீரும் என்று நீங்கள் அறிவீர்கள். ஆதலால், ஒப்புயர்வற்ற ஏகவஸ்துவினிடம் நாம் அன்பு செலுத்தவேண்டும். அந்த வஸ்துவிற்கு மாறுதன்மையுமில்லை, மரணமுமில்லை. அதன் காருண்யக் கடலில் அலையுமில்லை, ஓட்டமுமில்லை. சாந்தமயமாகிய கடலே அது. உண்மையில் அதன் ஸ்வரூபமாகிய அன்பின் சாகரமே கடவுள். ஆதலால் நம்மிடமுள்ள அன்பிற்கும் சரியான எல்லை அல்லது முடிவு அந்தப் பரமபீடமே. மலைச்சரிவுகளில் பளபளப்பாகத் துள்ளியோடும் நீர்த்துளிகள் ஒரு பெரிய நதியைச் சேர்ந்த பிறகுகூட அங்குத் தங்காமல் எவ்வழியாகவோ கடலுக்குப் போய்ச் சேர்கின்றன. அதுபோலவே, நம் ஆசாபாசங்களும் உணர்ச்சிகளும் முடிவில் கடவுள் என்ற ஒரே லட்சியத்தினிடம் போய்ச் சேரவேண்டியவைகளே. ஆதலால், உங்கள் உணர்ச்சிகளையெல்லாம் கடவுளிடமே செலுத்துங்கள்; அவரே அன்பு செலுத்தத்தக்க வஸ்து என்று அறியுங்கள். உங்கள் மனத்திலுள்ள நோக்கங்களை அவர் பூர்த்தி செய்வார். அவரிடம் அன்பின் எவ்வித பாவனையைச் செலுத்தியபோதிலும் உங்கள் மனோரதங்களை அவர் முடிப்பார். அவரிடம் கோபித்துக்கொண்டு அவரைக் கண்டிக்கவேண்டுமென்று தோன்றினால் அவ்வாறே செய்யுங்கள். அவரைத் தவிர வேறெவரையும் கண்டித்துவிட்டு நீங்கள் துன்பமின்றி இருக்க முடியுமா? அநித்தியனாகிய மனிதன் உங்கள்

கோபத்தைப் பொறுமையுடன் தாங்கி நிற்கமாட்டான். அவன் எப்போதாவது சமயம் பார்த்துத் திருப்பிவிடுவான். நீங்கள் என்மீது கோபம் கொள்வதாக வைத்துக் கொள்ளுங்கள். என் பொறுமைக்கு ஒரு எல்லையுண்டு; ஆதலால், உங்கள் கோபத்தை எப்போதும் தாங்க முடியாது. ஆதலால், உங்கள் அன்பனாகிய கடவுளைக் கண்டியுங்கள். "நீயேன் இன்னும் என்னிடம் வரவில்லை. என்னை யேன் இவ்வாறு தனியே நிறுத்திவிடுகிறீர்?" என்று கோபித்துக்கொள்ளுங்கள். அவரிடமில்லாமல் வேறெங்குத்தான் சுகமுண்டு? சிறு மண்கட்டிகளிடத்தில் சுகமிருக்கமுடியுமா? அகண்ட சொரூபானுபவத்தின் சாரத்தையே நாம் தேடிச் செல்கிறோம். அது கடவுளிடம் மாத்திரமே கிடைக்கும். ஆதலால், நம் ஆசாபாசங்களும் உணர்ச்சிகளும் அவரிடமே செல்லட்டும். அவைகள் கடவுளிடமே செல்ல வேண்டும். அந்த லட்சியம் தவறிக் கீழே செலுத்தப்பட்டால் அந்த குணங்கள் இழிவடைகின்றன. கடவுள் என்னும் லட்சியத்தை நோக்கி நேரே செலுத்தப்பட்டால் மிகத் தாழ்ந்த உணர்ச்சிகளும் பரமபதத்தைச் சேர்ந்து அழகு பெறுகின்றன. மானிடதேகம் மனம் என்ற இடங்களிலிருந்து வெளிப்படும் சக்திகள் எவ்வாறு விளங்கிய போதிலும் முடிவில் கடவுளைத்தான் ஏகாயனமாகக் கொள்கின்றன. கடவுளே எதற்கும் ஒப்பற்ற லட்சியம். காம்பீரியமும் அழகும் பொருந்தியது எதுவோ அதுவே பக்தி செலுத்தத்தக்க வஸ்து. வேறு எவரிடம் நம் மனதால் அன்பு செலுத்த முடியும்? அவரைக் காட்டிலும் வேறு எவர் அதிக அழகு பொருந்தியவர்? அவரைக் காட்டிலும் வேறு எவர் புருஷராக வல்லவர்? அவரைவிட வேறு எவரிடம் அன்பு செலுத்தக்கூடும்? ஆதலால், அவரையே மிக்க கணவனாகக் கொள்வோம். இவ்வித பாவனையில் தெய்வ ஸ்துதி செய்யும்போது பக்தர்கள் மானிட அன்பின் பாஷைகளையே உபயோகிக்கிறார்கள் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அந்த உன்னத பக்தியை வேறு விதமாகப் பூரணமாய் வர்ணிக்க முடியவில்லை. இதை

மூடர்கள் அறிவது மில்லை; அவர்கள் அறியவு முடியாது. அவர்கள் ஸ்தூலவிஷய சம்பந்தத்தை மாத்திரமே அறிவார்கள்; ஆத்ம சம்பந்தமான காதல் (அன்பு) இவ்வளவு வெறிகொண்டதென்று அவர்களால் அறிய முடியாது. "உனது உதடுகளால் ஒரே ஒரு முத்தம் கொடு; ஓ அன்பனே! அந்த உதடுகளை முத்தமிட்டால் உன் ஆவேசம் என்னிடம் இனிமையான வெறியை நிரம்புமாறு செய்து விட்டது. ஒரு தடவை அவற்றின் முத்தங்களை அனுபவித்தவன் உன்னை எப்போதும் விரும்புகிறான். அவனுக்கு உன் அதரபானம் வேண்டுமென்ற தாகம் அதிகரிக்கின்றது. அவனது துக்கங்கள் பறந்துபோயின. உலக சம்பந்தமான சிறு காதல்களையெல்லாம் மறந்தே போய்விட்டான்." என்று இவ்வாறு பக்தன் வர்ணிப்பதை யெல்லாம் ஏதோ ஸ்தூல வஸ்து சம்பந்தப்பட்ட பொருளைப்பற்றி யென்று நினைக்கலாகாது. அதைச் சரியாக அறியவேண்டுமானால் காருண்ய மூர்த்தியாகிய அன்பனுடைய அதரபானத்தைப் பருகும் ஆவல் கொள்ளவேண்டும். ஒரு மனிதனைத் தெய்வமாகச் செய்வது எந்த அதரங்களின் ஸ்பரிசமோ அவ்வித ஸ்பரிசத்தில் ஆசை கொள்ளவேண்டும். அவ்வித முத்தம் அடையப்பெற்றவனுக்குப் பிரகிருதி முழுமையும் தன் குணத்தை மாற்றியதுபோலத் தோன்றும். சூரிய சந்திரர்களுடன் கூடிய உலகம் (ஸ்தூல உலகம்) மறைந்துவிடுகின்றது. ஜகத் முழுமையும் ஒரே அன்பின் மயமாக ஆகின்றது. அன்பென்ற வெறியின் பூர்த்தி என்று அந்த நிலையைச் சொல்லிவிடலாம்.

உண்மையான ஆத்மபக்தியுள்ளவன் இவ்வளவுடன் நிற்பதில்லை. தம்பதிகளுக்குள் ஏற்படும் அந்நியோன்ய அன்புகூட அவனுக்குப் போதவில்லை. அவன் கள்ளக் காதலையே தன் லட்சியமாகக் கொள்கிறான். இதன்கண் ஏற்படும் உணர்ச்சி மிகமிகப் பலம் பொருந்தியதா யிருக்கிறது. இது தகாத காரியமென்பதுகூட அவன் திருஷ்டிக்கு விளங்குவதில்லை; அதை அவன் லட்சியமாக்கவில்லை,

அவ்வித காதலினிடம் உள்ள சக்தியும் அழுத்தமுமே அவனுக்குத் தேவையாகின்றன. கள்ளக் காதலின் தன்மையே ஒரு விசித்திரம் பொருந்தியது. எவ்வளவுக் கெவ்வெளவு இடையூறுகள் அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு காதலும் பல மடைகிறது. தம்பதிகளுக்குள் ஏற்படும் அன்பு (காதல்) இலகுவாக இருக்கிறது. அது வளர்வதற்குப் பல இடையூறுகள் கிடையா. ஆதலால், அது சாந்தமாக ஏற்பட்டுவிடுகிறதென்று பக்தன் அதைத் தள்ளிவிடுகிறான். பிறகு ஒரு பெண் தன் கள்ளப் புருஷனிடம் கொள்ளும் காதலைத் தன் லட்சிய மாக்கிக்கொள்கிறான். நாள்தோறும் இவள் காதல் பலமடைந்துவர மாதாபிதாக்களும் இவள் புருஷனும் மற்றுமுள்ள பந்துக்களும் இடையூறுகள் செய்துகொண்டே வருகிறார்கள். கோபிகள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் கொண்டுள்ள அன்பை வர்ணிக்கும்போது ஸ்ரீமத் பாகவதத்தை இயற்றியவர் இவ்வித அன்பின் பாவனையைத்தான் லட்சியமாக்கியிருக்கிறார். அவரிடம் செலுத்திய அன்பின் மிகுதியால் அவர்கள் திவ்ய ஞான மடைந்து அவரே ஜகத் கர்த்தாவென்று அறியலானார்கள். பிருந்தாவனத்தில் கோபிகள் எவ்வித வெறியுடன் ஸ்ரீகிருஷ்ணனிடம் காதல் செலுத்தினார்கள் என்பதை மானிட வாக்கால் வர்ணிக்க முடியாது. அவரது குரல் கேட்டவுடன் பகவானால் ரட்சிக்கப்பட்ட கோபிகள் அவரைச் சந்திக்கப் போட்டி போட்டுக்கொண்டு இவ்வுலக பந்தங்களையும் கடமைகளையும் சுகதுக்கங்களையும் மறந்தவர்களாய் ஓடிய விந்தைதா னென்னே?

மானிடனே! திவ்ய சொரூபமான அன்பைப்பற்றி நீங்கள் பேசிவிட்டு இவ் வுலகத்து வீண் டாம்பீகங்களையும் கவனிக்கச் சக்தியுள்ளவரா யிருக்கிறீர்களே! நீங்கள் உண்மையில் சிரத்தையுள்ளவர்களேயோ? "ராமனிருக்குமிடத்தில் இச்சைகளுக்கு இட மில்லை. இச்சை சிறிதேனுமிருக்குமிடத்தில் ராமனுக்கு இட மில்லை. ஒளியும் இருட்டும்போல் இந்த இரண்டும் சேர்ந்து நிற்பதில்லை."

பத்தாவது அதிகாரம்

ஏகத்துவமே முடிவு

உன்னதமான அன்பின் லட்சியம் அனுபவிக்கப்பட்டவுடன் தத்துவசாஸ்திரம் தேவையில்லை. ஆமாம்! அப்போது அதை யார் லட்சியம் செய்வார்கள்? சுதந்திரம், முக்தி, நிர்வாணமிவையாகிய எல்லாம் அற்பமானவைகளென்று தள்ளப்படுகின்றன. அவ்வித தேவாமிருதம் போன்ற அன்பென்னும் ஆநந்தத்தில் மூழ்கியிருக்கும் போது யார்தான் சுதந்திரமடைய விரும்புவார்? "கடவுளே! எனக்குத் தனம் தேவையில்லை; நண்பர்களும் தேவையில்லை; அழகும் வித்தையும் சுதந்திரமுங்கூடத் தேவையில்லை; அநேக ஜன்மங்கள் உண்டாகட்டும்; ஆனால், என் அன்பனாக நீ யிருப்பாய்." ஆமாம்! எப்போதும் நீயே எனக்கு இனிய துணைவனா யிரு. அதன் பிறகு நாம் எதை விரும்பவேண்டும்? "சக்கரையாகவே தான் ஆவதற்கு எவர் விரும்புவார்?" என்று பக்தன் சொல்கிறான். "நான் சர்க்கரையின் ருசியை உணரவேண்டும்." என்பான். ஆநந்தமயமாகிய கடவுளின் இனிமையை நான் அனுபவிக்கவேண்டும். ஆமாம்! கடவுளுடன் ஒன்றுபட்டுச் சுதந்திர மடையவேண்டுமென்று அந்த நிலையிலுள்ள எவர்தான் விரும்பமுடியும்? "நானே அவன் என்ற அனுபவ அறிவு எனக்கு ஏற்பட்டிருக்கலாம்; ஆனால், நான் அவனை விட்டு வேறாகி அன்பனை அனுபவிப்பேன்" என்று பக்தன் சொல்லுவான். பிரதிபலன் வேண்டாமல் அன்பு செலுத்தும் ஆநந்தமே மிக உன்னதமானது, அன்பின் சொரூபத்தை அனுபவிக்க ஆயிரம் ஜன்மங்கள் எடுத்துச் சரீர பந்தங்களையும் மற்றை பந்தங்களையும் ஏற்றுக்கொள்ள விரும்புகிறான். அன்பு செலுத்தி அதையே தான் அனுபவிப்ப

தைத் தவிர வேறெதையும் பக்தன் விரும்பவில்லை. உலக சம்பந்தமற்ற அவனது அன்பின் பெருக்குச் சாமான்ய நதியின் பெருக்கை எதிர்த்து மோதுகிறது. உலக வாழ்க்கையிலுள்ளவர்கள் அவனைப் பைத்திய மென்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவரை நானறிவேன். உலக ஜனங்கள் அவரைப் பைத்தியமென்று சொன்னபோது, அவர், "நண்பர்களே! உலகமுழுவதுமே பைத்தியக்காரர் நிரம்பிய இடம். இங்குச் சிலர், பெண்களின் காதலுக்கு வெறிகொண் டலைகிறார்கள். சிலர், பெயர் பெற்று விளங்கவேண்டுமென்று வெறி கொள்கிறார்கள். மற்றும் சிலர், புகழுக்காகவும்; வேறு சிலர், தனத்திற்காகவும்; வேறு சிலர், சுவர்க்கம் புகவேண்டுமென்றும், முக்தியடைய வேண்டுமென்றும் வெறி கொள்கிறார்கள். நான் கடவுளைத் தேடுவதில் வெறி கொள்கிறேன். நீ தனவெறி பிடித்தலைந்தால், நான் கடவுள் வெறி பிடித்தலைகிறேன். நீயும் பைத்தியம், நானு மப்படியே. எனது பைத்தியமே மிகச் சிறந்ததென்று நான் நினைக்கிறேன்." என்று பதில் கூறினார். இவ்விதம் எரிகின்ற வெறியுடன் கூடியதே உண்மையான பக்தனது வெறியாகும். இந்த வெறியின்முன் வேறெந்தப் பற்றும் அவனுக்கு இல்லையாகின்றது. ஜகத் முழுமையுமே அவனுக்கு அன்பின் சொரூபம். அன்பு மாத்திரமே அவனுக்கு எங்கும் காணப்படுகிறது. இவ்வித அன்பு ஒருவனிடம் ஏற்பட்டவுடன் அவன் நித்திய சந்தோஷியாகி எப்போதும் அனுக்கிரகிக்கப் பட்டவனாகிறான். தெய்வ சக்தியுடன்கூடிய இந்தப் பைத்தியம் ஒன்றே உலகத்தின்கண் சிறு விஷயங்களிடம் ஏற்படும் காமத்தையெல்லாம் போக்கி ஜீவனைச் சொஸ்தமடையச் செய்யும் சக்தி பொருந்தப்பெற்றிருக்கிறது.

அன்பென்ற மதத்தில் நாமெல்லோரும் துவைதிகளாக ஆரம்பம் செய்யவேண்டும். அப்போது நமக்குக் கடவுள் நம்மினும் வேறான புருஷர், நாமும் தனித்தனி வேறான மனிதர்களே யாவோம். இப்போது இடைவெளிகளை நிரப்ப அன்பு தோன்றுகிறது. அதன் பயனாக மனிதன் கடவுளை

009510

நோக்கிச் செல்கிறான்; கடவுளும் இவனிடம் நெருங்கிக் கொண்டே வருகிறார். அப்போது மனிதன் தன் வாழ்க்கையிலேற்படும் உறவுகளாகிய பிதா, மாதா, புத்திரன், நண்பன், எஜமானன், காதலன் முதலிய பாவனைகளை ஏற்று அவற்றைக் கடவுளாகிய தன் அன்பின் லட்சிய வஸ்துவிடம் செலுத்துகிறான். கடவுள் அப்போது அவனுக்கு இவ்வித சொரூபங்களுடன் விளங்குகிறார். முடிவில் தான் வணங்கிய கடவுளுடன் இவன் பரிபூர்ணமாகக் கலந்துவிட்டவுடன் கடைசி நிலை ஏற்பட்டுவிடுகிறது. இவ்வாறு நாமெல்லோரும் முதலில் தன்னலமிக்க அன்புடன் ஆரம்பம் செய்து நம்மையே இச்சித்துக் கொள்கிறோம். அப்போது இந்தச் சிறு அகம் தகாத இச்சைகளையெல்லாம் கொண்டுவந்து அன்பையும் தன்னலமிக்கதாகச் செய்துகொள்கிறது. ஆனால், முடிவில் அன்பென்ற ஜோதியின் பூரண ஒளியும் தோன்றிச் சிறிய அகம் பாவனையைக்கூட அகண்ட சொரூப அன்புடன் ஒன்றுபடுமாறு செய்துவிடுகிறது. இவ்வாறு அன்பென்ற ஜோதி முன் மனிதன் மாறுதலையடைகிறான். தன் ஹிருதயத்தில் அநேகமாகக் குடிகொண்டிருந்த அழுக்குகளையும் வீண் இச்சைகளையும் பரிசுத்தம் செய்து ஏகத்துவ நிலையை அறிந்து அனுபவிக்கிறான். அன்பு, அன்பு செலுத்தியவன், செலுத்தப்பட்டவன் ஆகிய எல்லாம் ஒன்றே என்ற அழகிய உண்மை அவன் முன் தோன்றிவிடுகிறது.

பக்தி யோகம்

முற்றுப் பெற்றது.

Printed at the Guardian Press, 153-5, Broadway, Madras.

மாதர்களுக்கோர் சிறந்த பொக்கிஷம் வெளியாய்விட்டது!

புதிய பதிப்பு! **மாதர் நீதி** புதிய பதிப்பு!!

[மூன்று பாகங்கள்]

நூதன முறையின்படி திருத்தி அமைக்கப்பெற்ற
அழகிய 5-ம் பதிப்பு விலை ரூபா 1.
பெதர்வெயிட் பேபரில் அச்சிட்டு டக்ஸின் பயிண்டு ரூ. 1-8.

1. பள்ளிக்கூட முறைமை, 2. வீண் காலப்போக்கு, 3. துர் அப்பியாசங்கள், 4. உண்மை, 5. கீழ்ப்படிதல், 6. திருட்டுத்தனம், 7. வேடிக்கைப்பார்த்தல், 8. பரிசுத்தம், ஆக 8-வியாசங்கள், 6-கதைகள் அடங்கியிருக்கின்றன.

1. விவாகம், 2. நித்தியக்கடன்கள், 3. இல்வாழ்க்கை, 4. ஒற்றுமை, 5. கற்பு, 6. நற்குணம், 7. வீண்செலவு, 8. பிள்ளைகளைப் பயிற்றல், 9. விருந்தினரை உபசரித்தல், 10. உபகாரம், 11. பொறுமை மேன்மைப்படுத்துமென்பது, 12. பரக்கூறல் இகழ்ச்சியென்பது, 13. சண்டை பிடித்தல் பத்தியீனமென்பது, 14. பரபுருஷரை இச்சித்தல் மகாகொடியதென்பது, 15. விபசாரிகளின் முடிவு, 16. சோம்பல் கேட்டைத்தருமென்பது, 17. அடக்கம், 18. பொறுமை தரித்திரத்தை யுண்டாக்குமென்பது, 19. சுற்றத்தாருக் கிணங்க நடத்தல், 20. பேராசை பெருநஷ்டமென்பது, 21. துன்மார்க்கபுருஷரை சன்மார்க்கத்தில் திருப்புதல், 22. மனைவியின் புத்தியினால் கணவனுக்கு நேரிட்ட ஆபத்து நீங்கியது (அதாவது, கணவருக்குச் சமயத்தில் தக்க போதனை சொல்லிக் காப்பாற்றுதல்), 23. பெண்பிள்ளைக் கல்வியின் உபயோகம், ஆக 23-வியாசங்கள், 12-கதைகள் அடங்கியிருக்கின்றன.

1. முதுமையில் ஸ்திரீகளுக்குண்டாகும் துர்க்குணங்கள், 2. ஸ்திரீகள் தம் மருமக்கள்மாருக்குச் செய்யும் கொடுமைகளும் அவற்றின் விளைவும், 3. ஸ்திரீகள் தங்கள் மருமக்கள்மாரை நடத்தவேண்டிய நல்வழிகள், 4. ஸ்திரீகள் முதுமையில் கவனித்து நடக்கவேண்டிய முறைமைகள், 5. ஸ்திரீகள் முதுமையில் தம் புத்திரருக்கு அடங்கியிருக்கவேண்டுமென்பது, ஆக 5-வியாசங்கள் அடங்கியிருக்கின்றன.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் (P. O.), சென்னை.